

KALKI 17.12.95
ரூ. 3.00
கல்கி
ஜெயிப்போமா?

SSS பிராண்ட்

அழகு! தூய்மை!! நறுமணம்!!!

✸ சுத்தமான சூழ்நிலை ✸ சுத்தமான வாழ்க்கை

துர்வாடை வீசும் அறைகள் தூய நறுமணம் கமழ	SSS	ரூம் ஃப்ரெஷ்னர்
மங்கிய வாகனங்கள் புதுப்பொலிவுடன் திகழ	SSS	கார் கிளீனிங்க லிக்யுட்
பழுப்பேறிய துணிகள் புதியனம் போல் தோற்றமளிக்க	SSS	ஈஸி வாஷிங் லிக்யுட்
கறைபடிந்த பாத்திரங்கள் பளிச்சென்று மின்ன	SSS	டிஷ் கிளீனிங் லிக்யுட் கிளீனிங் லிக்யுட்
அழுக்கான குளியலறை அழகோடு மிளிர	SSS	டாய்லெட் கிளீனிங்க லிக்யுட் ஒய்ட் ஃபினாயில் & ஃபினாயில்
மங்கலான தரைகள் தங்கம்போல் ஒளிர	SSS	ஃப்ளோர் கிளீனிங்க லிக்யுட்



புதிய ஃபார்முலா!

உயர்ந்த தரம்!!

உபயோகமுள்ள பாட்டில்கள்!!!

எல்லா கடைகளிலும் கிடைக்கும்



தயாரிப்பாளர்கள் :

M/s.வினயா ப்ரொடக்ட்ஸ்

ஜி-10, நெ.30,31, தியாகராயா கிராமணி தெரு, தி.நகர், சென்னை - 600 017. 8267668, 8283211



7.1.96 கல்கி இதழிலிருந்து....
உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ள வருகிறாள் இந்தக் கதாநாயகி.
வண்ணத்துப் பூச்சியாய் பிரகாசிக்கும் இந்த வசீகர முகத்தின் சொந்தக்காரி யார்?
அறிமுகம் அடுத்த இதழில்....


நெல்லை துணுக்ஸ் நெல்லை துணுக்ஸ்

"சாலையிலே போறவரே, சந்திரரே என் கொழுந்தா...!"

என்ன சொல்லிக் கூப்பிடுவாள்?

நாடோடிப் பாடல்களுக்குப் பெயர்பெற்றது திருநெல்வேலி மாவட்டம்.

ஒரு பெண் சுள்ளி ஒடித்துக் கட்டித் தூக்கிவிட ஆள் பார்த்தாள். அப்போது அந்த வழியாக அவள் கொழுந்தன் போய்க் கொண்டிருந்தான். அவன் கல்



லூரியில் படித்தவன். எப்படிக் கூப்பிடுவதென்று இப்படிப் பாடுகிறாள் :

'சாலையில போறவரே
சந்திரரே என் கொழுந்தா
இங்கிலீசு படிக்கப் போயி நான்
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?'

குருவி, கழுகு, வானரம், ஆடு

கண்டக்டர் இன்வாய்ஸ் சொல்ல டிரைவர் எழுதுவார். சங்கரன்கோயிலிலிருந்து கோயில் பட்டி செல்லும் பஸ்ஸை ஓரிடத்தில் நிறுத்தி விட்டு 'நாலு குருவி, பத்துக் கழுகு, எட்டு வானரம், அஞ்சு ஆடு' என்று கண்டக்டர் சொல்லுவார். அந்த பஸ்ஸில் புதிதாகப் பயணம் செய்பவர்கள், பறவை விலங்குகள் பெயரைச் சொல்கிறாரே என்று அதிசயப்படுவார்கள். குருவிகுளம், கழுகுமலை, வானரமுட்டி, நாலாட்டின்புத்தூர் என்ற ஊர்கள் இடையில் வரிசையாக இருக்கின்றன. அந்த ஊர்களின் பெயரைத்தான் இப்படிச் சுருக்கி, டிக்கெட் எடுத்த நபர்களின் எண்ணிக்கையையும் சொல்லுவார் கண்டக்டர்.

- ஆதினமிளகி வீரசிகாமணி

மத ஒற்றுமைக்கு ஓர் ஊர்!

நெல்லை மாவட்டம் ஊத்துமலையை அடுத்த ருக்மணியம்மாள் புரம் என்ற கிராமத்தில் ''கான்ஸா சாஹிப்'' என்ற ஒரு சிறிய பள்ளி வாசல் உள்ளது. இதன் கொடியேற்றம், பண்டிகையை நடத்துவது இந்துக்களே. முஸ்லிம் பெருமக்களும் வெளியூரிலிருந்து வந்து கலந்து கொள்கிறார்கள். இவ்வூரில் முஸ்லிம்களே கிடையாது. இவ்வூரில் உள்ளவர்கள் கான்ஸா சாஹிப்பின் பெயரைத் தங்களது குழந்தைகளுக்கு (காசிப் பாண்டியன் - காசித்தாய்) என்று பெயர் சூட்டிக் கொள்கிறார்கள். இதல்லவா மத ஒற்றுமை!

- 'வில்லங்கம்',
சங்கரன்கோவில்.

வெளிச்சம் வந்தாலும் வசூலித்து விடுவார்!

தணிந்த, மிகச் சிறிய ஜன்னல்கள் கொண்ட வாடகை வீடு. இதனால் வீட்டினுள் வெளிச்சமும், காற்றும் கூடத் தயங்கித் தயங்கித்தான் நுழையும். மின்விளக்கின் உதவியின்றி ஒரு வேலையையும் செய்ய முடியாது. ஆனால் வீட்டின் சொந்தக்காரரோ, வாடகையை உயர்த்துவதில் கறாராக இருப்பாரேயொழிய, குறைகளைக் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டார், நமது அரசியல் வாதிகளைப் போல. ஒருநாள் வாடகை கொடுத்தவுடன், எனது தங்கை, "காத்தெல்லாம் ஏன் வர மாட்டேங்குது தெரியுமா?" என்று கேட்டுவிட்டுச் சிறிது இடைவெளி கொடுத்து,"வந்தால் அதுட்டயும் வாடகை கேட்பார், அதனால்தான்!" என்று கூறவும் வீட்டுக் கஷ்டத்தை மறந்து சிரித்தோம்.

- லம்போதரன், திருவண்ணாதபுரம்.

சிவப்பு மல்லி

நெல்லை மாவட்டத்தில் சாகுபடி ஆகும் ஒரு நெல்வகையின் பெயர் 'தூயமல்லி'. பெயரைப் பார்த்து, வெள்ளை வெளேர் அரிசி என்று நினைக்க வேண்டாம். சிவப்பாக இருக்கும்! இது ஆச்சர்யம்தானே!

– சி. அழகப்பன், வி. கே. புரம்.

தினம் தீபாவளி

தீபாவளிக்கு வெடித்தன
நிஜ குண்டுகள்
குருதிப்புனலாய் ஆனது நெல்லை
மக்கள் ஆட்சிதான்
நடக்கிறதா இங்கே?
ரகசிய போலீஸ் கொண்டு
ஒடுக்க முடியுமா?
முத்தான வாழ்க்கை
மீண்டும் கிடைக்குமா?

– மீனா சுரேஷ், நெல்லை – 1.

உருட்டுநர்

நெல்லை டவுனிலிருந்து ஜங்ஷனுக்கு டவுன் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். கண்டக்டர், டிக்கெட் போடுவதற்காக வண்டியை மெதுவாக விடச் சொன்னார். மிக மெதுவாக வண்டி ஊர்ந்து கொண்டிருந்ததால் எரிச்சல் அடைந்த ஒரு பயணி, "இவர் ஓட்டுநர் இல்லை, உருட்டுநர்" என்றாரே பார்க்கலாம்!

அல்வா காலி!

சில மாதங்கள் முன்பு இங்கே இஸ்லாமியரின் 'தப்லீக் இஜ்திமா' மாநாடு மூன்று நாட்கள் நடைபெற்றது. மாநாட்டுக்கு வந்திருந்த பல லட்சக்கணக்கான மக்கள், மாநாடு முடிந்ததும் ஒட்டுமொத்தமாக அல்வாக் கடைகளை மொய்த்துக் கொண்டுவிட, அன்றைய தினசரிகளில் இதுதான் டாப் நியூஸ். 'அல்வா இல்லாத திருநெல்வேலி' என்று தலைப்பிட்டு கட்டம் கட்டிப் பிரசுரித்து விட்டார்கள்.



திறந்தவெளி நூலகம்

வடக்கு வள்ளியூரில் ஒரு கிளை நூலகம் உள்ளது. இந்நூலகத்துக்கு உள்ளே நுழைந்து விட்டால் கூட வானத்தைப் பார்க்கலாம், வெயிலை உணரலாம், மழையில் நனையலாம்! அத்தனை பரிதாபகரமான கட்டடம்! புறாக்களும் பூச்சிகளும் கூட இந்நூலக உறுப்பினர்கள். பல நல்ல புத்தகங்களுடன், ஒழுங்காக இயங்கி வரும் இந்நூலகத்தின் கட்டடத்தை சீராக்க, அரசு முயற்சி எடுத்தால் வெகு உபயோகம்.

– பாளை பசும்பொன், நெல்லை – 11.

லேபிள் உத்தி

என் நண்பனுக்கு, பினாயில் தயாரித்து விற்கிற வியாபாரம். லேபிளில், 'தயாரிக்கும் இடம் திருநெல்வேலி' என்று குறிப்பிட்டிருந்ததால், லோக்கல் சரக்கு என்று அவ்வளவாக வியாபாரம் சிறக்கவில்லை. பார்த்தான். வேறு ஒரு நண்பரின் ஆலோசனைப்படி, கவர்ச்சியான புதிய பெயரோடு, பம்பாய் அட்ரஸோடு ரெடிமேடாகக் கிடைக்கக் கூடிய லேபிள்களை ஒட்டி மார்க்கெட்டுக்கு அனுப்பினான். அமோக வியாபாரம்! எப்படி எங்கள் ஊர்?

– ஆர். ஸ்வர்ணசுபா, நெல்லை – 11.

'கன்னி'ச்சேரி

பாப்பாகுளம், இளம்புவனம், கன்னிச்சேரி, கிழவிப்பட்டி, கிழவனேரி... மனிதனின் வெவ்வேறு பருவத்தைக் குறிக்கும் இவ்வூர்கள் இருப்பது நெல்லையில்தான்!

வம்பு

விக்கிரமசிங்கபுரத்தில் ஒரு தெருவுக்கு 'வம்பளந்தான் பாறைத்தெரு' என்று பெயர்.

இவ்வூரிலுள்ள பாறை போல் மேடான பகுதியில் மாலை நேரங்களில் அரட்டைக் கச்சேரி நடக்கும். அந்த இடத்தை வம்பளந்தான் பாறை என்று சொல்லி வந்தார்கள். காலப் போக்கில் அத்தெருவுக்கும் அதுவே பெயராகி விட்டது!

– ஆர். ஏ. சரளா, விக்கிரமசிங்கபுரம்.

1000 வகை ஊறுகாய் செய்யும் அபூர்வ உஷா!

வெந்தய ஊறுகாய் சாப்பிட்ட துண்டா...?

சும்மா 'ரீல்' விடவில்லை... உண்மை யிலேயே இருக்கிறது வெந்தய ஊறுகாய்...! இன்னும் அபூர்வ காய், கனி, கிழங்கு இலை ஊறுகாய்களின் செய்முறை கம்ப்யூட்டரில் ஏற்றப்பட்டுக் காத்திருக்கிறது - உஷா வீட்டில்.

"மேலும் பல ஊறுகாய் வகைகளின் செய்முறைகளைச் சேகரித்து வருகிறேன். எண்ணிக்கை ஆயிரத்தைத் தொட்டதும் அவற்றைத் தொகுத்து, புத்தகமாக வெளி யிடப் போகிறேன் - அயல்நாடுகளுக்கென்று உயர்ரகக் காகிதத்தில் புத்தகம்; இந்தியப் பெண்களுக்கு மலிவுப் பதிப்பு..." என்கிறார் உஷா.

டேஸ்டுக்கு அவர் கொடுக்கும் ஊறு காயைச் சுவைத்தால்... ஆஹா! அடிக்கும் கொள்ளும் ருசி!

"கேடரிங் காலேஜ்ல கத்துக்கிட்டீங் களா...?"

"ம்ஹூம்... நான் பி.ஏ., பி.எல்...!" என்று ஆரம்பித்து உஷா சொன்ன கதை, ஊறுகாயை விட சுவை:

"எங்க அப்பாவுக்குத் தமது இரண்டு பெண்களுமே ஐ.ஏ.எஸ். படிக்கணும்னு ஆசை. பாதி ஆசையை என் சகோதரி நிறைவேத்தி வைச்சா (சகோதரி ஷீலா ராணி சுங்கத் - முன்பு சென்னை கலெக்டர், இப்போது இந்திய மக்கள் தொகைக் கணக் கெடுப்புத் திட்டம் - 5-ன் டைரக்டர்).

எனக்கு அதில் அவ்வளவாக ஈடுபாடு இல்லை. காரணம் பிரபாகரன். டிகிரி முடித்து நான் சட்டக் கல்லூரி சேர்ந்த போது அங்கு அவரைச் சந்தித் தேன். ஐ.ஏ.எஸ்ஸில் தேர்வாகி விட்டால் அவரைப் பிரிய றுமே... அதனால் ஏதோ பேருக்குப் பரீட்சை எழுதி ஃபெயில் ஆனேன்.

"அப்புறம் கல்யாணம் ஆயிற்று. அவர் வீட்டில் பயங்கர எதிர்ப்பு. பேச்சு வார்த்தையே இல்லாமல் போயிற்று. வக்கீல் தொழில் பிடிக்காததால், தனியார் நிறுவனங்களில் சட்ட ஆலோசகராக இருந்து வந்தேன்... குழந்தை பிறக்கும் வரை.

"குழந்தை பிறந்த பிறகு புகுந்த வீடு சுமுகமாகிவிட்டது. மாமியாருடன் பழகிய போது அவரது ஊறுகாய்த் திறமை மலைக்க வைத்தது. வீட்டுக்கு வரும் அத்தனை நபர்களும், சாப்பிட்டு முடித்தவுடன் பேப்பர் பேனா எடுத்துக் கொண்டு ஊறுகாய் தயாரிப்பு முறையைக் குறித்துக் கொள் வார்கள். எனக்கும் ஆர்வம் உண்டாகி அதி கரித்தது. அதே சமயத்தில் வேறு வேலைக் குப் போகும் நாட்டமும் குறைந்தது. முழுக்க முழுக்க ஊறுகாய் ஆர்வம் பிடித்துக் கொண்டது. எல்லா செய்முறைகளையும் மாமியாரிடம் கற்றுக் கொண்டேன்."

வியாபார ரீதியிலான ஊறுகாய் தயாரிப்பில் உஷா இன்னும் இறங்கவில்லை.

"சரிப்பட்டு



வெந்தய ஊறுகாய் செய்முறை :

முளைவிட்ட வெந்தயம் - 100 கி.
கெட்டியான புளித்தண்ணீர் - 250 மி.லி.
மிளகாய்ப் பொடி - 10 டீஸ்பூன்
மஞ்சள் பொடி - 2 சிட்டிகை
உப்பு - 6 டீஸ்பூன்
எண்ணெய் - 200 மி.லி.
வெல்லம் - 1½ டீஸ்பூன்
பெருங்காயம் - 2 சிட்டிகை

ஒரு கிண்ணத்தில், வெந்தயத்தை ஊறப் போடவும். இரவு ஊறியதும் தண்ணீரை வடிகட்டி, அப்படியே இரண்டு நாள் வைத்திருந்தால், முளைவிடும். மூன்றாம் நாள், ஊறுகாய் போட முடியும்.

அடிகனமான வாணலியில் எண்ணெய்யைக் காய்ச்சி, கடுகைப் போடவும். கடுகு வெடிக்கும் போது, கருவேப்பிலையைப் போட்டு, மொறு மொறு பதத்துக்கு வறுக்கவும். உடனே முளை விட்ட வெந்தயத்தைப் போட்டு, இரண்டு நிமிடம் காத்திருக்கவும்.

முளைவிட்ட வெந்தயம், சுருங்கத் தொடங்கும் போது, புளிக்குழம்பு, மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, உப்பு போடவும்.

நன்கு கிளறி, திடமான பதத்துக்கு வந்தவுடன், வெல்லம் சேர்த்து, தீயைக் குறைக்கவும். வாணலியில் ஒட்டாமல் இருக்க கரண்டியால் கிளறிக் கொண்டிருக்க வேண்டும். சிறிது நேரத்தில் எண்ணெய் தனியே பிரியும். அப்போது பெருங்காயம் சேர்த்து, இறக்கி வைக்கவும்.

வரவில்லை... நான் ரொம்ப சுத்தம் பார்க்கிறவள். ஒரு ஆவக்காய் ஊறுகாய்



போடுவதானால் கூட நானே மார்க்கெட்டுக் குப் போய் மாங்காய்களைப் பொறுக்கி வாங்கி, நானே சுத்தம் செய்து, நறுக்கி தயாரித்துப் பழகி விட்டேன். உதவியாளர்களை நெருங்க விடுவதற்குப் பிடிக்க வில்லை" என்கிறார்.

"ஆனாலும் ஊறுகாயை" என்னால் மறக்க முடியவில்லை. அதனால்தான் செய்முறைகளைத் தொகுத்து புத்தகமாக்கிக் கொண்டிருக்கிறேன்... அதுவும் தராசு கொண்டு நிறுத்து, பொருள்களைக் கலந்து, நானே செய்து பார்த்து திருப்தியடைந்த பிறகுதான் புத்தகத்துக்கு ஒரு குறிப்பை ஏற்கிறேன்."

"என்னதான் அபூர்வமான செய்முறைகளைக் கூறினாலும் ஆயிரம் வகை ஊறுகாய்களா....?" என்று உஷாவிடம் கேட்டால் அதற்கும் பதில் வைத்துள்ளார்.

"நம் நாட்டில் விதவிதமான காய், கனி, கிழங்கு, இலை வகைகள், காரத்துக்குப் பச்சை, சிவப்பு, ஊசி மிளகாய் மற்றும் மிளகு, புளிப்புச் சுவைக்கு புளி, எலுமிச்சைச் சாறு, வினிகர், மாங்காய் மற்றும் தயிர், எண்ணெய்யிலோ தேங்காய் எண்ணெய், ரிஃபைண்ட் ஆயில், கடுகெண்ணெய் கடலெண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் கூட... இவற்றையெல்லாம் விதவிதமான காம்பினேஷன் களில் கலப்பதுதானே ஊறுகாய்....? இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில தலைமுறைகளாகச் செய்யப்பட்டு வரும் பாரம் பரிய ஊறுகாய்களின் விவரங்களைச் சேகரித்து வருகிறேன்...."

ஊறுகாய் கிளப் ஆரம்பித்து பெண்களுக்குப் புதுப்புது ஐட்டங் களை அறிமுகப்படுத்தப் போகி றாராம் உஷா. சப்புக்கொட்டிக் கொண்டு ஓடி வரும் கூட்டத்தைச் சமாளிப்பது அவர் சாமர்த்தியம்!

சந்திப்பு :
எஸ். சந்திரமௌலி
வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**


அடக்கமாக அழகாக ஒரு ஃபிளாட் வேணுமே!
சொந்த வீடு வேணும்னு ஆசைதான். ஆனால், மொத்த பணமும் கொடுக்க முடியாதே...
எங்க குடும்பம் பெரிசு... கொஞ்சம் பெரிய ஃபிளாட்டா வேணுமே...?
ஃபிளாட்தான் என்றாலும் அழகாக இருக்க வேண்டாமா?
நேரத்தோட எந்த பில்டர்ஸ் முடித்துத் தராங்க......?
தரமான கட்டமைப்புன்னு நம்பி வாங்க முடியுமா?



இவரது அரட்டை அரங்க விழாவில்





இவர்களது அட்டாக் அரங்கம்!

"விசுவின் அரட்டை அரங்கம் நேரத்தில் நீ புரோகிராம் நடத்தினால் நான் பார்க்கவே மாட்டேன் என்றார் என் அம்மா. என் மனைவி ஒரு படி மேலே போய், நீங்க விசு அரட்டை அரங்கம் நடத்தற நேரத்துல புரோகிராம் போட்டா யாருமே பார்க்க மாட்டார்கள் என்றாள். விசுவின் அரட்டை அரங்கத்துக்கு அத்தனை வரவேற்பும் ஆதரவும் பரவலாகக் கிடைத்ததற்கு, மக்களை நிறையப் பேச விட்டு, அவர் குறைவாகப் பேசுவதுதான். நானும் அப்படித்தான் என் நிகழ்ச்சியை அமைக்கணும் என்று பார்க்கிறேன். ஆனால் நானே நிறையப் பேசி விடுகிற மாதிரி ஆகிவிடுகிறது" என்றார் சோ, விசுவின் அரட்டை அரங்க நிகழ்ச்சிக்காக வாணவில் பண்பாட்டு மையம் நடத்திய பாராட்டு விழா கருத்தரங்கத்தில்.

சிவசங்கரியின் 'நேற்று-இன்று-நாளை' நிகழ்ச்சியும் பார்வையாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றதாகக் குறிப்பிட்ட போது, "பெண்களுக்கு நான் கிரெடிட் கொடுப்பதில்லை!" என்றார் சோ வெடுக்கென்று!

தொலைக்காட்சி ஹெச். ராமகிருஷ்ணன், "சோ மெய்மறந்து பேசுகிறார். அவரோட அம்மாவும், மனைவியும் என்ன ஆண்களா?" என்று ஒரு டைரக்ட் 'அட்டாக்'கில் ஆரம்பித்தார். (சோ கொதிப்பு+சிரிப்பு). "சாட்டிலைட் சானல்கள் ஆகாயத்தில் இருக்க, நாங்கள் மட்டும்தான் down to earth - ரொம்ப யதார்த்தமானவர்கள்" என்றார் ராமகிருஷ்ணன். அத்தோடு சும்மா இருந்திருக்கலாம். "அன்னியப் பத்திரிகைகள் இங்கே வந்தால், இங்கே இருக்கிற பத்திரிகைகளை இழுத்து மூட வேண்டியதுதான். ஆனால் நாங்கள் CNN, Star எது வந்தாலும் தாக்குப்பிடிப்போம்" என்றார். "ஆகா, பம்பாய் நடுரோட்டில் நடமாடும் மாடுகளை நீங்கள் கூட்டுறவு வைத்துக் கொண்ட CNN படம்பிடித்துக் காட்டிய போது எழுந்த ஆட்சேபத்துக்கு பார்லிமெண்டில் மன்னிப்புக் கேட்டீர்களே! அந்த லட்சணம் தெரியாதா?" என்று சோ பதிலடி. "பத்திரிகைக்காரர்களுக்கு ஏது சுதந்தரம்? ரிப்போர்ட்டர் எழுதுவதை அப்படியே பிரசுரிக்க முடியுமா?" - ஹெச். ராமகிருஷ்ணன்.

"எஸ்.ஆர்.பி. ஏதாவது பேசினாரா? குறைந்த பட்சம் எழுந்தாவது நின்றாரா? அதைச் சொல்லுங்கள் முதலில்!" என்று நீங்கள் மிகவும் சிரமப்பட்டு சுதந்திரமாக நியூஸ் சேகரிப்பது எங்களுக்குத் தெரியாதா?" என்று தூர்தர்ஷன் நியூஸுக்கு ஒரு பதிலடி கொடுத்தார் சோ. சோவுக்கு இப்படி ஓர் ஆவேசம் வந்து யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்.

- எஸ்.வி.என்.

● புது தில்லியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக தில்லியின் தெருக்கள் எதுவும் சாதாரண பொது மக்கள் உபயோகத்துக்கு இல்லை என்ற அளவுக்கு ஆகிவிட்டது.

உதாரணங்கள் சில :


❑ சில முக்கியஸ்தர்கள் போகும் பாதைகளில் வாகனங்களை நிறுத்துவதுடன், கார்களில் இருப்பவர்களை கீழே இறங்கச் சொல்லி, அருகில் இருக்கும் ஏதாவது சுவரின் எதிரில் அதனைப் பார்த்தபடி நிற்கச் சொல்கின்றனர்! அதாவது முக்கியஸ்தர்கள் அவர்களைக் கடந்து செல்லும் வரை சாலையையே பார்க்கக் கூடாதாம்!

❑ உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் வீட்டு எதிரில் குடியிருக்கும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் வீட்டின் கேட்டுகள் அடியோடு பெயர்ந்தே போய் விட்டன. காரணம், சவான் வீட்டை விட்டு வெளியே வரும் போதும் உள்ளே போகும் போதும் காவலர்கள் அந்த கேட்டுகளை சாத்தி சாத்தி அந்தப் பாடுபடுத்தி விட்டார்கள்!

❑ ஒவ்வொரு வி.ஐ.பி.க்கும் பாதுகாப்பளிக்கும் நபர்கள் எவ்வளவு தெரியுமா – 55!

ஆதாரம் : இந்தர் மல்ஹோத்ராவின் 'இந்து' கட்டுரை

தகவல் : வடவள்ளி ராமசுப்ரமணியன்



பாலம்

●● என் தாத்தா சம்பந்த மூர்த்தி நடத்தி வந்த "நவ மோகினி" பத்திரிகையின் பழைய பிரதிகள் இருந்தால் அனுப்ப வேண்டுகிறேன். தபால் செலவு ஏற்கிறேன்.

– ஜீவா. காமராஜ்,
43, இராஜா வீதி,
சுவாமிமலை – 612 302.

●● பாரதிதாசன் பல்கலைக் கழகம், III B.Sc., கணிதம் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. கொடுத்து உதவினால் தபால் செலவு ஏற்கிறேன்.

– க. சிவகுமார்,
இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு (கணிதம்),
காதர் முகைதீன் கல்லூரி,
அதிராம்பட்டினம் – 614 701.

●● மனநிலை குன்றிய குழந்தைகள், முதியோர்களுக்காக சேவை மனப்பான்மையுடன் ஆக்ஸ்போர்டு முதியோர் இல்லம் நடத்தி வருகிறோம்.

– ஆக்ஸ்போர்டு முதியோர் இல்லம்,
பிரியா நகர்,
ஊரப்பாக்கம் – 603 202.

●● ஐம்பதுகளில் "சரஸ்வதி" பத்திரிகையில் திருச்சிற்றம்பலக் கவிராயர் எழுதிய "ஒற்றைப் பனைமரம்" கவிதையை ஒரு கார்டில் எழுதி அனுப்ப வேண்டுகிறேன்.

– க. மாரியப்பன்,
368, அழகேசன் ரோடு,
கோயமுத்தூர் – 641 011.

●● முடி மாற்று அறுவை சிகிச்சை (Hair transplant) செய்து கொண்டவர்கள் அந்த சிகிச்சையினால் நல்ல பலன் கிடைத்ததா என்று தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

– அ. அக்பர் அலிராஜா,
90–இ, சோலைக்கிளி இல்லம்,
கேணிக்கரை,
இராமநாதபுரம் – 623 501.

●● புதுமைப்பித்தன் எழுதிய 'பிரேத மனிதன்' சிதம்பர ரகுநாதன் எழுதிய 'நான் இருவர்' ஆகிய புத்தகங்கள் தேவை.

– ஜி. சந்தானம்,
96, கற்பகம் நகர்,
சேலையூர் (அ), சென்னை – 600 073.

●● லட்ச ரூபாய் முதலீட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள், உற்பத்தி முறைகள் தந்து உதவக் கூடியவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறேன்.

– வெ. ரங்கராசு,
117, ஹவுசிங் யூனிட் II,
சிட்கோ அஞ்சல்,
கோவை – 641 021.

●● மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், பி.எஸ்ஸி., கணிதம் மூன்றாம் ஆண்டு பாடங்கள் இரவலாகவோ, விலைக்கோ தந்து உதவுமாறு வேண்டுகிறேன்.

– வேலா. பன்னீர்செல்வம்,
82, பெசண்ட் நகர்,
மயிலாடுதுறை – 609 001.

●● ஒரு தஞ்சாவூர் தம்பூரா தேவைப்படுகிறது. விலையும் குறிப்பிட்டால் நல்லது.

– எஸ். ராமகிருஷ்ணன்,
16, பாரதியார் நகர்,
(உதயம் தியேட்டர் பின்புறம்),
அசோக் நகர்,
சென்னை – 83.

●● நான் பிளஸ் டூ மாணவி. வசதியற்றவள். என் ஆங்கில அறிவு வளர எனக்கேற்ற ஆங்கில நூல்களும் ஒரு அகராதியும் கொடுத்து உதவ வேண்டுகிறேன். உபயோகத்தில் இருந்த புத்தகங்களே போதும்.

– க. வாசுகி,
C/o செல்வம்,
பெருமாள் கோயில் சந்நிதி தெரு,
வடுவூர் (அ) – 614 019.

●● உத்தமபாளையம், மர்ஹூம் மௌலவி எஸ். எஸ். முஹம்மது அப்துல் காதர் ஹஜரத் அவர்கள் மொழிபெயர்த்த திருக்குர் ஆன் தப்ஸீர் 5-ம் பாகமும் ஸஹீஹுல் புகாரி 2, 3-ம் பாகமும் வைத்திருப்போர் தகவல் தரவும். எங்கள் நூலகத்துக்கு விலை கொடுத்துப் பெற விருப்பம்.

– எஸ். முஹம்மது அலி,
3, புதுப்பள்ளி வாசல் தெரு,
கம்பம் – 626 516.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. – ஆர்.)

உலகைச் சுற்றி



• தனி க்யூபெக் நாடு கோரி ஊர்வலம்!

அங்கேயும் தனிநாடு கேட்கிறார்கள்!

கனடாவிலிருந்து - ஒரு பகுதியை 'கியூ பெகுவா' என்ற தனி நாடாக அறிவிக்கக் கோரி, இருபது ஆண்டு களாகப் போராட்டம் நடந்து வந்தபடி இருக் கிறது.

ஆனால் ஈழப் புலி கள் இலங்கையில் செய் வது போல, அரசுக்கு எதி ராக ஆயுதம் ஏந்தவில்லை போராளிகள்! மாறாக அமைதியான முறையில் ஊர்வலம், கூட்டங்கள் நடத்துவது, பேச்சு வார்த்தை, தேர்தல் போன்ற ஜனநாயக முறை களில்தான் தம் கோரிக்கையை முன் வைக் கிறார்கள்.

அதன்படியே சமீபத்தில் பிரிவினை வேண் டுமா, வேண்டாமா என்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, வாக்களிப்புகளைப் பரிசீலித்த தில் மயிரிழை வித்தியாசத்தில் தனி நாடு ஐடியா தடுக்கப்பட்டிருக்கிறது. (49.4 சத விகிதம் பேர் பிரிவினைக்கு ஆதரவு அளித்திருந்தார் கள்!) 'தடுக்கப்பட்டிருக் கிறது' என்பதை விட, 'தள்ளிப் போடப்பட்டிருக்கிறது' என்று சொல் வதுதான் பொருத்தம்.

கனடாவிலுள்ள அனைவரும் ஒரே மதம், இனம், பழக்க வழக்கங்களைக் கொண்டவர் கள்தான். இருந்தும், தனி நாடு கோரிக்கை எழுந் ததற்குக் காரணம் மொழி!

அங்கு இரண்டு ஆட்சி மொழிகள் : ஆங் கிலம், பிரெஞ்ச். பிரெஞ்சு பேசும் க்யூபெக் மாநிலத்தவர்தான் தனி நாடு கேட்பவர்கள்.

'க்யூபெக்'கில் ஆங்கிலப் பள்ளிகளும் உண்டு. அதே சமயம், கனடாவின் மற்ற பகுதி களில் பிரெஞ்சுக் கல்வி நிறுவனங்கள் மிகக் குறைவு. 'இது ஒர வஞ்சனை; பிரெஞ்சுக்கு சம அந்தஸ்து வேண்டும்' என்பதாகத்தான் இந்தப் போராட்டம் தொடங்கியது. இதுவே பிறகு, தனிநாடு கோரிக்கை ஆனது.

பிரிவினையை வலுவிழக்கச் செய்யும் முயற்சியாக, கனடாவின் எல்லா மாநிலங்களி லும் பிரெஞ்சு மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட சில கல்வி நிறுவனங்கள் துவக்கப் பட்டன. க்யூபெக்குக்குச் சில விசேஷ அந்தஸ்து கள் தரப்பட்டன. அம்மாநிலத் தலைவர், 'பிரதமர்' என்றே அழைக்கப்பட்டார்.

இதனாலெல்லாம் அவர்கள் சமாதானம் அடைந்ததாகத் தெரியவில்லை! இதற்கு முடிவு காணும் விதமாகத்தான் சென்ற மாதம் தேர்தல் நடத்தப்பட்டது.

"நாங்கள் தோற்றதற்குக் காரணம், தேர்தலில் கனடா அரசு எங்களுக்கு எதிராக ஏவிய பண பலமும் வெளிநாடுகளிலிருந்து க்யூபெக்கில் வந்து குடியேறியவர்களும் தான்!" என்று க்யூ பெக் பிரதமர் ஜேக்வஸ் பிரிஜ்யூ அறிக்கை விட் டார்.

ஆனால் அவர் ஆட்சியிலேயே சிலர் இதைக் கடுமையாக எதிர்த்ததால் அவர் ராஜி னாமா செய்ய வேண்டியதாகி விட்டது!

நடந்து முடிந்த வாக்கெடுப்பில், பிரி வினை வாதம் முறியடிக்கப்பட்டிருப்பதை அமெரிக்காவும் பிரான்ஸும் வரவேற்றிருக்கின் றன.

ஆனால் இது தாற்காலிகத் தீர்வுதான். 'க்யூபெக்'கினர், ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்கும் முன் நிரந்தரத் தீர்வுகாண வேண்டி யது அவசியம்.

யுத்தம் மூண்டால் யாரும் தாங்கமாட்டார் கள்!

— ஜி.எஸ்.எஸ்.

SANMAC CHITS
MEETS YOUR NEEDS

எந்த நேரமும் சான்மேக் நேரமே!

செயல்திறன் மிக்க சான்மேக் குரூப்பின், ஓர் முக்கிய அங்கமாகிய சான்மேக் சிட்ஸ் லிமிடெட் வெற்றிகரமான மற்றுமொரு திட்டத்தை வழங்குகிறது.

ரவுண்ட் -தி- இயர் சீட்டு குரூப்புகள்

இப்போது நீங்கள் எந்த மதிப்புள்ள சீட்டு குரூப்பிலும் ஆண்டின் எந்தக் காலத்திலும் சேரலாம். தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள 21 கிளை அலுவலகங்களில் எதில் வேண்டுமானாலும் சேரலாம். இந்த வகையில் வாடிக்கையாளர்களின் வசதிக்குப் பொருந்தும் வகையில், அவர்களுடைய



தேவைகளை நிறைவேற்றி, மிக நெருங்கி அவர்களுடைய உள்ளத்தையே தொட்டு விடுகிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதையே முக்கியக் கொள்கையாகக் கொண்டு, கடந்த ஆண்டில் சான்மேக் சிட்ஸ் மகத்தான சாதனை படைத்திருக்கிறது. இதுவரை வழங்கப்பட்ட பரிசுப் பணம் ரூ.36 கோடி இலக்கைத் தொட்டுவிட்டது. சந்தாதாரர்களின் எண்ணிக்கை மேலும் பெருகி 12,000 க்கும் மேல் ஆகி விட்டது. பரவலாக அமைந்துள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்து விட்டது.

SANMAC

இனி வரவிருக்கும் ஆண்டில் எதிர்கொள்ள வேண்டிய மாபெரும் சவால்களை எல்லாம் சந்திக்க முற்றிலும் தயாராக உள்ளது இந்த நிறுவனம். இந்த செல்வச் செழிப்பிலும் வளர்ச்சியிலும் நீங்கள் நிச்சயம் பங்கு பெற வேண்டும்.

இதற்கு நல்ல நாள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதில் நீங்கள் சேரும் நாளே, வளமான வருங்காலத்திற்கு நல்லதொரு தொடக்கம் ஆகும்.

இன்றே சான்மேக் சீட்டில் சேர்ந்திடுங்கள்!

குரூப் குறியீடு	சீட்டுச் சந்தா ரூ. × மாதங்கள்	சீட்டு மதிப்பு ரூ.	நிர்வாகக் கட்டணங்கள் ரூ.	அன்பளிப்புகள்
B	500 X 20	10,000	40.00	பிக்னிக் பேக்
F	500 X 30	15,000	75.00	மூடியுடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரம்
HF	750 X 20	15,000		
JF	1,000 X 15	15,000		
J	1,000 X 25	25,000	85.00	டிராவல் பேக்
G	1,500 X 20	30,000	105.00	லஞ்ச் செட்
RK	2,000 X 15	30,000		
S	2,500 X 20	50,000	135.00	சூட் கேஸ்
R	2,000 X 25	50,000		
LH	2,500 X 40	1,00,000	280.00	டீலக்ஸ் சூட் கேஸ்
LK	4,000 X 25	1,00,000		
LS	5,000 X 20	1,00,000		
LG	5,000 X 30	1,50,000	400.00	வெள்ளிப் பொருள்
TL	5,000 X 40	2,00,000	500.00	
CL	10,000 X 30	3,00,000	600.00	
PL	12,500 X 40	5,00,000	800.00	தங்க நாணயம்

குறிப்பு : எல்லா சீட்டு குரூப்புகளுக்கும் ஏலத் தொகைக்கு 30% உச்ச வரம்பு.

முன் அனுமதி பெற்றது.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: "லஷ்மி டவர்ஸ்", 27, டாக்டர் ராதாகிருட்டிணன் சாலை, மயிலாப்பூர். சென்னை 600 004. தொலைபேசி : 8258637, 8240051.

கிளைகள் :-சென்னை: அண்ணா நகர் ✆ 6214454. அசோக் நகர் ✆ 4824757. அண்ணா சாலை ✆ 8520921. மயிலாப்பூர் ✆ 4992488, 4990027. புரசைவாக்கம் ✆ 6425036. தி. நகர். ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கடலூர் ✆ 22728. கோயம்புத்தூர் ✆ 446375, 471403. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 540849. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருச்சி ✆ 25324. திருவண்ணாமலை ✆ 22922, 23333. திருநெல்வேலி ✆ 322032. பெங்களூர் ✆ 368331. திருப்பதி ✆ 24376. ஐதராபாத் ✆ 397879. விசாகப்பட்டினம் ✆ 545854.

BID FOR A BETTER LIFE

SRICHAKRA COMS. 749/95.

20

கார்கள் நிறுத்துமிடம் பூமி மட்டத்துக்குக் கீழே இருந்தது. இம்மாதிரி பல அண்டர் கிரவுண்ட் கார் பார்க்குகள் பாரி ஸின் சாலைப் போக்குவரத்தை இலகுவாக் கின. காரில் அமர்ந்து ஸேஃப்டி பெல்ட் அணிந்ததும் (அணியாது போனால் கடுமை யான அபராதம்) "இந்திராவா? சக்தியா? எங்கே போகலாம்?" என்றான் ஜேம்ஸ்.

'சக்தி'என்றதும் தமிழக அரசியல் நினைவு வர, "இந்திராவே தேவலாம்"என்றான் இன்பா.

பகல் நேர பாரிஸ், ஃபிரெஞ்சு சரித்திரத் தையும் கலைப் பாரம்பரியத்தையும் பறை சாற்

"இஸ்ரேலுக்குத்தான் அதிகம் போனதாகக் கேள்வி?"

"உண்மைதான். அதற்கு முக்கிய காரணம் அங்கே பணம் கொண்டு போவதற்குத் தடை ஏதும் இல்லை. கறுப்புப் பணம், லஞ்சப்பணம், திருட்டுப் பணம், கள்ளக்கடத்தல் வியாபாரத் தில் சம்பாதித்த பணம் எதையும் கொண்டு போய் வெளுப்பாக்கலாம். அதோடு குடியேற நினைப்பவர்களுக்கு அதிக சிரமமில்லை. 'யூதன்'"என்று சொல்லிக் கொண்டு ருஷ்ய மாஃபியாவைச் சேர்ந்த பலர் அந்நாட்டின் பிரஜைகளாகி, பிறகு ஆண்ட்வெர்ப், பெர்லின், நியூயார்க் என்று பரவுகிறார்கள்."

இருட்டு அரண்மனைகள்

றியது என்றால், இரவு நேர பாரிஸ், ஒளி அமைப்பின் ஜாஜ்வல்யத்தால் மாயா ஜால புரியாகத் திகழ்ந்தது!

இந்திரா ரெஸ்டாரண்ட், மசால்தோசை முதல் பட்டர்நான், பன்னீர் கோஃப்தா வரை பலவித இந்திய உணவு வகைகளை வழங்கியது.

"கணிசமான அளவில் இந்திய ரெஸ்டா ரண்டுகள் உள்ளன. ஃபிரெஞ்சு மக்களும் ஒரு மாறுதல் விரும்பி வருவார்கள்''என்றான் ஜேம்ஸ்.

ஆர்டர் செய்து முடித்ததும், ''ருஷ்ய மாஃபியா பற்றி என்ன?"என்று நினைவூட்டி னான் இன்பா.

''புதிய விஷயமில்லை; எப்போதுமே இருந்து வருவதுதான். ஆனால் சோவியத் ருஷ்யா ஒரு கட்டுக்கோப்பான கம் யூனிஸ்ட் சாம்ராஜ்யமாக இருந்தவரை கெடுபிடிகள் நிறைய. அதனால் தலை மறைவாகக் காரியங்கள் நடந்து வந்தன. 1991ல் சோவியத் ருஷ்யா கரைந்து போய், தனித்தனி நாடுகளா கப் பிரிந்ததுடன் கட்டுப் பாடுகளும் தளர்ந்தன. ருஷ்ய அண்டர் கிரவுண்ட் மாஃபியா, டூரிஸ்டுகள் என்ற போர்வையில் அயல்நாடு களில் பரவ ஆரம்பித்தனர்."

"பெரும்பாலும் போதை மருந்துதானா?"

"உள்ளதற்குள் சுலபமாகப் பணம் பண் ணும் வழி அதுதான். ஆனால் அணுகுண்டு தயாரிப்புக்குத் தேவையான பொருள்கள், வைரங்கள், கறுப்புப்பணம் என்று பலவற்றை யும் கடத்துகிறார்கள். கறுப்பை வெளுப்பாக்கி முதலீடு செய்து தருகிறார் கள். கம்ப்யூட்டர் நிபுணர் களைப் பயன்படுத்தி, வங்கிகளின் கம்ப்யூட்டர் இயக்கத்தில் வெளியே இருந்தவாறே ஊடுருவி, ஒரு கணக்கிலிருந்து இன்னொரு நாட்டில்



உள்ள வேறு கணக்குக்கு பணத்தைக் கொண்டு போய் விடுவார்கள்!"

"எமகாதகர்கள்"என்றான் தமிழில்.

"என்ன?"

அர்த்தம் சொன்னான்.

"மெய்யாலுமே அப்படித்தான். ஒருவர் பின் ஒருவராக ஐரோப்பாவில் உள்ள மாஃபியா தலைவர்களைப் பரலோகத்துக்கு அனுப்பிவிட்டு, அவர்கள் இடத்தில் தாங்கள் அமர்ந்து கொண்டு, அவர்களுடைய மாஃபியா சாம்ராஜ்யத்தை இவர்கள் ஆளத் தொடங்கி விடுகிறார்கள்! ஏற்கெனவே உள்ள ஆள், படை, வர்த்தக உறவுகள் எல்லாம் புதிய மாஃபியா மன்னன் வசப்பட்டு விடுகிறது."

"தேசங்கள் ராணுவபலம் காட்டி மோதிக் கொள்வது போல் இது ஒரு அண்டர் இரவுண்ட் யுத்தம் என்று சொல்லுங்கள்! சூரியாசுவாமியை இவர்கள் தீர்த்துக் கட்டக் கூடாதோ!"

"கூடவே ஸான்ரோக்கோவுக்கும் அவர்கள் குட்பை சொல்லி மேலுலகுக்கு அனுப்பி வைப்பதாகவே வைத்துக் கொள்வோம். அதனால் நமக்கு என்ன ஆதாயம்? பழைய மாஃபியா கும்பலுக்குப் பதில் புதிய மாஃபியாவுடன் போராடப் போகிறோம். அவ்வளவுதானே!"

"அது உங்கள் பாடு; என் பணி முடிந்து நானாவது ஊர் திரும்பலாம் அல்லவா?" என்று எழுந்தான்.

"அப்படியாவது உன் ஆசை நிறைவேறினால் சரி" என்று கிரெடிட் கார்ட் காட்டி பில் பெற்றுப் புறப்பட்டான் ஜேம்ஸ் பிளாக்.



கி. ராஜேந்திரன்

பாரிஸின் மையமான பகுதியில்தான் அமைந்திருந்தது இன்பா தங்கிய ஹோட்டல். ஆனால் பிரதான சாலையில் இன்றி உள்ளடங்கி ஒரு குறுகிய தெருவில் அடக்க ஒடுக்கமாக. அதனால் மிதமான கட்டணம். அதுவே இந்திய நோக்கில் ஆளை முழுங்குவது. சிறிய அறைக்குள்ளே விசால கட்டில், டீ.வி., குட்டி ஃபிரிஜ்



"அந்த பாட்ஸ்மேன் என்ன தகராறு பண்றார்..?"

"ஆக்ஷன் ரீ ப்ளேயில் காட்டிய ரன்னையும் அவ ரோட கணக்கில் சேர்த்துக்கணுமாம்!"

- ஞா. ஞானமுத்து

உள்பட பல வசதிகள்.

"ஜெட் களைப்பு தீர தூங்கு. அதிகாலை யில் வந்துவிடுவேன், ஏர்போர்ட்டுக்கு அழைத் துப் போக. ஃப்ராங்க்ஃபர்ட் ஃப்ளைட் ஆறு மணிக்கு."

"ப்ராங்க்ஃபர்ட்?"

"ஆமாம்; சாரதா ரோம் நகருக்கு வந்து விட்டாள். அவளுடைய அடுத்த ஹால்ட் ஃப்ராங்க்ஃபர்ட்தான். நீ அங்கே அவளுக்காக தயாராய் காத்திருப்பாய்" என்று ஜேம்ஸ் விடைபெற்றான்.

சின்னி படித்துக் கொண்டிருந்தான். "நமது தேசத் தந்தை அண்ணல் காந்தியடி களின் முக்கியமான கோட்பாடுகள் வாய்மை யும் அஹிம்சையுமாகும். 'வாய்மை எனப்படு வது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல்'என்கிறார் திருவள்ளுவர்..."

"டேய்! ஒரு வேடிக்கை கேட்டியா! நீதிபதி உத்யோகம் கேட்டு வந்த ஒருவனை நேர்முகத் தேர்வில் சோதித்தபோது, இந்திராகாந்தி, மகாத்மா காந்தியின் மகள்'னு பதில் சொல்லி யிருக்கான்"என்றார் ரங்கநாதன்.

"தாத்தா! டோண்ட் டிஸ்டர்ப்"என்றான் சின்னி. "பரீட்சைக்குப் படிக்கிறேன், தெரி யலை?"

"தெரியலைடா. சின்னி படிப்பான்றதையே நம்ப முடியலே; பரீட்சைக்குப் படிப்பான்றதை நிச்சயமா நம்ப முடியலே!"

"தாத்தா ப்ளீஸ்..."

"என்னடா விபரீதம் இது? விழுந்து விழுந்து படிக்கிறே? இதுக்குமேல மழை கொட்டினா தமிழ்நாடு தாங்காதுடா! ஏற்கெனவே அந்த அம்மாவோட தண்ணீர்ராசி, புழலேரி, ரெட் ஹில்ஸ், செம்பரம்பாக்கம் ஏரி எல்லாம் ரொம்பி வழியுது.."

"தாத்தா கிளப்புக்குப் போய் ரம்மி ஆடுங்க; இல்லாட்டி உங்க ரூம்ல கதவை சாத்திக்கிட்டு ஹிந்து பேப்பரை ராகம் போட்டுப் படிங்க. என் பிராணனை ஏன் வாங்கறீங்க?"

"டீவில இன்னிக்கு போல்ட் அண்ட் தி பியூட்டிஃபுல்டா... ஒரு எபிஸோட் விட மாட்டியே... இப்ப என்னடான்னா டீவில பாச்சை அடையுது. என்னையும் பார்க்க விட மாட்டேன்ற."

"உன் காது மந்தம். எட்டு வீட்டுக்குக் கேட் கிற மாதிரி வால்யூம் வைக்கிறே. நான் எப்படி படிக்கிறது?"

"பிரமாத ஐ.ஏ.எஸ். படிப்பு பாழாய்ப் போகிறதாக்கும்."

புத்தகத்தை டப்பென்று மூடினான். "நான் மொட்டை மாடிக்குப் போறேன், படிக்க"என்று புறப்பட்டான்.

"வேண்டாம் வேண்டாம். அப்புறம் டீ போட்டு எடுத்துக்கிட்டு நான் மூணு மாடி ஏறி வரணும். இங்கியே படி. நான் வாயை மூடிக்கிறேன்."

"ப்ளாஸ்திரி போட்டு ஒட்டினாத்தான் உண்டு" என்று அலுத்துக் கொண்டு மறுபடி படிக்க உட்கார்ந்தான்.

டிங்டாங்!

பரபரப்புடன் எழுந்தான்.

"படிவேண்டா! வாசல்ல யாருன்னு நான் பார்க்க மாட்டேனா?"

அதட்டலை அலட்சியம் செய்து டெஸ்க்கை பச்சை குதிரை தாண்டி, சோஃபாவை ஹைஜம்ப் செய்து பாய்ந்து போய் கதவைத் திறக்க... ரஸியா. "ஹாய்!"

"ஹாய்!"

"அதானே பார்த்தேன்"என்றார் தாத்தா. "கேர்ல் ஃப்ரெண்ட் வரான்னா என்ன சுறு சுறுப்பு! என்ன தாவல்! தாண்டல்!"

இருவரும் புன்னகை பரிமாறி நின்றார்கள்... நின்றார்கள்... நின்றார்கள்...

"உள்ளே வரது"என்றார் ரங்கநாதன். "விலகி வழி விடேண்டா. இடிச்ச புளி மாதிரி நின்னுக்கிட்டிருக்கே..."

வெட்கத்துடன் நகர்ந்தான். ரஸியா உள்ளே வந்தாள். வீடே பிரகாசமானதாய் உணர்ந்தான்.

"தாத்தா! எப்படி இருக்கீங்க?"

"ரொம்ப வருத்தமா."

"அடடா! ஏன் தாத்தா? என்ன ஆச்சு? அங்கிள்-ஆண்டிகிட்டேயிருந்து ஏதாவது நியூஸ் வந்துச்சா?"

"ஒன்னையும் காணோம். ஒரு நியூஸும் வராததே ஒரு விதத்துல நல்ல நியூஸ்தான்!"

"அப்ப எதுக்குத் தாத்தா நீங்க வருத்தப்பட ணும்?"

"இந்தப் பயலாலதான். இவனைக் கவனிச் சுக்கறதே எனக்குக் காரியமாப் போச்சு. ரம்மி ஆடப் போக முடியலே; ஒரு கதை, காலட்சே பம்னு போக முடியலே; டீவி பார்க்கக் கூட விடமாட்டேன்றான். படிப்பு கெடுதாம்."

"ஸோரிகுட்! அப்ப சின்னி நல்லா படிக்கி றான்னு அர்த்தம்."

"படிக்கிறானாவது! தூக்கத்துல சொப்பனம்

கண்டு உளறுறது கூட அல்ஜிப்ராவும் ஜியா மெட்ரியும்தான். என்னதான் மந்திரம் போட்டியோ, பையன் அடியோடு மாறிட்டான்!"

"மந்திரம் மாயம் ஒண்ணுமில்லே தாத்தா. மனோதத்துவம்தான். ஒருத்தன் நல்லா படிக்கணும்னா பாடம் புரியணும்.பாடம் புரிஞ்சா நிச்சயம் ஆர்வமா படிப்பாங்க. ஆனா கிளாஸ்ல ஐம்பது பேருக்கும் புரியும்படியா சொல்லித்தர டீச்சருங்களுக்கு முடியறதில்லே. நான் சின்னிக்குப் புரியாத பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறேன். தன்னால இன்டரஸ்ட் வந்துடுச்சு."

"இன்டரஸ்ட் உன்னிடமா, பாடத்திலா என்றுதான் சந்தேகம்"என்று முணுமுணுத்துக் கொண்டார். "அதனாலயே இவனை சதாசர்வ காலமும் கண்காணிக்க வேண்டியிருக்கு."

"என்ன தாத்தா, திட்டறீங்களா?"

"திட்டறதா எதுக்கு? உனக்கு நன்றில்லே சொல்லணும். நீ இல்லாட்டா இந்தப் பய எட்டாவது ஸ்டாண்டர்டிலேயே எட்டு வருஷமானாலும் நன்றி விசுவாசத்தோட உட்கார்ந்திருப்பான்."

சிரிப்பை அடக்கிக் கொண்டு, "தாத்தா, ரொம்ப கிண்டல் பண்ணாதீங்க, ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கு. மறுபடி திசை மாறிடப் போகுது."

"தாத்தா ரஸியாவுக்கு டீ போட்டுத் தரக் கூடாதா? வளவளன்னு பேசிட்டிருக்கீங்களே?"

"ஆமாண்டா! மளிகை, காய்கறி வாங்கிட்டு வந்து உனக்குச் சமைச்சு சாப்பாடு போடறது போதாதுன்னு வாஷிங் மிஷின், வாக்குவம் கிளீனர் எல்லாம் எனக்காக வாங்கிப் போட்டிருக்கான் என் பிள்ளை. பத்துப் பாத்திரம் தேய்க்கிறது ஒண்ணுதான் பாக்கி. நாளை லேர்ந்து அதுவும் நடந்துடும். வேலைக்காரி ஊருக்குப் போறாளாம். போதாக் குறைக்கு நீ நாளைக்கு நாற்பது தடவை டீ கேட்கிறே!"

"நான் போட்டுத் தரவா தாத்தா?"என்று சோஃபா விட்டு எழுந்து சமையலறை சென்றான்.

தாத்தா ஹாய்யாக சோபாவில் சாய்ந்து, சின்னியின் 'வெவ்வவ்வே'யை சந்தித்தார். "வாய் கோணிக்கப் போறதுடா! அப்புறம் ரஸியா உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா."

"அவ அரைமணி நேரம்தான் இருப்பா. அதுக்குள்ள நான் ரெண்டு பாடமாவது அவளிடம் கத்துக்கலாம்னு பார்க்கறேன். நீங்க என்னடான்னா அவளை வேலை வாங்க றீங்க..."என்று பால்பாயிண்ட் பேனாவை அவர் மீது வீசினான்.

"டிங்டாங்"என்றது அழைப்புமணி.

"வாசல்ல யாரு, பாருங்க தாத்தா."

"போனதடவை மணி அடிச்சப்ப துள்ளி



வாசல் திறக்கிறது!

எட்டு வருடம், பத்து வருடம் ஒரு குருவிடம் நடனம் கற்றுக் கொண்டுவிட்டு, மேடை ஏற 'சான்ஸ் எங்கே' என்று காத்திருக்கும் நூற்றுக்கணக்கான மாணவிகளுக்கு, நாரத கான சபா டிரஸ்ட்டின் 'நாட்டியரங்கம்' ஒரு வாசலைத் திறந்து வைத்திருக்கிறது.

மேடை, விளம்பரம் மட்டும் கொடுப்பதோடு நின்று விடாமல், நடனக் கலைஞருக்குச் சன்மானமும் கொடுக்கிறார் ஆர். கிருஷ்ணசாமி என்பதுதான் இதில் முக்கிய அம்சம்.

"சபாக்காரர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு தான் நடன நிகழ்ச்சி கொடுக்கிறார்கள் என்ற அவப் பெயர் நீங்க வேண்டுமானால், இது மாதிரி ஒரு முயற்சியைத் துணிந்து மேற்கொள்ளத்தான் வேண்டும்!" என்கிறார் ஆர். கே.

ஒவ்வொரு மாதமும் மூன்றாம் சனிக்கிழமை மாலையில் இரண்டு இளம் நடனக் கலைஞர்களுக்கு வாய்ப்பு; மறுநாள் ஞாயிறன்று காலை பத்து மணிக்கு பரதநாட்டியத்தின் ஏதாவது ஒரு அம்சம் (அலாரிப்பு, ஜதிஸ்வரம் - இப்படி) பற்றி புகழ்பெற்ற நடனக் கலைஞரின் லெக்சர்-டெமான்ஸ்ட்ரேஷன். (ஆங்கிலத்தில் உரையை அச்சிட்டு விநியோகித்து விடுகிறார்கள்!)

"இப்போது மினி ஹாலில் நடக்கும் இந்த நடன நிகழ்ச்சிகளை மெயின் ஹாலில் நடத்துகிற அளவுக்கு ரசிகர்கள் உருவானால் அதுதான் என் குறிக்கோளுக்குக் கிடைத்த வெற்றி!" என்கிறார் நாரதகான சபா கிருஷ்ணசாமி.

— எஸ்.வி.என்.

ஓடினியே? இப்ப சுவாரஸ்யம் போயிடுச்சாக்கும்!"

"அறுக்காதீங்க 'தாத்தா'"என்றான். என்றாலும் தாத்தா தன்னையும் ரஸியாவையும் இணைத்துப் பேசுவதை இதயத்துக்குள் ரசித்தான். இதமான வருடல்!

கதவு திறந்தார். "யாரு!"

"உள்ளே வரலாமா?"என்றாள்.

"யாருன்னு தெரிஞ்சா தேவலாம்."

"வாசல்ல நின்றபடியே எப்படி விளக்கிச் சொல்றது?"


"நீ...நீ..."

"உம், ஞாபகப்படுத்திப் பாருங்க."

"அனுபமாதானே!"

"கரெக்ட்! கண்டுபிடிச்சுட்டீங்களே! இப்பவாவது உள்ளே வரலாமா?"

விலகி நின்றார். "ஸாரி. வா! வா!"



"நம்ம தலைவர் எதையும் புதுமையா செய்கிறவர்னு சொல்றியே, எப்படி?"

"அடுத்த மாதம் ஐயாயிரம் பெண்களுக்கு 'மஞ்சள் நீராட்டு விழா' நடத்தப் போறதா சொல்லி இருக்காரே!"

— எஸ். எஸ். பூங்கதிர்

பழைய நினைவுகளின் பிரவாகம்: அனுவின் அப்பா தன்னிடம் வந்தது. அவளுக்கும் இன்பாவுக்கும் இடையே காதல் மலர்ந்திருப்பதாகத் தயக்கத்துடன் கூறி, திருமண சம்பந்தம் கோரியது. இன்பா விட்டெறிந்து பேசியது. 'கல்லூரியில் சகமாணவியிடம் ஃப்ரீயாகப் பழகினால் அதைக் காதல் என்று தப்பர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது'என்று கூறி அவரைத் தலைகுனிய வைத்து, திருப்பி அனுப்பியது... அந்தச் சமயத்தில் ஓரிரு தடவை பார்த்ததுதான் அவளை... "எத்தனை நாளாச்சு!" என்றார்.

"ஆமாம் ஸார். ஆனால் உங்க மகனை அடிக்கடி உத்யோக ரீதியில் சந்திக்கிறேன். எனக்கு ஃபாரின்ஸிக் டிபார்ட்மெண்ட்டில் வேலை."

"அப்படியா!"

"இன்பாகிட்டேயிருந்து ஏதாவது ஃபோன் வந்ததா?"

"இதுவரைக்கும் இல்லே."

"ஒரு முக்கியமான விஷயம் ஸார். சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்."

கொஞ்சம் கலவரத்துடன் ஏறிட்டார்.

"எனக்கு ரிஸர்ச் ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்கு. ஃபாரின்ஸிக் ஸயன்ஸ்ல இப்ப டி.என்.ஏ. ஆராய்ச்சிக்கு ரொம்ப முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கு. புதுசு புதுசா பிரமிக்க வைக்கிற பல விஷயங்கள் தெரியவர வாய்ப்பிருக்கு."

"எந்த யூனிவர்ஸிடி?"

"பெர்க்லி."

"அமெரிக்காலயா? அவங்களே கூப்பிட்டுக் கொடுக்கிறதுன்னா, அந்த அளவுக்கு நீ படிச்சிருக்கியா?"

"ஏற்கெனவே டாக்டரேட் ஸார்!"

"ஒண்டர்ஃபுல்!"

ரஸியா டீ கொண்டு வந்து வைத்தாள். அழைப்புமணி ஒலித்து, குரல் கேட்டதும் நாலு கோப்பைகளில் டீ கொண்டு வந்ததை மனசுக்குள் பாராட்டினார் ரங்கநாதன்.

"ரஸியாதானே? உன்னைப் பற்றி இன்பா நிறைய சொல்லியிருக்கார். சின்னி பற்றியும் தான்..."

வணக்கம் சொல்லி அடக்கமாக அமர்ந்தாள். "டீ சாப்பிடுங்க."

ருசி பார்த்து, "நல்லா இருக்கு; இலேசா சுக்கு தட்டிப் போட்டிருக்கே இல்லே?" என்றாள்.

ரஸியா புன்னகையுடன் நெளிய, "உங்க ஆசி வேணும் ஸார்" என்றாள் ரங்கநாதனைப் பார்த்து.

"நிறைய இருக்கும்மா."

"இன்னொரு ரிக்வெஸ்ட். அப்பா தனியா இருப்பார்... நான் போயிட்டா..."

"நான் அடிக்கடி போய் கவனிச்சுக்கறேன். பேசிப் பழக ஆளிருந்தால் தனிமை தெரியாது..."

"பத்து நாள்ல புறப்படறேன். அதுக்கு முன்னால் இன்பா திரும்பி வருவாரா தெரியாது. எனக்காக அவரிடம் சொல்லணும்."


"ஷ்யூர்..."

"எங்க இருந்தாலும் அவரை மறக்க மாட்டேன்."

"புரியுது அம்மா"என்றார். அவள் கண்கள் பனிப்பதைப் பார்க்க அவருக்கும் நீர் திரையிட்டது. "அநேகமா நீ புறப்படறதுக்கு முன்னால் அவனே திரும்பி வந்தாலும் வந்துடுவான்.... பார்த்தியா, மணி அடிக்குது!"

எல்லோரும் ஃபோன் நோக்கித் திரும்பினார்கள். 'இன்பாதான் பேசுகிறானோ? அல்லது... ஒரு வேளை... சாயா பற்றி ஏதாவது தகவல் கிடைக்குமோ?'

(தொடரும்)





1995 டிசம்பர் 17
யுவ மார்கழி 2
மலர் : 54
இதழ் : 20

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தேர்தல் ஜுரம்!

தேசிய அளவிலான பதினைந்து அரசியல் கட்சிகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது - 'கட்சி நிதிக்கு எந்தெந்தத் தொழில் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து எவ்வளவு நன்கொடை பெறப்பட்டுள்ளது? இந்த விவரங்களையெல்லாம் ஏன் சட்டப்படி அறிவிக்க வில்லை...?' என்று விவரம் கோரும் நோட்டீஸ்.

ஜனவரி 16, 1996க்கு முன்னதாக, கட்சிகள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கெடுவும் வைக்கப்பட்டுள்ளது.


இந்த வழக்கு எத்தனை வாய்தாக்களைச் சந்தித்து, எப்படி முடியுமோ...? கடவுளுக்கே வெளிச்சம்!

ஆனால், 'Common Cause' என்ற ஒரு பொதுச் சேவை அமைப்பின் முயற்சி காரணமாக, இத்தகைய முக்கியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதே குறிப்பிடத்தக்க விஷயம்தான்.

நமது அரசியல் கட்சிகள் இவ்வாறு சட்டப்படி செய்ய வேண்டியவற்றையே கடைப்பிடிக்காத நிலையில், தேர்தல் தொடர்பான நன்னடத்தை நெறிகளை மட்டும் பின்பற்றப் போகின்றனவா என்ன...! அப்படியெல்லாம் ஒருபோதும் நடக்காது என்பது உறுதியாகத் தெரிந்திருப்பதால்தான் சி. சுப்ரமண்யம் அந்த நெறிமுறைகளைச் சட்டமாக்கிவிட வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

அரசியல் கட்சிகளும் சி.எஸ்.ஸின் வாதத்துக்கு வலு சேர்க்கும் வகையில்தான் மீண்டும் மீண்டும் நடந்து கொள்கின்றன.

மத்தியில் காங்கிரஸை எடுத்துக் கொள்வோம் - பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தும்போதே



மாநிலங்களுக்கான தேர்தல்களையும் நடத்தி முடிப்பதுதான் அறிவுடைமை. ஏராளமான பொருள் செலவையும் நேர விரயத்தையும் இதன் மூலம் மிச்சப்படுத்த முடியும். ஆனால் மத்திய அரசோ, மாநிலத் தேர்தல்களைப் பிறிதொரு சமயம் - தனியாகவே நடத்திக் கொள்ளலாம் என்று யோசித்து வருகிறது.

தனது வெற்றி வாய்ப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே சுயநலக் காரணத்துக்காக காங்கிரஸ் இவ்வாறு திட்டமிடுகிறது. வீணாகப் போவதென்னவோ மக்கள் செலுத்திய வரிப் பணம்தான்!

மத்திய அரசின் ஆயிரம் கோடி ரூபாய் மதிய உணவுத் திட்டமும் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டித் தரும் திட்டமும் கூட தேர்தல் நோக்கில் செய்யப்பட்ட அறிவிப்புகளே. இவற்றால் விளையப் போகும் பண விரயமும் கணக்கில் அடங்காமல் இருக்கும்.

மத்திய அரசைப் பிடித்துள்ள தேர்தல் ஜுரம் மாநில அரசுகளையும் பற்றியுள்ளது.


தமிழக முதல்வர் தேர்தல் கண்கொண்டுதான் ஒவ்வொரு அறிவிப்பாக வெளியிட்டு வருகிறார்.

வீதியோரம் வசிப்பவர்களைக் குடிபெயர்த்துப் போய் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடத்தில் குடியமர்த்தி, அந்த இடத்தையே அவரவர்க்குப் பட்டா பிரித்துக் கொடுத்து விடுவோம் என்கிறார்.

பெண்களுக்கென்று தனியாகத் தொழிற்பேட்டை ஒதுக்கித் தருவோம் என்றும் கூறுகிறார்.

இவையெல்லாம் போகாத ஊருக்கான வழிகள்தான்! முழுக்க முழுக்க பெண்களுக்கென்றே ஒரு தொழிற்பேட்டை அமைக்க 134 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கே தொழில் தொடங்கப் போகிறவர்கள் அனேகமாகப் பெண்களின் பெயர்களை பினாமியாகப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறவர்கள்தான். பொதுவான தொழிற்பேட்டைகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இடத்தைப் பெண்களுக்கென்று ஒதுக்கித் தந்தாலே போதுமானது.

குடிசைகளிலிருந்து மக்களை வெளியேற்றுவதென்பதும் அவ்வளவு சுலபமான காரியமல்ல. அந்த எளிய மக்களுக்குத் தங்கள் பணியிடத்துக்கு அருகே வசிப்பதுதான் சௌகரியம். எனவே,



ஒட்டுமொத்தமாக ஒரு பகுதியிலிருந்து வெளியேற்றப்படுவோர், தங்களுக்குத் தரப்படும் இலவச நிலத்தை விற்றுவிட்டு மீண்டும் பழைய இடத்துக்கே வரத்தான் முயற்சி செய்வார்கள்.

சேரிகள் உருவாவதென்பதை வீட்டு வசதிப் பிரச்னையாக அணுகுவதன் மூலம் வோட்டுகள் வேண்டுமானால் பெறலாமேயொழிய, அப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காது.

நிரந்தரத் தீர்வுக்கான வழி, கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடிபெயர்வதைத் தடுப்பதுதான்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கக்கூடிய, விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். அவை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடப்பதற்கான அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்து தந்தாலே போதும். தொழில்களைத் தனியார் தொடங்க, வேலை வாய்ப்புகள் பெருகி, பொருளாதார மேம்பாடு விளையும்.

இந்த உண்மையை நமது மத்திய நிதியமைச்சர் மன்மோகன்சிங் துல்லியமாக உணர்ந்திருக்கிறார் என்பதை அவரது சமீபத்திய அறிக்கை உணர்த்துகிறது.

'முதல் கட்ட நடவடிக்கையாக, காங்கிரஸ் அரசு தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வந்தது. இனி அடுத்த கட்ட நடவடிக்கை - கிராமப்புறங்களில், மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், அதிக வேலை வாய்ப்புகளைத் தரக்கூடிய விவசாயம் சார்ந்த தொழில்கள் தொடங்க சலுகைகளும் ஊக்கமும் அளிப்பதுதான்' என்று பேசியிருக்கிறார்.

ஓர் அமைச்சர் என்ற நிலையில் இருந்து அவர் பேசியிருப்பதை அவரது கட்சி மறந்து விடக்கூடாது. தேர்தல் பிரசாரத்தின் போது இலவசங்களுக்கும் மானியங்களுக்கும் முக்கியத்துவம் தந்து வோட்டுப் பெறுவது சுலபமாயிருக்கலாம். ஆனால், வேலை வாய்ப்பு வாக்குறுதியை முன்வைத்துப் பிரசாரம் செய்வதும்; பிற்பாடு - ஆட்சி அமைக்கும் பட்சத்தில் - அதை நடைமுறைப்படுத்துவதும்தான் நீண்ட கால நோக்கில் பலன்தரும்.



• பி. டி. உஷா

"விளையாட்டுப் போட்டிகளுக்காகச் செலவு செய்த தொகையில் ஊழல் நடந்திருக்கிறது" என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி. ஒரு பக்கம் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். என்றாலும் விளையாட்டுக்களைப் பொறுத்தமட்டில் ஒரு dedicated group, தமிழ்நாட்டின் பெயரையும் தமிழக முதல்வரின் பெயரையும் தூக்கி நிறுத்த ஓடியாடி உழைத்துக் கொண்டிருக்கிறது. காவல் துறைத் தலைவரும் தமிழ்நாடு அமெச்சூர் அத்லெடிக் அஸோஸியேஷன் தலைவருமான தேவாரம்தான் இந்தக் குழுவின் தலைவர். சிவந்தி ஆதித்தன் வழிகாட்டி! ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் இவர்களுடைய உழைப்புத்தான் பின்னணி.

நம்மைத் தவிர பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பங்களா தேஷ், நேபாளம், பூடான், மாலத்தீவுகள் ஆகியவை பங்கேற்கின்றன. நம்மையும் பாகிஸ்தானையும் தவிர மற்ற நாடுகளெல்லாம் பரப்பளவில் சுண்டைக்காய்தான். இந்த நிலையில் இந்தப் போட்டிகளில் இந்தியா தங்கங்களைக் குவிக்கப் போவதில் என்ன ஆச்சர்யம் என்கிறீர்களா? நமக்கும் தண்ணி காட்டும் சில குட்டி நாடுகள் இருக்கின்றன! உதாரணமாக சென்ற முறை டாக்காவில் நடைபெற்ற போட்டிகளில் கால்பந்தில் நமது மூக்கை உடைத்துத் தங்கத்தைத் தட்டிச் சென்றது பொடிசான நேபாளம். இதுமட்டுமல்ல; வாலிபால், ஹாக்கி, கபடி, குத்துச்சண்டை ஆகியவற்றில் பாகிஸ்தான் படா கில்லாடி. அதேபோல் நீச்சல், தடகளப் போட்டிகளில் ஸ்ரீலங்கா திறமையில் ஜொலிச்சிடும். குட்டித் தீவான மாலத்தீவுகள் கால்பந்தில் சவால்விடும்.

ஜெயிப்

அதேபோல், பங்களாதேஷிலிருந்து வரும் நீச்சல் வீரர்கள் தங்கங்களைத் தட்டிச் செல்வார்கள்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக இந்தியா, வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்து அணிகளைத் தயார் செய்து வருகிறது. சென்றமுறை கலந்து கொண்ட ஸ்டார் தடகள வீராங்கனைகளான சாரம்மாவும் ஏஞ்சலா வின்ஸியும் இந்த முறை கலந்து கொள்ளவில்லை. அதேபோல், 100, 200 மீட்டர் ஓட்டங்களில் பிரகாசிப்பார் என்று நாம் நம்பியிருந்த சோலைமதியும் இந்தப் போட்டிகளில் பங்கேற்கவில்லை. காரணம் காலில் அடி. ஆனாலும் பகதூர் பிரஸாத், ஆனந்த் நடராஜன், ராஜீவ் பாலகிருஷ்ணன், ஷைனி வில்ஸன் ஆகியோர் இந்தியாவிற்குப் பெருமை சேர்ப்பார்கள் என்று நிச்சயம் நம்பலாம்.

• ரூபா உன்னிகிருஷ்ணன்



இருப்பினும் விளையாட்டு வீரர்களுக்கு மத்தியில் நிலவும் கருத்து என்னவென்றால், தெற்காசியப் போட்டிகளில் ஏற்படுத்தப்படும் ரிகார்டுகள் ஆசிய அளவில் பார்க்கப் போனால் நத்திங். அதனால்தான், 'ஸாஃப்' (SAF) விளையாட்டுப் போட்டிகளுக்கு சர்வ தேச அளவில் சரியான மதிப்புத் தருவதில்லை யாம். இந்த நிலையில் ஆப்கானிஸ்தானும் உஸ் பெகிஸ்தானும் இரண்டு வருடங்களுக்கு முன் னர் தெற்காசிய வளையத்தில் சேர அனுமதிக் கப்பட்டன. ஆனால் அந்த நாடுகள் இந்த முறை கலந்து கொள்வது இன்னமும் முடிவா காமல்தான் இருக்கிறது.

என்னென்ன விளையாட்டுக்களைச் சேர்க்கலாம் என்று ஏழு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் மீட்டிங் போட் டுப் பேசினார்கள். மொத்தம் 14 விளையாட்டுகள் சேர்க்கப்பட்டன. தடகள குடும்பத்தில் ஓட்டங் களைத் தவிர டிஸ்கஸ் த்ரோ,



• ஆனந்த் நடராஜன்

போமா?



• ஷைனி வில்சன்

ஜாவ்லின் த்ரோ, ஷாட் புட், ஹாமர் த்ரோ, உயரம் தாண்டுதல், நீளம் தாண்டு தல் ஆகியவையும் அடக் கம். மயிரிழையில் வெற்றி பெற்று பட்டிய லில் ஜூடோ இடம் பெற்றது. ஸ்குவாஷ் விளையாட்டுக்குப் போதிய ஆதரவு இல் லாததால் ஓரங்கட் டப்பட்டது. தமிழ் நாட்டின் சங்க கால விளையாட்டான சிலம்பம் மற்றும் கோகோ ஆகிய வற்றை, பார்வையாளர்களுக்காக நடத்திக் காண்பிக்கலாம் என்று முடிவு செய்யப்பட் டது.

தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று மொத்தம் 954 பதக்கங்கள் வெற்றி வீரர்களுக் காகக் காத்திருக்கும் நிலையில் தமிழ்நாட் டைச் சேர்ந்த வீரர்கள் எப்படிப் பிரகாசிப் பார்கள்? தடகளத்தில் அமர்க்களப்படுத்தும் ஷைனி, ஆன்சி பிலிப்ஸ், பாபி அலோஷியஸ், அனுசுயா ராய் ஆகியோர் தமிழ்நாட்டிற்காக விளையாடினாலும் பக்கத்து மாநிலங்களி லிருந்து வந்து இங்கு செட்டில் ஆனவர்கள் தான். ஆண்கள் பிரிவில் 'தமிழர்கள்' பளிச் சிடுகிறார்கள். ஆனந்த் நடராஜன், கே. சங்கர், பாலமுருகன், ராஜீவ் பாலகிருஷ்ணன் ஆகி யோருக்கு நிச்சயமாகப் பதக்கங்கள் உண்டு. தெற்காசியப் போட்டிகளில் டிரயதலானுக்கு இடம் கிடையாது. இருந்தால் அமுதாவும் ஆறுமுகமும் தமிழர்களின் பெருமையை நிலைநாட்டியிருப்பார்கள். வாலிபாலைப் பொறுத்த வரை தொடர்ந்து பல வருடங் களாகத் தமிழ் நாடு தேசிய அளவில் சாம்பிய னாக இருந்து வருகிறது. டென்னிஸில் மகேஷ் பூபதி, அஸிப் இஸ்மாயில் ஆகியோர் பள பளக்கலாம்.

சமீபத்தில் சென்னையில் நடந்து முடிந்த தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் புரிந்தவர்களே தெற்காசியப் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற்றிருக்கிறார்கள். 100 மீட்டர், மற்றும் 110 மீட்டர் தடை ஓட்டம் ஆகியவற்றில் முத லிடம் பெற்றவர் ராஜீவ் பாலகிருஷ்ணன். வடக்கே ஜே.ஸி.டி. பக்வாரா நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் பூர்வீகம் தமிழ்நாடு ஆத லால், "தமிழ்நாட்டுக்காக விளையாடுவதில் பெருமைப்படுகிறேன்" என்கிறார். 200, 400, 600 மீட்டர் ஓட்டங்களில் சாதனை புரிந்திருக் கிறார் ஷைனி வில்ஸன்.

தடகளத்தில் இந்தியாவுக்குத் தலைமை

'சுருக் - நறுக்' – 7 போட்டி முடிவுகள்

கீழ்க்கண்ட சொல்லோவியங்கள் ஒவ்வொன்றும் ரூ. 50/- பரிசு பெறுகிறது.

தேர்தல் என்பது....

- யாரோ வீடு கட்ட நாம் எடுத்து வைக்கும் செங்கல்.

  – ஆர். பாலு, புதுவை–3.

- அடுத்த சுரண்டலுக்கு விடப்படும் டெண்டர்.

  – டி. தேசிகன், திருச்சி–6.

- ஆளுங்கட்சி மருமகளும், எதிர்க்கட்சி மாமியாரும் சேர்த்து, ஜனநாயகக் கணவன் கழுத்தை நெரிப்பது.

  – புளியரை கணேசன், சென்னை–30.

- நரிகளுக்கு, ஆடுகளே நாட்டாண்மை வழங்கும் நிகழ்ச்சி!

  – செல்வ. தியாகராஜன், திருக்கடையூர்.

- நாற்பத்தெட்டு வயதாகியும் மூளை வளர்ச்சி அடையாத ஜனநாயக புத்திரன்!

  – வி.ஆர்.சந்திரன், சென்னை–23.

- அரசியல்வாதிகளுக்கு "சீசன் டிக்கட்"; பொதுமக்களுக்கு "லாட்டரி டிக்கட்."

  – பி.எஸ். வசந்தா, சென்னை–4.

- ஒருநாள் தவறுக்கு ஐந்து ஆண்டு தண்டனை தரும் நீதி மன்றம்.

  – ஆர். திலகவதி, சென்னை–38.

- இந்திய வாக்காளர்கள் விடை தேடிக் கொண்டிருக்கும் புதிர்.

  – எஸ். ரேணுகாதேவி, சென்னை–28.

- வோட்டுகளை வாங்குவதற்கு நோட்டுகளை நீட்டி ஜனநாயகத்திற்கு வேட்டுகளை வீசும் விசித்திர விழா.

  – ஜெ. பாலா, இடைப்பாடி.

யேற்க பி.டி. உஷா நியமிக்கப்பட்டிருந்தாலும் முன்புபோல் அவர் இப்போது இல்லை. 200 மீட்டர் ஓட்டத்தில் ஆந்திராவைச் சேர்ந்த லாவண்யா, உஷாவோடு சரிக்குச் சரியாக ஓடினார். நீளம் தாண்டுதல், மற்றும் உயரம் தாண்டுதலில் ஆன்ஸ் பிலிப்பும், ஜெயந்தியும், பாபி அலோஷியஸூம் பதக்கங்களைத் தட்டி, இந்திய அணியில் இடம்பெற்றுவிட்டார்கள். ஷாட்புட், டிஸ்கஸ் த்ரோ போன்ற தடகளத்தின் மற்ற அம்சங்களில் மட்டுமல்லாமல் மல்யுத்தம், குத்துச்சண்டை, எடை தூக்குதல் ஆகியவற்றில் வடநாட்டு ஆடவரும், மகளிரும் போடுபோடென்று போடுகிறார்கள். அதிலும் குறிப்பாக பஞ்சாப் பெண்கள் பற்றிக் கேட்கவே வேண்டாம். கோதுமையின் மகிமை!

ஆனால் துப்பாக்கி சுடும் போட்டியில் நம்ம ஊர் ரூபா உன்னிகிருஷ்ணனுக்குப் பலத்த போட்டி கிடையாது. அதேபோல் ஆசிய விளையாட்டில் பதக்கம் பெற்ற குத்துச் சண்டை வீரர் தேவராசன் 'ஸாப்' போட்டிகளில் தேறிவரலாம். கால்பந்தில் சபீர் பாஷாவும், ஹாக்கியில் ஜூட் பெளக்ஸூம் இந்திய அணியில் இடம்பெறலாம்.

தடகளப் போட்டிகளில் தமிழ்நாட்டுப் பெண்கள் பரந்த அளவில் பங்கு பெறாததன் காரணம் என்ன? "இந்தக் கேள்விக்கு மனோதத்துவ ரீதியாகப் பதில் இருக்கிறது" என்கிறார் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பயிற்சியாளர் ஹர்சரண். "இந்த விஷயம் உங்கள் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது. தொடை தெரிய, டிராக் உடையில் நூற்றுக் கணக்கானவர்களுக்கு மத்தியில் திறமைகளைக் காட்ட வேண்டிய நிலை தடகள வீராங்கனைகளுக்கு உள்ளது. ஆதலால் உங்கள் தமிழகத் தாய்மார்கள் 'அதெல்லாம் என்ன அசிங்கமாக' என்று பெண்களின் ஆர்வத்தை மட்டம் தட்டுகிறார்கள்!" என்கிறார் அவர்.

இதுதவிர, ஏற்கெனவே தேசிய, ஆசிய அளவில் சாதனை புரிந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுப்பதிலும் சில வரைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் விமர்சகர்கள். "நிரந்தரமாக வேலை கிடைத்தவுடன் - அதுவும், அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்களில் கிடைத்தவுடன் அவர்களுக்கு இயல்பாகவே ஒரு சோம்பேறித்தனம் வந்துவிடுகிறது. அப்புறம், பிராக்டீஸ் செய்வதில்லை. நாளடைவில் லைம் லைட்டிலிருந்து விலகி சாதாரண ஊழியர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆதலால் இனிமேல் ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் ஆட்களை எடுக்கும்போது தாற்காலிகமாகத்தான் எடுக்க வேண்டும். தவிர, தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் வருடா வருடம் தங்கள் திறமையை நிரூபித்து நிறுவனத்துக்குப் பேர் வாங்கித்தர வேண்டும் என்று

சிலைவடிவம் பேசுதடி...
என் சிந்தை மயங்குதடி

தில்லை விளாகம் ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோயில், நாகப்பட்டினம் ஜில்லா திருத்துறைப்பூண்டி அருகே உள்ள எளியதோர் சிறு கிராமம். அதன் வடக்கே வேதாரண்யமும் வங்காள விரிகுடாவும் அமையப் பெற்ற தலம் இது. பஞ்ச லோகத்தினாலான ஸ்ரீ கோதண்ட ராமரின் திருமேனி, சீதா பிராட்டியார், தம்பி இலக்குவன், அனுமன் ஆகியோருடன் நின்ற திருக்கோலத்தில் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளது. விக்கிரகங்களின் வனப்பு காண்போரை செயலிழக்க வைக்கும் ஒரு புதிய அனுபவம். உயிருள்ளவையோ என்று வியக்கும் வகையில் மனித உடற்கூறுடன் ஒத்திருக்கும் இந்த விக்கிரகங்கள் அற்புதமான அழகு படைத்தவை. ஸ்ரீராமர், பிராட்டியார், இலக்குவன், அனுமன் ஆகியோரது கையிலும் காலிலுமுள்ள பச்சை நிற நரம்புகள், விரலிலுள்ள ரேகைகள், கைகால் நகங்கள், மற்றும் ரோமம் படிந்த அனுமனின் படிவம் அனைத்துமே சிற்பத்திறனின் சிறப்பிற்குச் சான்றாக அமைந்துள்ளன. கைகால் விரல்கள் தீர்க்கமாகவும் தனித்துத் தெரியும்படியும் செதுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு விக்கிரகத்தின் முகபாவத்திலும் சிற்பியின் கலைநயம் மிளிர்கிறது. ஸ்ரீராமன் கானகம் செல்லுமுன் அவனது தாய் கௌசலை இடது மணிக்கட்டில் கட்டிய ரக்ஷாபந்தன், இடது முட்டின் கீழே கட்டப்பட்டுள்ள ரகை, எழுத்துக்களுடன் கூடிய வில் முதலியன காண்போர் மனத்தைக் கொள்ளை கொள்கிறது. இலக்குவனின் முகத்தில் அலுப்பு தெரிகிறது. அனுமன் மெலிந்து அரிதாகக் காணப்பெறும் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். பதினான்கு வருட வனவாசத்தின்போது பட்ட துன்பக் கணங்களையும் தான் வடித்த சிலையிலே படிய வைக்கவே சிற்பி இவ்வாறாக அமைத்தான் போலும். ராமன் மஹாவிஷ்ணுவின் அவதாரமாக இருந்த போதிலும் தன்னிடமிருந்த தெய்வ சக்தி எதையும் பிரயோகிக்காமல் மனிதனைப் போன்றே வாழ்ந்தார் என்ற உண்மையை சிற்பத்தில் கொண்டுவர மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளார் சிற்பி. வாழ்க்கைப் போராட்டத்திலே மனிதனுக்கு வேண்டுவது தர்மமெனும் ஆற்றலே என்ற கருத்தை மனிதனுக்கு எடுத்துரைப்பதே இது. 1860 ஆம் ஆண்டில் இந்தச் சிலைகள் அம்பலக் குளம் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டன. 1892ஆம் ஆண்டு அதே இடத்தில் ஒரு வனப்பு மிக்க நடராஜர் சிலையும் கண்டெடுக்கப்பட்டு அதற்கென ஒரு தனிக் கோயிலும் கட்டப்பட்டது. இவ்வாறாக, ராமர் கோவிலும் நடராஜர் கோவிலும் ஒன்றையொன்று நோக்கிய வண்ணம் அமையப் பெற்று சிதம்பரத்தைப் போன்ற தனிச் சிறப்பைப் பெறுகிறது தில்லை விளாகம். கால ஓட்டத்திலே இத்தகைய முக்கியமான கோவில்கள் பராமரிப்பற்றுப் போய்விட்டாலும் இன்றைக்கும் என்றைக்கும் ஏற்புடையதாக இருக்கின்றன. ஹார்வெஸ்ட் தன்னாலியன்ற வழியிலே இவற்றை வெளிக் கொணரும் பணியினைச் செய்து வருகிறது. இது போன்ற வரலாறுகளை எழுதி அனுப்பினால் ஹார்வெஸ்ட் அவற்றை எந்தவித மத வேறுபாடுமின்றி வெளியிட தயாராக உள்ளது.



KALKI SHOPPING PAGE

டயானாவை பேட்டி கண்ட பஷீர்!

டயானாவின் பேட்டி பி.பி.சியில் ஒளிபரப்பாகி உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியதும் கேட்கப்பட்ட முதல் கேள்வி: "யார் இந்த பேட்டியாளர் பஷீர்? இதுவரை கேள்விப்படாத பெயராக இருக்கிறதே?"

பி.பி.சியில் டயானாவின் பேட்டி இடம்பெற வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்பே தீர்மானித்திருந்தார்கள். முழுப் பொறுப்பையும் நிக்கோலஸ் விச்செல் என்பவரிடம் ஒப்படைத்திருந்தார்கள். சில தவிர்க்க முடியாத காரணங்களால் பேட்டி தள்ளிப் போயிற்று. அதற்குள் விச்செல் பதவி உயர்வு பெற, மார்ட்டின் பஷீர் என்பவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

மார்ட்டின் பஷீரின் பெற்றோர் பாகிஸ்தானிலிருந்து லண்டனுக்கு வந்து குடியேறியவர்கள். 1989 ஆம் ஆண்டிலிருந்து பி.பி.சியில் பணியாற்றி வரும் பஷீர், இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசத்தில் பிரபலமாக விளங்கி வந்தார். பேட்டிக்காக இவர் டயானாவை அணுகியபோது, இவருடன் பணியாற்றுபவர்கள்கூட இவருக்குப் பேட்டி நிச்சயம் கிடைக்கப் போவதில்லை என்றுதான் கருதினார்கள்.

டயானா பேட்டி கொடுக்க ஒப்புக் கொண்டவுடன்தான் எப்படி பேட்டி எடுப்பதென்ற பிரச்னையே ஆரம்பமாயிற்று. டி.வி. காமிராவுடன் ஆட்களை கென்சிங்டன் அரண்மனைக்குள் எப்படி அழைத்துச் செல்வது? இந்தப் பேட்டி குறித்து டயானா கடைசிவரை பக்கிங்ஹாம் அரண்மனைக்குத் தகவல் கொடுக்கவே இல்லை!

நவம்பர் 5 ஆம் தேதி, பஷீர் உள்பட நான்கு பேர் டயானா தங்கியிருந்த அரண்மனைக்குள் பின்புற வாசல் வழியாக உள்ளே நுழைந்தனர்.



• பஷீர்

பதினேழாம் நூற்றாண்டில் பாராளுமன்றத்தை வெடி வைத்துத் தகர்க்க முயற்சி செய்த கெய் பாக்கஸ் என்ற கத்தோலிக்கரின் நினைவு நாளையொட்டி அரண்மனைக்கு வெளியே அன்று வாண வேடிக்கை நடந்து கொண்டிருக்க, டயானாவின் முதல் நேருக்கு நேர் பேட்டி ஆரம்பமாயிற்று. சுமார் ஒருமணி நேரம் நடந்த இந்தப் பேட்டியின்போது பதினைந்தாம் லூயிஸ் மன்னர் பயன்படுத்திய நாற்காலியில் அமர்ந்தபடி தம்முடைய மனத்திலிருந்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தார் டயானா. பி.பி.சியில் இந்தப் பேட்டி ஒளிபரப்பானபோது அதிர்ந்தது பக்கிங்ஹாம் அரண்மனை மட்டுமல்ல; உலகம் முழுவதும்தான்!

பஷீருக்கு இந்தப் பேட்டி ஒளிபரப்பான பிறகு அச்சுறுத்தல் ஏதும் வரலாமென்று கருதி பி.பி.சி. இவரைச் சில நாட்களுக்குத் தலைமறைவாக இருக்கச் சொன்னது. இவருடைய மனைவி டெபராவும் இரண்டு குழந்தைகளும் இருக்கும் இடத்தைக் கூட தெரியப்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்கள். இவரைப் பேட்டி காண பத்திரிகையாளர் கூட்டம் தினமும் இவரது வீட்டை முற்றுகையிட்ட வண்ணமிருக்கிறது.

இந்தப் பேட்டியால் ரொம்ப நிலைகுலைந்து போனவர் டயானாவின் அந்தரங்கக் காரியதரிசி பாட்ரிக் ஜெப்சன்தான்! தமக்குக் கூடத் தெரிவிக்காமல் டயானா இந்தப் பேட்டியைக் கொடுத்ததை விரும்பாத இவர் தம்முடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டார்!

– அ. குமார்

கண்டிஷன் போடவேண்டும்" என்கிறார்கள் அவர்கள்.

இதெல்லாம் சரி; பத்து நாள் களேபரங்கள் முடிந்த பிறகு கோடிக்கணக்கில் செலவழித்துக் கட்டப்பட்ட ஸ்டேடியங்களின் கதி என்ன ஆகும்? மாநாட்டுக்கு வரும் கட்சித் தொண்டர்களைத் தங்க வைக்கப் பயன்படுமா அல்லது ஆயிரக்கணக்கில் கோஷ்டிக் கல்யாணங்கள் நடத்தப் பயன்படுமா? விளையாட்டு ஆர்வலர்களின் இப்போதைய கவலை இதுதான்!

"தேசிய, ஆசிய, உலக அளவில் மிகச் சிறந்த வீரர்களைத் தயாரிக்க இந்த மைதானங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்" என்று சொல்கிறார் விளையாட்டு விமர்சகரான சுமந்த் ராமன். "அரசாலோ அல்லது விளையாட்டுக் கழகங்களாலோ சரியாகப் பராமரிக்க முடியாது. ஆகவே, "இந்தாருங்கள் ஸ்டேடியம்; இந்த விளையாட்டில் சிறந்த வீரர்களை உருவாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு" என்று சொல்லி தனியார் நிறுவனங்களின் கையில் ஒப்படைத்து விடவேண்டும். அந்த நிறுவனம் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று திறமையைக் குறிப்பறிந்து, அழைத்துவந்து பயிற்சி கொடுக்க வேண்டும். இதன் மூலம், மைதானங்களும் காப்பாற்றப்படும். திறமையான வீரர்களும், வீராங்கனைகளும் உருவாக்கப்படுவார்கள். இதற்கு 'எம்.ஆர்.எஃப்' பவுண்டேஷனும், பிரிட்டானியா நிறுவனமும் செய்து வருவதை முன்னோடியாகக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தோமானால் 1998 இல் பாங்காக்கில் நடக்க இருக்கும் ஆசியப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஜொலிச்சிடுவார்கள்" என்று சொல்கிறார் சுமந்த் ராமன்.

நாம் ஜெயிப்பதற்கு இத்தனை கஷ்டமெல்லாம் எதற்கு? லாட்டரி சீட்டு சுரண்டும் போட்டி, கட்அவுட் போட்டி, ஆஸிட் வீசும் போட்டி, கமிஷன் பர்ஸன்டேஜ் போட்டி ஆகியவைகள் வைக்கப்படுமானால் தங்கம் அனைத்தும் தமிழகத்துக்குத்தான் என்கிறீர்களா? அதுவும் சரிதான்!

— ப்ரியன்

அட்டை வண்ணப்படங்கள் : யோகா

கடல் அளவு கருணை காட்டுகிற கமலை!



ஒரு தலம், ஒரு பாடல், ஒரு நயம் - 20

சிவகணத்தார் எல்லோரும் விரும்பிப் பிறந்த மண் திருவாரூர் என்பர். அது கருதியே 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லோருக்கும் அடியேன்' என்று தொழுகிறார் சுந்தரர்.

பஞ்சபூதத் தலங்களில் பிருதிவித்தலம் திருவாரூர். விராடபுருஷன் என்கிற பிரபஞ்ச முழுமைக்கும் மூலாதாரம் ஆரூர் என்று ஆகிறது. பஞ்சபூதங்களில் மண் திருவாரூர். நீர் திருவானைக்கா. நெருப்பு திரு அண்ணாமலை. காற்று காளஹஸ்தி. ஆகாசம் சிதம்பரம்.


திருவாரூர்க் கோயில், 'பூங்கோயில்' என்று பொதுவாக அழைக்கப்பட்டாலும் பலப்பல தனித்தனிக் கோயில்களைத் தன்னுள் கொண்டது. அசலேசுவரம், ஆடகேசுவரம், ஆனந்தேஸ்வரம், விசுவகர்மேதவரம், சித்தீசுவரம், கமலாம்பாள் தியாகராஜர் சந்நிதி என்று பல கோயில்களை உள்ளடக்கிய பெருங்கோயில் இது. 'கோவில் ஐவேலி; குளம் ஐவேலி; செங்கழுநீர் ஓடை ஐவேலி' என்று கோவில் குளம் எல்லாம் பெரிய நிலப்பரப்பு உடையது. தெற்கு வடக்காக 666 அடி நீளமும் கீழ்மேலாக 846 அடி நீளமும் உடையது. மிகப் பழமை வாய்ந்த திருத்தலம் திருவாரூர்!

அப்பர், சம்பந்தர் போன்ற அருளாளர் பாதம் பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்வில் பெரும் தொடர்பு உடையது. சைவ மக்கள் குருபீடமாக விளங்கும் தருமபுர மடாலயத்தின் துறவியர் பெருமக்கள் இங்குள்ள மேதா தட்சிணாமூர்த்தி முன்பு உபதேசம் பெறுவது வழக்கம். தருமையாதீனக் குருமுதல்வர் குரு ஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்த கமலை ஞானப் பிரகாச தேசிகர் உகந்த தலம் திருவாரூர்.

நாதப்ரம்மத்தை உணர்ந்து, நாதோபாசனை செய்த சங்கீத மும்மூர்த்திகள் தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் போன்ற மகான்களின் இசை இழைந்த காற்று இன்னும் தவழும் திருத்தலம் திருவாரூர். திருப்பனந்தாள் திருமடம் கண்ட குருநாதர் குமர குருபரரால் திருவாரூர் நான்மணி மாலை பாடப் பெற்ற தலம். திருவாரூர்ச் சிறப்பைத் தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பேசிப் பேசி மகிழ்கிறார்.

சிவாலயங்கள் பெரும்பாலும் பாம்புப் புற்றுள்ள இடத்தில் இருந்து பிறந்ததாகத் தல வரலாறுகள் உண்டு. இங்குள்ள இறைவருக்கும் புற்றிடம் கொண்டார் (வன்மீகநாதர்) என்று பெயர். சிவம் என்பது செம்பொருள். இறைநிலை : அதை உணர்ந்து அதில் லயிக்கும் சீவன் (உயிர்) சிவனாகிறது. இப்படி சிவம் என்னும் பெருநிலையில் லயித்த சீவன் சிவனாக உலகை, உடம்பை, மறந்து உறைந்து விடுகிறது. அங்கு புற்று தோன்றி அவ்வுடல் மூடப்படு

சுகி சிவம்



கிறது. எனினும் அங்குள்ள ஆற்றல் பசுக்களையும் ஆன்மாக்களையும் தன் பக்கம் இழுத்து அருள்பாலிக்கிறது. இதுவே பெரும்பாலான சிவாலயங்களின் தோற்ற முறை. இப்படி புற்றிடம் கொண்ட பெருமானே திருவாரூர் இறைவர்.

திருவாரூரின் தனிச்சிறப்பே அங்கே தனியிடத்தில் குடிகொண்டிருக்கும் தியாகராஜர் தான். பொதுவாக எல்லாச் சிவன் கோவில்களிலும், உமையம்மையோடும் முருகனோடும் கூடிய சோமஸ்கந்தராக (ஸ+உமா+ஸ்கந்தர்) இறைவன் காட்சி தருவார். செம்பு, அல்லது பஞ்சலோகத்தில் திருமேனி இருக்கும். ஆனால் மூலவருக்கோ உற்சவருக்கோ உள்ள ஏற்றம் அவருக்குத் தருவதில்லை.

ஆனால் திருவாரூரில் தியாகராஜர்தான் மகாராஜா. உமையோடும் முருகனோடும் கூடிய ஸோமஸ்கந்தராகிய அவர்தான் 'செல்வத் தியாகராசர்'. பெரும்பாலான சொத்துக்கள் அவர் மீதுதான் உள்ளன. அவருக்குத்தான் தனி மரியாதை, ராஜாங்கம். அவர் பக்கம் உள்ள அம்மை திருப்பெயர் 'கொண்டி'. அவளை ''கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க் கொண்டியா யினவாறு கோதையே'' என்று அப்பரடிகள் பாடுகிறார். இவர்கட்கு இடையே 'வெள்ளிலை வேல் நம்பியாக' முருகன் இருக்கிறார்.

இந்த முழுமையான திருக்கோலத்தைக் காண முடிவதில்லை. மந்திரத் தகடுகளால் மறைக்கப்பட்டு பெருமான் திருமுகமும் அம்பிகை அருள்முகமும் மட்டுமே காட்டப்பெறும். அபிஷேக காலங்களில் திருக்கரத்தின் ஒரு பகுதியைக் காணலாம். மார்கழித் திருவாதிரை அன்று இடது பாதத்தையும், பங்குனி உத்தரத்தின் போது வலது பாதத்தையும் காணலாம்.

தியாகராஜருக்கு வலது பக்கத்தில் உள்ள பெட்டகத்தில் மரகதத்தால் ஆன சிவலிங்கம், வீதி விடங்கர் என்னும் பெயரில் உண்டு. காலை, மாலை இரண்டாம் காலங்களில் அவருக்கு அபிஷேகம். தியாகராசருக்குச் செங்கழுநீர்ப் பூக்கள் விசேட உகப்பானவை. விடுபூக்களால் செய்யும் அலங்காரம் சிறப்பம்சம். அவர் தியாகப் பெருமாள், ஆடரவக் கிண்கிணிக் கால்அழகர், செங்கழுநீர் அழகர், செவ்வந்தித் தோடழகர், தியாக விநோதர், கருணாகரத் தொண்டமான் என்கிற விருதுப் பெயர் உடையார்.

தியாகரோடு தொடர்புடைய பொருட்களுக்குத் தனிப் பெயர்கள் உண்டு. அவரது கொடி - தியாகக் கொடி. ஆசனம் -இரத்தின சிம்மாசனம். மாலை - செங்கழுநீர் மாலை. வாள் - வீர கண்டயம். ஆடுதண்டு - மணித் தண்டு. நடனம் - அஜபாநடனம். யானை - ஐராவணம். மலை - அரதன சிருங்கம். முரசு - பஞ்சமுக வாத்யம். குதிரை - வேதம். நாடு - சோழநாடு. ஊர் - திருவாரூர். ஆறு - காவிரி. பண் - பதினெண்வகைப் பண்கள்.

பஞ்சமுகவாத்யம் என்பது இவ்வூரின் தனிச்சிறப்பு. ஐந்து முகங்களை உடைய பெரிய முரசு அது. அதை வாசிப்பது தனிக் கலை. தியாகராஜரின் நடனத்திற்கேற்ப அது முழங்கப்படுகிறது. தியாகராஜாவின் நடனம் உலகப் புகழ்பெற்ற ஒன்று. அஜபா நடனம்.

படுத்த நிலையில் மூச்சுக் காற்றை உள் இழுத்து வெளிவிடும் போது நெஞ்சு நிமிர்ந்து தாழும். மற்றும் மேலும் கீழும் போய் வரும். அதுவே அஜபா நடனமாகத் திருவாரூரில் அமைந்துள்ளது. உயிரின் துடிப்பும், அசைவும், இயக்கமும் நடனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜபம் இன்றி இயங்கும் வெறும் சுவாசம் அஜபா - அதுவே அஜபா நடனம் எனப்படுகிறது. அதாவது திருமால் படுத்த நிலையில் சிவனை நினைந்த போது அவர் சுவாசத்தில் சிவன் ஆடிய ஆட்டமாக இது கருதப்படுகிறது.

இதனையே, ''மையஞ்சுடர் விடு நாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தானும்'' என்று அப்பர் அறிவிக்கிறார்.

தனபிரியா

வழங்கும்

சேமிப்பு திட்டங்கள்

◆ தனயோக ஃபிக்செட் டெபாசிட் திட்டம் ◆

டெபாசிட்களுக்கு 1 கிராம் தங்க காசு வழங்கப்படும்

க்யூமுலேடிவ் டெபாசிட்

வருடம்	டெபாசிட் தொகை	முதிர்வு தொகை	வருடாந்திர வட்டி	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	10,000	13,000	30.00%	2%
26 மாதங்கள்	10,000	16,000	27.69%	2%
36 மாதங்கள்	15,000	30,000	33.33%	3%

ஃபிக்செட் டெபாசிட்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	25%	ரூ. 5,000/-	5%

பென்ஷனர் மற்றும் முதியோர்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	30%	ரூ. 5,000/-	2%

தனபிரியா பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 25,000/- இரு மடங்காகிறது. 36 மாதங்களில் ரூ. 50,000/- ஊக்கப் பரிசு : 5 கிராம் தங்க காசு

தனயோக பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 50,000/- மும் மடங்காகிறது. 57 மாதங்களில் ரூ.1,50,000/- ஊக்கப் பரிசு : 9 கிராம் தங்க காசு

திருமகள் திருமண திட்டம் ரிக்கரிங் டெபாசிட் திட்டம்

ரூ.1000 x 25 மாதங்கள் அல்லது
ரூ. 500 x 25 மாதங்கள்

26ம் மாத துவக்கத்தில் ரூ. 50,000/- அல்லது ரூ. 25,000/- பெற்று 27ம் மாதம் முதல் மாதம் ரூ.1000/- அல்லது ரூ.500/- வீதம் 25 மாதத் திற்கு எந்தவிதமான வட்டி இல்லாமல் திரும்ப செலுத்தலாம் அல்லது ரூ. 25,000/-ஐ மறுமுதலீடு 10 வருட காலத்திற்கு செய்து ரூ.2,32,835 பெறுங்கள்

ஓய்வுதாரர் நலத் திட்டம்

குறைந்தபட்ச முதலீடு காலம் வட்டி விகிதம்	ரூ. 1 லட்சம் அல்லது அதற்கு மேல் 6 வருடங்கள் அல்லது அதற்கு மேல் 26 சதவிகிதம் வருடத்திற்கு மற்றும் 1800 சதுர அடியில் வீட்டு மனை திருமுல்லை வாயில் நகரில் இலவசமாக பத்திர பதிவு செய்து வழங்கப்படும் அல்லது ரூ. 15,000/- ரொக்கம்

DHANAPRIYA INVESTMENTS (INDIA) LIMITED

வட்டி தொகைக்கு முன் கூட்டின காசோலைகள் பின் தேதியிட்டு வழங்கப்படும்

● ஞாயிற்றுக் கிழமையும் அலுவலகம் இயங்கும் ●

தனபிரியா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்

காம்தார் பில்டிங் (2வது மாடி) 143/3. பிராட்வே, சென்னை - 600 108 போன் : 565668

கார்பரேட் அலுவலகம் : என்.34 துரைசாமி சாலை, தி. நகர், சென்னை -17. போன் : 8281116.

"விரைந்து சேருங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள்"





"மாதங்களில் மார்கழி நான்."

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்த ராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழி பாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவை களாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட் டிருக்கிறபடியால் மாதங்களுள் நாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது கிராண்ட் ஸ்வீட்ஸ்

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.





தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020.
போன் : 4915662
4914213

இந்தத் தியாகராஜர் இந்திரன் வழிபட்ட மூர்த்தி என்றும் முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனைக் கேட்டுக் கொணர்ந்தார் என்றும் சொல்வது உண்டு. விடங்கர் என்றால் உளிபட்டுச் செதுக்காமல் செய்யப்பட்டவர் என்று பொருள். உளிபடாத் திருமேனி விடங்கர் திருமேனி.

திருவாரூரில் எமனே சண்டேச்வர்ராக இருப்பது தனிச்சிறப்பு. எமசண்டர் அவர் திருநாமம். திருவாரூர்ப் பிறந்தார் எல்லாம் சிவகணத்தார் என்பதால் எமனுக்கு வேலை இன்மையால் சண்டேஸ்வரர் பதவி அவருக்கு. ஜடை, தாடி முதலியவற்றுடன், ஒரு காலை ஊன்றி முழந்தாளில் முகத்தை வைத்தபடி அவர் காட்சி தருகிறார். வழக்கமான சண்டிகேஸ்வரரும் ஆதிசண்டராக இங்கு உண்டு.

இங்கு சிவனடியார்கள் கூடி அமர்ந்திருக்கும் தேவாசிரிய மண்டபம் புகழ் உடையது. விறன்மிண்டர் என்னும் நாயனார், சிவபெருமானையே (தலைவரையே) 'நமக்குப் புறம்பானவர்' என்று அறிவித்த புரட்சி மண்டபம் அது. மேலும் நமிநந்தி அடிகள் நீரால் விளக்கெரித்த சிறப்பும் செருத்துணை நாயனார், கழற்சிங்க 'நாயனார் வரலாற்றுத் தொடர்பும் உடைய தலம் இது.

இங்குள்ள அம்பிகை திருநாமம் அல்லியங்கோதை. நீலோத்பலாம்பிகை என்பது வடமொழி. நான்கு திருக்கரங்கள். அவற்றுள் இடது திருக்கரம், தோழி ஒருத்தி இடுப்பில் சுமந்திருக்கும் குழந்தையின் (முருகன்) சிரசை வாஞ்சையுடன் தடவியபடி இருப்பது வேறெங்கும் காண முடியாதது!

பராசக்தி கமலாம்பாள் என்ற பெயரில் தனிக் கோயில் கொண்டு சக்திபீடமாகவும் இதனை ஆக்கி அருள்கிறாள். அம்மையின் பார்வை ஈசானியத்தில் விழுவது சிறப்பு. ஆடிப் பூரத்தில் அவளுக்குத் தனி விழா. அறிவானந்த வெள்ளத்தை அள்ளிச் சொரிந்து, பாசம், அக்கமாலை ஏந்தி, தாமரை சுமந்து நான்கு கரங்களோடு, கால்களை ஒன்றன் மேல் ஒன்றாக மடக்கித் தொங்க விட்டு யோகாசனத்து இருந்து அருள்கொழிக்கும் அழகே தனி! திருக்கோவிலுக்கு மந்த்ரபீடம், அட்சாபீடம் என்னும் பீடங்களாலும் பெரும் சிறப்பு! கமலாலய திருக்குளமோ பாவம் போக்கும் புண்ணிய தீர்த்தம்!

'திருவாரூர்த் தேரழகு' என்றபடி தேரால் புகழ்பெற்ற திருத்தலம் திருவாரூர்.

பொதுவாகச் சிவாலயங்களில் திருநந்தித்தேவர் அமர்ந்த நிலையிலேயே காட்சி அளிப்பது வழக்கம். இங்கோ நந்தி எம்பெருமான் நின்ற நிலையிலேயே காட்சி தருகிறார். இந்த வேறுபாட்டைக் குறித்து நயம்படப் பாடியவர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்வோடு தொடர்புபடுத்தி ஒரு கற்பனை செய்தார்.

சிவபெருமானுடைய நட்பைப் பெற்ற தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் திருவாரூரில் பரவை நாச்சியார் என்ற பெண்ணை மணந்தார். பிறகு அவரைப் பிரிந்து திருவொற்றியூர் வந்து சங்கிலி நாச்சியாரை மணந்து கொண்டார். அவ்விஷயத்தில் சிவபெருமான் அவருக்கு உதவியும் செய்தார். பிறகு சில காலம் கழித்து திருவாரூர் வந்தார். இன்னொரு மணம் செய்த செய்தி பாவைக்குத் தெரியும் என்பதால் இல்லம் செல்ல அஞ்சி இறைவனைத் தம் பொருட்டு தூது போக வேண்டினார். நட்பு கருதி இறைவர் தூது நடந்து சென்று பரவையாரைச் சமாதானப் படுத்தினார். தூது நடந்த செயல் பெருமானின் கருணைக்கு அடையாளம்.

தூது சென்ற போது தமது வாகனமாகிய நந்தி மீது செல்லாமல் நடந்து போனாராம் இறைவர். இனியொரு முறை இவ்வாறு நடந்து விடக் கூடாதே என்று அப்போது முதல் நந்திதேவர் alert ஆகித் தயாராக நிற்கிறாராம். அடியார் குறைதீர்க்க திருவடி நோக நடந்து விடக் கூடாதே என்று நந்தி தயாராக எழுந்து நிற்பதாகக் கற்பனை செய்கிறார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

"பிணை அடியார் குறைக்கிரங்கிப் பெருமான் நீ எழுந்தருளில்
துணை அடிகள் கன்றமுனம் தூது சென்றால் போலடையாது
அணைகுறியென் வெறிநிவர்ந் தென்றருள் நோக்கி நிற்பதுபோல்
இணையில் விடங்கப் பெருமான் எதிர் நிற்கும் மால்விடையே"

என்று தியாகராஜ லீலையில் பாடினார்கள்.

(தொடரும்)

"விதியை மதியால் வெல்ல முடியுமான்னு தேத்து தலைவரை கேட்டதுக்கு....''

''என்ன சொன்னார்...?''

'' 'நிதி'யால வெல்லலாம்னு சொன்னார்!''

— விஜயலட்சுமி பிரட்ரிக்.



ஜெ.ஜெ. டீ.வியில் ரபி பெர்னார்ட்!

● *நீங்கள் வேறு தொலைக்காட்சிகளில் வேறு மாதிரியான நிகழ்ச்சிகள் நடத்தினால் இந்தக் கேள்வியே எழாது. தி.மு.க. நிறுவனமான சன் டீவியில் அரசியல் பேட்டி நிகழ்ச்சி நடத்தி வரும் நீங்கள், எதிர் துருவத்துக்கு மாறிய காரணம் என்ன?*

புரிகிறது. நான் ஏதோ கட்சி மாறி விட்டது போல் கேட்கிறீர்கள். நான் ஒன்றும் அரசியல்வாதி அல்ல. சன் டீவியில் பணியாற்றுபவனும் அல்ல. நான் ஒரு ஜர்னலிஸ்ட். அஃப்கோர்ஸ், சன் மூலம்தான் நான் அடையாளம் காணப்படுகிறேன். ஆனால் ஜெ.ஜெ டீவியில் நெடுநாட்களாகவே என்னை ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடத்தித் தரச் சொல்லிக் கேட்டு வந்தார்கள். 'யோசிக்கிறேன், பிறகு சொல்கிறேன், இப்போது வேண்டாமே' என்றெல்லாம் சொல்லி, சமாளித்து வந்தேன். எனக்குத் தெரியும்; ஜெ.ஜெவில் நான் ஏதாவது செய்தால் மக்கள் மத்தியில் குழப்பம் வரும். என் 'Credibility' போய்விடும் என்று பயந்தேன். பாஸ்கரனிடம் கூட இதையே வெளிப்படையாகச் சொன்னேன். அவர்கள் அப்போதும் விடுவதாக இல்லை. தமிழ் சாட்டிலைட் டீவிக்களில் முதல் முதலாக ஓர் அரசியல் நிகழ்ச்சியைத் தொடங்கி, வெற்றிகரமாக நடத்தி வருபவன் என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் அவர், நான் செய்தே ஆக வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார். ஓரளவுக்கு மேல் மறுப்பதும் எனக்கு நாகரிகமாகப் படவில்லை. பந்தா காட்டுவதாக நினைத்து விடக்கூடும். தவிர எல்லா இடங்களிலும் இருக்கிற என் நண்பர்களை தான் இழக்கத் தயாராக இல்லை. அதனால்தான் ஒப்புக் கொண்டேன்.

● *இதனால் சன் டீ.வி. நிர்வாகத்தினர் வருத்தம் கொள்வது பற்றி உங்களுக்குக் கவலை இல்லையா?*

கடந்த ஜூனிலேயே ஜெ.ஜெவில் 'பெண்மை வாழ்க' என்றொரு தொடர் - நான் செய்யவிருப்பதாகச் செய்தி வந்தது தெரிந்திருக்கும். எல்லா டீவிக்களிலிருந்தும் ஆஃபர் வருகிறது. 'ஜெ.ஜெ'விலிருந்து வந்தால் மட்டும் அது செய்தி ஆகி விடுகிறது! சன் டீ.வி. இயக்குநர் கலாநிதி மாறன் இதனை நிச்சயம் நெகடிவாகப் பார்க்கமாட்டார் என்பதே என் அனுமானம்.

● *அவர் நெகடிவாகப் பார்ப்பதும் பார்க்காததும் ஒரு புறம் இருக்கட்டும். உங்களுக்கே ஒரு குறுகுறுப்பு இருக்குமே?*

நான் என்ன செய்யட்டும், சொல்லுங்கள். தர்ம சங்கடம்தான். பாஸ்கரன் மேல் எனக்கு ஒரு soft corner உண்டு. ஒரு பிரபல வாரப்பத்திரிகை பேட்டியில், 'சன் டீ.வி. நிகழ்ச்சிகளில் நீங்கள் ரசிப்பது எதை?' என்று கேட்டபோது தயங்காமல் 'ரபிபெர்னாடை ரசிக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்ல என்ன அவசியம் அவருக்கு? 'நான் சன் டீ.வி. பார்ப்பதே இல்லை' என்று சொல்லியிருக்கலாம். 'பிபிஸி தான் பார்ப்பேன்' என்று சொல்லியிருக்கலாம். ஆனால் மறைக்காமல், மனத்தில் பட்டதைச் சொல்லியிருந்தார். அந்தப் பண்பு எனக்குப் பிடித்து விட்டது. I felt obligated. அவர் மறுபடி மறுபடி கேட்ட போது மறுத்துக் கொண்டே இருப்பது டிப்ளமஸி ஆகாது என்று தோன்றியது.

● *போகட்டும். 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் ஆளும் கட்சியினரைக் கேள்விகளால் நீங்களே மடக்குவீர்கள். ஆனால் இங்கே அவர்கள் கூடாரத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்?*

"....எனக்குத் தெரியும்; ஜெ.ஜெவில் நான் ஏதாவது செய்தால் மக்கள் மத்தியில் குழப்பம் வரும். என் 'Credibility' போய்விடும் என்று பயந்தேன். பாஸ்கரனிடம் கூட இதையே வெளிப்படையாகச் சொன்னேன். அவர்கள் அப்போதும் விடுவதாக இல்லை...."

நெ

ரொம்ப
நான் தோ
தயாரிப்பு
பொது மக்
● அ
என்று எழு
சேச்சே
புதியவர்க
எப்படிக் கே
சரி.
● ஆ
இருக்கும்
நியாயங்க
அப்படி
ஹரிபாஸ்க
களைத்தான்
தவிர, அரசி
● இந்
வீர்களா, அ
அவர்க
தெடுக்கிறே
● நீங்



'சொல்லில் வருவது பாதி... ந்சில் தூங்கிக்கிடப்பது மீதி!''

லைபம். 'இந்த வாரம் இவர்' நிகழ்ச்சியில் வோ, பேசவோ போவதில்லை. ஸ்கிரிப்ட் ஓ சரி. வாரம் ஒரு பிரமுகர். அவரிடம் கேள்விகள் கேட்பார்கள்.

பிரமுகர் எப்படி பதில் சொல்ல வேண்டும் தருவதுதான் ஸ்கிரிப்ட்டா?

டி.விக்குப் பழக்கமில்லாத, கேமராவுக்குப் து, அவர்கள் எப்படிப் பேச வேண்டும், க வேண்டும் என்று சொல்லித் தருவதுடன்

அ.தி.மு.க. அரசின் மீது மக்களுக்கு இன்று திருப்திகளைப் போக்கி, அவர்கள் தரப்பு விளக்க ஒரு மேடைதானே இந்நிகழ்ச்சி?

சொல்கிறீர்கள்? தேவாரம், மலைச்சாமி, தியானேஸ்வரன் போன்ற உயர் அதிகாரி லந்து கொள்ள அழைக்கவிருக்கிறார்களே ல்வாதிகளை அல்ல.

பிரமுகர்கள் பெயர்களை நீங்கள் சொன் லது ஜெ.ஜெ. டி.வியினர் சிபாரிசா?

சொல்லும் நபர்களிலிருந்து நான் தேர்ந்

குறிப்பிட்ட அத்தனை நபர்களும் ஆட்சி யாளர்களுக்கு மிகச் சாதகமானவர்களாக அறியப்படுபவர் களாயிற்றே...?

ஸாரி. நாங்கள் அந்த நோக்கில் செயல்படவில்லை. மக்கள் மத்தியில் பிரபலமான அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்று யோசித்துத்தான்....


● *ஏன், இப்போது அ.தி.மு.க. அரசால் பழிவாங்கப் பட்டதாகப் புகார் தந்துள்ள மதுரை கூடுதல் கலெக்டர் உமாசங்கர் கூட, பிரபலமாகி விட்டவர்தானே? அவரைக் கூப்பிடலாமே?*

கூப்பிடலாம்தான்.

● *நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்கள் அ.தி.மு.க. அரசைக் கடுமையாக விமர்சித்துக் கேள்விகள் எழுப்பு கிறார்கள். அந்தக் கேள்விகளெல்லாம் வேண்டுமென்றே எழுதித் தரப்பட்டுக் கேட்கப்படுகிற கேள்விகள் தானா? நபர்களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறீர்கள்?*

இல்லை. அவர்களாகவேதான் கேட்கிறார்கள். தைரிய மாகக் கேட்கிறார்கள். எங்கள் co-ordinator மூலம்தான் பல் துறையைச் சேர்ந்த ஆண்-பெண்களைத் தருவிக் கிறோம்.

● *அவர்கள் கட்சிக்காரர்களாகவே இருந்து விட்டால் பிரச்னை இல்லை. அப்பாவிப் பொதுஜனம் என்றால்... இசகுபிசகாகக் கேட்டுவிட்டுப் பின்னால் ஏதாவது 'பாதிக்க'ப்பட்டால்?*




அதெல்லாம் ஆகாது. ஜெ.ஜெ. டி.வியின் ப்ரோகிராம் மானேஜர் முரளிராமனிடம் இதுமாதிரி யெல்லாம் சந்தேகங்களை நானே கேட்டேன். 'இது டி.வி.தான். தயவு செய்து கட்சியாகப் பார்க்க வேண்டாம்' என்று தீர்மான மாகச் சொன்னார்.


● *எல்லா கேள்விகளுக்கும் தயங்காமல் பதில் சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் பேசிய அனைத் தையும் தொகுத்துப் பார்த்தால் எங்கோ நழுவுவது போல உங்க ளுக்கே தெரியவில்லையா?*

நழுவுகிறேனா? அப்படியா தோன்றுகிறது? இருக்கலாம். இல் லாமலும் இருக்கலாம். சொல்லில் வருவது பாதி; நெஞ்சில் தூங்கிக் கிடப்பது மீதி... தெரிந்ததுதானே?


பேட்டி : **ஔரங்கசீப்**



1960s



1970s



1990s

A TRADITION OF TRUST & SERVICE

SINCE 1946

இவற்றில் ஒவ்வொன்றுடனும் ITI,
வெற்றிப் பாதையில் சிறிது தூரம்
பயணம் செய்திருக்கிறது.

ICRA RATING
MAA+
HIGH SAFETY

- பிக்செட் டெபாசிட்டுகள் • ஹயர் பர்ச்சேஸ்
- லீசிங் • மர்ச்செண்ட் பாங்கிங்
- மியூச்சுவல் ஃபண்டுகள் • நிதியுதவி சேவைகள்.

அரசியல்வாதிகள் இப்படியும் இருப்பவர்கள், அப்படியும் இருப்பவர்கள். ஆனால் ஒரு நாட்டின் அரசு அலுவலர்கள் - உயர் அதிகாரிகள் நேர்மையானவர்களாக, திறமைசாலிகளாக இருந்து விட்டால் நாட்டின் வளர்ச்சிக்குக் குந்தகம் இருக்காது.

'அதிகாரிகளை ஆட்டுவிப்பவர்கள், அரசியல்வாதிகள் தானே?' என்று கேட்கலாம். ஆனால் திறமைவாய்ந்த அதிகாரிகளை, அவர்களின் வழிகாட்டுதல்களை அரசியல்வாதிகள் நிச்சயம் செவிமடுப்பார்கள்! கூடிய மட்டும் கடைப்பிடிக்க முயற்சி செய்வார்கள். நான் முன்பு சொன்ன உள்துறை கூடுதல் செயலர் சீனிவாச வரதன் அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு ஓர் உதாரணம்.

இந்த வகையில் பாகிஸ்தான் அரசு அதிகாரிகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

மத்திய அரசின் உள்துறையில் நான் இணைச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒரு தரம் பாகிஸ்தான் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. 1972ல் இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே சிம்லா ஒப்பந்தம் நிறைவேறியது ஞாபகம் இருக்கலாம்.

அந்த ஒப்பந்தத்தின் தொடர்பாக, இரு நாடுகளுக்கிடையே போக்குவரத்து, தபால் பரிமாற்றம் போன்ற விஷயங்களில் விரிவான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி வந்தது. இதற்காக இந்திய வெளியுறவுத் துறை, உள்துறை, தபால்துறை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று 1974-இல் பாகிஸ்தான் சென்றது.

வெளியுறவுத் துறைச் செயலாளராக இருந்த கேவல்சிங் தலைமையில் சென்ற அக்குழுவில், உள்துறைப் பிரதிநிதியாக நான் இருந்தேன். மூன்று நாட்கள் இஸ்லாமாபாத்தில் நாங்கள் தங்குவதாக ஏற்பாடு.



முதல்வர் ராஜாஜியும்

எனக்கு மிகப் பெரிய ஆச்சர்யம். அரசியல் ரீதியல் பாகிஸ்தானோடு நமக்கு எப்போதும் சுமுகமான உறவு இருந்ததில்லை. ஆனால் நிர்வாக ரீதியில் எனது அந்தப் பயணத்தில் - பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் நடந்து கொண்டவிதம், தந்த ஒத்துழைப்பு பிரமிப்பாக இருந்தது!

வேகம் என்றால் அப்படியொரு வேகம்! எதிர்பாராத சுறுசுறுப்புடன் பணிகள் நடந்தேறியதும், எங்களுடன் மிகுந்த அன்பாக, நட்பாகப் பழகியதும், வேண்டிய அத்தனை உதவிகளையும் சற்றும் முகம் சுளிக்காமல் செய்து தந்ததும்... நாங்கள் மூன்று நாட்களில் முடிக்க திட்டமிட்டுக் கொண்டு போன காரியங்கள் ஒன்றரை நாளிலேயே முடிந்து விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

கடைசி நாள் ரொம்ப 'free' ஆக இருந்தோம்.

அப்போது எனக்கொரு ஆசை எழுந்தது! வரலாற்றுச் சிறப்பு மிக்க தட்சசீலம் பாகிஸ்தானில்தான் இருக்கிறது. போய்ப் பார்த்து

●●

ஆளைப் பார்த்தால் 'இவரா?' என்று கேட்கத் தோன்றும். அத்தனை ஒல்லி; அத்தனை அமைதியானவர். ஆனால் அவரது நிர்வாகத் திறமை - கூர்மையான அரசியல் ஞானம் - பாரத நாட்டுக்கும், தமிழ் நாட்டுக்கும் எவ்வளவோ நல்லது செய்திருக்கின்றன.

●●

சி. வி. நரசிம்மன்

தி.மு.க. காட்டிய கறுப்புக் கொடியும்!

'நிர்வாகம்' என்றவுடன், அதற்கு இலக்கணம் வகுத்த நபர் ஒருவர் நம் நாட்டிலேயே இருந்தவர் – உடனே நினைவுக்கு வருகிறார். எத்தனையோ சிறந்த நிர்வாகிகளைச் சந்தித்திருந்தாலும் அவருக்கு இணையாக இன்னொருத்தரைச் சொல்ல முடியாது என்னால்! ஆளைப் பார்த்தால் 'இவரா?' என்று கேட்கத் தோன்றும். அத்தனை ஒல்லி; அத்தனை அமைதியானவர். ஆனால் அவரது நிர்வாகத் திறமை – கூர்மையான அரசியல் ஞானம் – பாரத நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் எவ்வளவோ நல்லது செய்திருக்கின்றன.

அவர் யாரென்று புரிந்திருக்கும்; ராஜாஜி!

ராஜாஜியை நிர்வாக முறையில் முதல் முதலில் நான் சந்தித்தது – அவருக்குக் கறுப்புக் கொடி காட்டிய ஒரு சம்பவம் நடந்த சமயம்! 1953-ம் ஆண்டு!

அப்போது நான் சேலம் மாவட்ட போலீஸ் சூப்பிரின்டென்டன்டாக இருந்தேன். முதல்வர் ராஜாஜி, மூன்று நாள் சேலம் சுற்றுப் பயணம் அறிவித்திருந்தார். அவர் சேலத்துக்கு வருகிற சமயம், கறுப்புக் கொடி காட்டி, எதிர்ப்புத் தெரிவிக்க திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதி வாங்கியிருந்தது.

அந்தக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி கொடுத்த கையோடு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தீவிரமாக முடுக்கி விட்டிருந்தேன்.

அன்று காலை சூரமங்கலம் ரயில் நிலையத்தில் வந்து இறங்கும் ராஜாஜி, அங்கிருந்து காரில் டவுனுக்கு வந்து, சர்க்யூட் ஹவுஸ் போக வேண்டும். சேலம் டவுன் பிரிட்ஜ் தாண்டி, ஒரு மைதானத்தில் நின்று கொண்டு, கறுப்புக் கொடி காட்ட அனுமதி வழங்கி இருந்தோம்.

கிட்டத்தட்ட ஆயிரம் பேர் இருந்திருப்பார்கள். பின்னாளில் அமைச்சரான ராஜாராம் உட்பட பல முக்கிய தி.மு.க. பிரமுகர்கள் அங்கே கூடியிருந்தனர். வெறும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் என்பது, எந்த நிமிடமும் அசம்பாவிதமாகி விடலாம் என்கிற சூழல். உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தாலும் எனக்குக் கவலை, கவலைதான்!

உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் ஒரு முடிவெடுத்து, ராஜாஜியிடம் "சர்க்யூட் ஹவுஸ்தானே போக வேண்டும்? டவுன் பிரிட்ஜ் வழியே போகாமல் சூரமங்கலம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வேறு வழியே சர்க்யூட் ஹவுஸ் போய் விடலாமே!" என்று யோசனை சொன்னார்கள்.

ராஜாஜிக்குக் கோபம் வந்து விட்டது. "எதற்காக வேறு வழியில் போக வேண்டும்? போலீஸ், பாதுகாப்பு போட்டிருக்கிறதல்லவா? அந்த வழியாகவே போகலாம். பாதை மாற்றிச் சென்றால் மட்டும் கறுப்புக் கொடி காட்டாமல் விட்டு விடுவார்களா? இன்று இல்லை என்றால் நாளை காட்டுவார்கள்! மக்கள் தொகை பெருகிக் கொண்டே இருக்கிறது என்பதால் சென்சஸ் எடுக்காமல் விட்டு விடுவீர்களா? அது போல்தான் இதுவும்!" என்றார்.

அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் அன்று

வந்தால் என்ன?

என் விருப்பத்தை, கேவல் சிங்கிடம் சொன்னேன்.

அவருக்கு அதில் விருப்பமிருந்தாலும் தயங்கினார். "எதற்கு இதைப் போய் அவர்களிடம் கேட்க வேண்டும்? வந்த காரியம் முடிந்ததும் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு ஊர் திரும்பலாமே!" என்பது அவர் எண்ணம். இருப்பினும், "சரி, கேட்டுப் பாருங்கள். நடந்தால் சரி" என்றார்.

நான் உடனே பாகிஸ்தான் உள்துறைச் செயலரைத் தொடர்பு கொண்டு, என் விருப்பத்தைத் தெரிவித்ததுதான் தாமதம்.

"அதற்கென்ன! உடனே ஏற்பாடு செய்கிறேன்!" என்று உற்சாகமாகச் சொன்னவர், உடனே எங்களுக்காக சிறப்பு வாகனம் ஒன்று அனுப்பி வைத்தார்.

அன்று தட்சசிலம் சென்று வரலாற்று நினைவுச் சின்னங்களைக் கண்டுகளித்து, போரினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டு, – அங்கே ஒரு சிறந்த மியூசியம் உண்டு; அதையும் சுற்றிப் பார்த்து விட்டு, திரும்பும் வழியில் மிக முக்கியமான ஒரு சீக்கியப் புனிதத் தலத்துக்கும் அழைத்துப் போனார்கள். 'பஞ்சா சாப்' என்று பெயர் அதற்கு. அங்கேயும் சென்று வணங்கி விட்டு, பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு நன்றி சொல்லி, விடைபெற்றோம்.

நட்புணர்வோடு பழகிய அந்த நிர்வாகிகள் இன்றும் என் நினைவில் நிற்கிறார்கள்.



"அ.தி.மு.கன்ற பேரே கட்சியின் கொள்கையையும் செயல் திட்டத்தையும் குறிக்குதுன்னு தலைவர் சொன்னாரே, என்ன அர்த்தம்?"

"அனைவருக்கும் திருமணம் முடிக்கின்ற கழகம்!"

— எஸ். எஸ். பூங்கதிர்

அவரை சர்க்யூட் ஹவுஸில் கொண்டு சேர்த்ததும்தான் எனக்கு மூச்சே வந்தது!

அவர் எடுத்த முடிவுகள் அனைத்தும் ஆழ்ந்து ஆலோசித்து பொதுநலனை நோக்கி எடுத்த முடிவுகள். அவசர முடிவுகள் அல்ல. தாம் எடுக்கும் முடிவுகளில் – என்ன நேர்ந்தாலும் உறுதியாக நின்று ஜெயிக்கிற அவரது வேகம், சாமர்த்தியம் என்னைப் பலமுறை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

1953ல் சென்னையிலிருந்த போலீஸ் கான்ஸ்டபிள்களும் ஹெட் கான்ஸ்டபிள்களும் வேலை நிறுத்தம் செய்தனர். சம்பள உயர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள்.

ஆனால், 'மக்களின் காவல் பணியில் ஈடுபடும் ஒரு துறையினர் இப்படிப் பொறுப்பில்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது' என்று முதல்வர் ராஜாஜி உறுதியாகச் சொன்னார்.

அப்போது சஞ்சீவி என்பவர் ஐ.ஜி. ஆக இருந்தார். தேவசகாயம் சென்னை கமிஷனராகவும், அருள், டெபுடி கமிஷனராகவும் இருந்தார்கள்.

வேலை நிறுத்தம் தொடங்கியவுடன் ராஜாஜி நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் ஐஜி சஞ்சீவி, ராஜாஜியிடம் "சார்! நிலைமை மிக சீரியஸாக உள்ளது. போலீஸாரை அடக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. Armyஐக் கூப்பிட்டு நிலைமையைச் சமாளிக்க வேண்டும்" என்றார்.

ராஜாஜி ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்தார். Armyயைக் கூப்பிடுவதென்பது, மாநில அரசின் கையாலாகத்தனத்தைக் காட்டும் என்று அவர் நினைத்தார். சஞ்சீவியின் யோசனையை உடனே அவர் புறக்கணித்தார்.

சென்னை அதிகாரிகளான தேவசகாயத்துடனும், அருளுடனும் பேசி, அவர்கள் தங்களால் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று சொன்னதன் பேரில், அவர்களுக்குத் தெளிவான, தீர்மானமான உத்தரவுகள் கொடுத்து செயல்படச் செய்தார்.

அருள் தலைமையில் உடனே மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள், அவர் நடத்திய லத்தி சார்ஜ், வேலை நிறுத்தத்தின் தலைவர்களாக இயங்கிய போலீஸாரின் கைது – இவைகள் காரணமாக போலீஸ் ஸ்ட்ரைக் ஒரே நாளில் முறியடிக்கப்பட்டது. இதன் தொடர்பாக அரசு சஞ்சீவியை லீவில் போகச் சொல்லி, தேவசகாயத்தை ஐஜியாக நியமித்தது.

இது ஒருபுறம் இருக்க, ஸ்டிரைக் முறியடிக்கப்பட்டபின், வேலை நீக்கம் செய்யப்பட்ட போலீஸ்காரர்கள் தங்களை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளக் கேட்டார்கள்.

ராஜாஜி வெகுண்டு எழுந்தார்! "ஒழுங்கு காக்க வேண்டிய காவலர்களே ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். எதை வைத்து அவர்களை மறுபடியும் பணியில் சேர்ப்பது? அதெல்லாம் முடியாது!" என்று முற்றிலும் மறுத்து விட்டார்.

பின்னால் அவர்கள் குடும்பங்களின் நலனைக் கருதி பணியில் சாதனைகள் படைத்த, சிறந்த காவலர்களை மட்டும் – நேரடியாகப் போலீஸ் துறையில் அல்லாமல், சீருடையுடன் இயங்கும் வனத்துறை, சிறை நிர்வாகம் போன்ற வேறு சில துறைகளில் பணியில் சேர்க்கலாம் என்று ஒப்புதல் அளித்தார். காவல் துறையில் அவர்களைச் சேர்க்கவே இல்லை. அவர் எதிர்பார்த்த 'டிஸிப்ளின்' அத்தகையது!

ஆட்சியின் அமைப்பும் தரமும் மாவட்ட நிலையில் மிகச் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறை அலாதியானது. பாராட்டுதலுக்கும் பின்பற்றுதலுக்கும் உரிய விஷயம். செகரட்டேரியட்டில் இருந்த சீனியர் ஐ.சி.எஸ். ஆபீசர்களையெல்லாம் மாவட்டங்களுக்குக் கலெக்டர்களாக அனுப்பினார் ராஜாஜி.

"செயலகம் அதும்பாட்டுக்கு நடக்கும். நல்ல, மூத்த ஆபீசர்களெல்லாம் கலெக்டர்களாப் போயி நிர்வாகத்தை ஒழுங்கா கவனிக்கணும். இங்க எதுக்கு தண்டத்துக்கு?" என்பார் ராஜாஜி.

மூத்த ஐ.சி.எஸ். ஆபீசர்களான என். இ.எஸ். ராகவாச்சாரி, ஆர்.எம். சுந்தரம், சி.ஏ. ராமகிருஷ்ணன், சி.எஸ். ராமச்சந்திரன், லோபோ பிரபு போன்றவர்களையெல்லாம் தென் மாவட்டங்களுக்கு கலெக்டர்களாக அனுப்பி, பல பணிகளைச் செம்மையாகச் செய்ய வைத்தார் ராஜாஜி.

சொல் – செயல் – சிந்தனை மூன்றிலும் தேசநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அவர் போன்ற தலைவரைப் பார்ப்பது அரிது!

(அடுத்த வாரம்)

"மூட்டுவலி உங்கள் வாழ்க்கையை துயர் மிக்கதாய் ஆக்குகிறதா ?"



திருமதி. சங்கரி பி. ஐயர்
செயலாளர்,
திருவான்மியூர் லயன்ஸ் கிளப்,
17, பாஷா தெரு, குளமேடு,
சென்னை - 94.

" இன்று லயன்ஸ் கிளப்பில் நான் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறேன் TABE சிகிச்சைக்கு நன்றி".

"நீராதவலி, முதலில் 1984-ல் தொடங்கியது. 1993 ஆண்டு அளவில் என்னால் நடக்க முடியவில்லை. திருவான்மியூர் லயன்ஸ் கிளப்பின் முன்னாள் தலைவியாகவும், சுறு சுறுப்பாகச் செயல்படும் ஓர் உறுப்பினராகவும் இருந்த நான், சங்கத்தின் கூட்டங்களுக்குக் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. குதிகால் எலும்பில் ஏற்பட்ட வலி என் வாழ்க்கை முறையையே பாதித்துவிட்டது.

அதன் பிறகு ஒரு நாள் என் கணவரும் நானும் TABE விளம்பரத்தைப் பார்த்து, அன்று மாலையே அந்த சிகிச்சை நிலையத்திற்குச் சென்றோம். அங்கு அவர்கள் கூறிய முறைப்படி சிகிச்சையைப் பின்பற்றினேன். சிகிச்சை தொடங்கிய 15 நாட்களிலேயே நான் நிவாரணத்தை உணர்ந்தேன். ஒரு மாதத்திற்குப் பிறகு சிறந்த முன்னேற்றம் கண்டேன். இப்போது, சிகிச்சை முடிந்து 2 வருடங்களுக்கு மேலாகியும் எனக்கு வலியேதும் தெரியவில்லை. TABE சிகிச்சைக்கு நானும் என் கணவரும் என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம்."



திருமதி. வித்யா வாக்ளே
3, சர்வமங்களா நிவாஸ்,
28, வெங்கடராமன் தெரு,
சென்னை - 17.

"கிட்டத்தட்ட 8 வருடங்களாக ஆஸ்டியோ-ஆர்த்திரிட்டிஸ் பிரச்சனையால் என் வாழ்வில் எத்தனையோ சிரமங்கள்... தொடக்கத்தில், இதன் கடுமையான விளைவுகளைச் சிறிதும் சிந்திக்காமல், சுறுசுறுப்பான மற்ற பெண்களைப் போலவே நானும் வலியையும் தொல்லையையும் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டேன். வலி மிக மிகக் கடுமையானதும் தான் நான் உதவியை நாடினேன். இங்கும் அங்கும் நடமாடுவதும் தடைப்பட்டது. இளமையுடன் சுறுசுறுப்பாக பல்வேறு பணிகளை செய்து வந்த எனக்கு, இந்த நிலைமையை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. மேலும், பள்ளி செல்லும் என் குழந்தைகளிடம் எப்போதும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

இதர சிகிச்சை முறைகளைச் செய்து பார்ப்பதை விட TABE சிகிச்சை செய்வது என்று முடிவு செய்தோம்-- பத்திரிக்கைகளில் ஒரு சில விளம்பரங்களை பார்த்த பிறகு... அங்குள்ள டாக்டர்கள் மிகமிக உதவியாக இருந்தனர். இப்போது நான் மீண்டும் சுறுசுறுப்பான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். சிரமமாக இருந்த பணிகளையும் இப்போது எளிதில் மகிழ்ச்சியுடன் செய்ய முடிகிறது."

"தர்மார்த்த காமமோக்ஷாணாம் ஆரோக்யம் மூலம் உத்தமம்"
-சரகசூத்திரம் 1:15

"தர்மம், செல்வம், சந்தோஷம், மோட்சம் இவற்றின் உயரிய-அடிப்படையே உடல் நலம் என்பதை நாங்கள் "TABE"யில் நம்புகிறோம்."

★ காலத்தால் சோதிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை பவுல்டிஸ் (poultice) மூலம் TABE சிகிச்சை நிலையங்கள் விரிவானதொரு வெளிப் பிரயோக சிகிச்சை திட்டத்தை ஆர்த்ரிட்டிஸ், ஸ்பாண்டிலிட்டிஸ், தோள்பட்டை வலி, இடுப்பு வலி, குதிகால் வலி போன்றவைகளுக்கு தகுதி வாய்ந்த ஆயுர்வேத மற்றும் அலோபதி டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குகின்றன.

★ "இரு வேறு நபர்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை" என்பதை TABE சிகிச்சை நிலையங்கள் நன்கு உணர்ந்துள்ளன. எனவே, காலம் மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம்.

கலந்து ஆலோசிக்க, இப்போதே தொடர்பு கொள்க: தொலைபேசி: 8553772

1, ஸ்ரீரங்கம் அவின்யூ, 53, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 8
காலை 9.00 மணி முதல்; இரவு 7.00 மணி வரை.
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

TABE TREATMENT CLINICS

அனைத்து முக்கிய கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடைக்குப்



தூரத்திலே இருந்து பார்த்தபோதே மணியக்கார ஐயரின் உருவம் தெரிந்தது. அவரும் இவனை எதிர்பார்த்திருப்பார் போலும்! அருகில் சென்ற போது புன்னகை செய்தார். முன்பு பார்த்ததற்கு இப்போது ரொம்பவும் தளர்ந்திருந்தார்.

"இப்பத்தான் வர்றயா ராமகிருஷ்ணா?"

"ஆமா மாமா. காலையில் அஞ்சரை மணி பஸ் பிடித்தேன். மாறி மாறி, டவுன் பஸ்ஸில் சவாரி செய்து வருவதற்குள் வெயில் கொளுத்த ஆரம்பித்து விட்டது."

"சரி... சரி... உள்ளே வா. முகம், கைகால் அலம்பிண்டு கொஞ்ச நேரம் தோட்டத்தில் போய் உட்காருவோம்."

"அம்மா எங்கே?"

"உள்ளே வாயேன். சாவகாசமாப் பேசுவோம்!"

கையில் கொண்டு வந்திருந்த சிறிய பெட்டியை முற்றத்துத் தூணில் சாய்த்து வைத்தான். அண்டாவிலிருந்து 'ஜில்'லென்ற கிணற்று நீரைப் பார்க்கும் போதே பரவசம் உண்டாயிற்று. மணியக்காரர் மனைவி நீர் நிரம்பிய செம்பைத் தந்து, 'சௌக்கியமா' என்றதற்கு சிரிப்புடன் தலையாட்டினான். முகம் கைகால் எங்கும் குளிர்ந்த நீர் பரவியது. முகத்தைத் துடைத்துக் கொண்டு கொல்லைப்புற கதவைத் திறந்து கொண்டு உட்கார்ந்தான். ஐயர் அவனைக் தாண்டி படியில் இறங்கி இரண்டாவது கருங்கற்படியில் உட்கார்ந்து கொண்டார். கொல்லையிலிருந்த காற்று இவர்களைக் கடந்து தழுவிப் போனது.

"லெட்டர் வந்ததா ராமகிருஷ்ணா?"

தலையசைத்தான்.

"நீ என்ன முடிவு பண்ணியிருக்கே?"

என்னவென்று சொல்ல? ஒன்றும் தோன்றாமல் எதிரேயிருந்த பாதாம் மரத்தைப் பார்த்தான். இந்த மரத்தின் மேல் எத்தனை முறை ஏறி காய் பறித்திருப்பான்? கீழே சின்ன அண்ணா சிவராமன் நிற்பான். ஏறி, காயைப் பறித்துப் போட வேண்டியது ராமகிருஷ்ணன் வேலை. நடுவே குப்பை கொட்ட கொல்லைக்கு வரும் ஐயர் மாமி இவர்களை எதேச்சையாகப் பார்த்து,

"என்னடா பண்றேள் அங்கே?"

இருவரும் இறங்கி, திபுதிபுவென்று ஓடுவார்கள். கணக்குப் பார்த்து, பிரித்துக் கொடுக்க நடுவர் கோடி வீட்டு கிட்டு. கமி

ஷனாக அவனுக்குச் சில காய்கள். அந்த நாட்கள்... அந்த சந்தோஷம் எங்கே? பெருமூச்சு விட்டான்.

"அம்மா எங்கே மாமா?"

"சொல்லி அனுப்பியிருக்கேன். அநேகமா வந்துண்டே இருப்பா. அவ வர்றத்துக்கு முன்னாடி உன்னண்டை கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. அதான் வழியிலேயே உன்னை மடக்கி இங்கே அழைச்சுண்டு வந்துட்டேன்."

"சொல்லுங்க மாமா."

"உங்கம்மாவுக்கு வயசு அதிகமாயிடுத்து. தள்ளாமை முன்னைக்கு இப்ப ஜாஸ்தி. உங்க அப்பா போனதுக்கப்புறம் இல்வளவு நாள் தனி ஆளா காலம் தள்ளிட்டா. யார் தயவும் இல்லாம அவ வேலைகளைத் தானே பார்த்துக்கறது, கோயிலுக்கு தினமும் மாலை கட்டிக் கொடுக்கறது, குத்தகைக் காரனை விரட்டறது... எல்

தாழ்

போட்டிக் கதை - 15

லாம் இல்வளவு நாள் அவளே பார்த்துண்டது சரிதான். இனிமேலும் அவளைத் தனியா விடறது நல்லதில்லை. நீங்க யாராவது அவளைக் கொண்டு போய் வெச்சுக்கறதுதான் நல்லது."

அவன் பேசாமல் இருந்தான்.

"உங்க கஷ்டம் எனக்குப் புரியறது. ரெண்டு பேர் வேலை பார்க்கிற சிட்டி வாழ்க்கை எவ்வளவு யந்திரத்தனமானதுன்னு எனக்குத் தெரியும். ஆனா எனக்கும் வயசாறது. என் பையன் கிட்டே, டெல்லிக்குப் போயிடலாமான்னு நானும் மாமியும் யோசிச்சண்டிருக்கோம். வர வர கிராமமும் டவுன் மாதிரி ஆயிண்டிருக்கு. ஊர் பூராவும் ஒரே குடும்பமா வாழ்ந்த காலமெல்லாம் போயாச்சு. அதனாலத்தான் உங்கம்மா சார்பா நானே உங்க எல்லார்க்கும் லெட்டர் போட்டேன்."

"அதைப் பார்த்துதான் கிளம்பி வந்தேன். அண்ணாக்கள் கிட்டேயிருந்து ஏதாவது பதில் உண்டா?"

"இதுவரை இல்லை. எதிர்பார்த்துண்டு இருக்கேன்."

அந்த லெட்டர் படுத்திய பாட்டை யோசித்துப் பார்த்தான். அன்று இரவு அவன் வந்த உடனேயே சாந்தா ஆரம்பித்து விட்டாள்.

"உங்க அம்மாகிட்டேயிருந்து லெட்டர் வந்திருக்கு."

"ம்... ம்..." அவன் கேட்காவிட்டாலும் அவள் விடப் போவதில்லை. அவளே சொல்லட்டும்.

"உங்கம்மாவுக்கு வயசாயிடுத்தாம். இனிமேயும் தனியா இருக்கறது கஷ்டமாம். யாராவது ஒருவர் பொறுப்பிலேதான் இருந்தாகணுமாம். அதனாலே வந்து அழைச்சிட்டுப் போக முடியுமான்னு கேட்டு மணியக்காரர் எழுதியிருக்கார். அதிலே ஒரு கண்டிஷன் வேற. அம்மாவை யார் வெச்சுக்கறாங்களோ அவங்களுக்குத்தான் கிராமத்திலிருக்கிற நிலமாம். இல்லையென்றால் கிடையாதா?"

"மணியக்காரர்தானே எழுதியிருக்கார்?"

"அம்மா சொல்படி மணியக்கார ஐயர்னு எழுதியிருக்கே!"

"என்ன தப்பு? யார் வெச்சுக்கறாங்களோ அவங்களுக்குக் கொடுக்க வேண்டியதுதானே நியாயம்?"

"வெச்சுக்கறத்துக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? உங்க அண்ணன்களுக்கு என்ன குறை? அவங்க என்ன உங்களை மாதிரி பியூனா? பெரியவர் டெல்லியிலே ரேடியோவில ஆபீசர். அடுத்தவர் பீகார்லே பேங்க்லே இருக்கார். ரெண்டு பொண்களை பெத்து வெச்சிட்டு அவஸ்தைப்படறது நாம்தானே?"

"எங்க அம்மாவை நம்பியா பெத்துக்கிட்டே?"

"என்ன பேச்சு இது? விவஸ்தை கெட்ட பேச்சு!"

"விவஸ்தையோட பேசட்டுமா? அம்மாவைக் கொண்டு வந்து வச்சுப்போம். அந்த நிலத்தைக் காத்து நீ என்ன வேணுமோ அதை வாங்கிக்கோ."

"இருக்கிற தொல்லை போதாதாக்கும்! ஆளுக்கொரு பக்கமா காலையிலே போனா ராத்திரிதான் வர்றோம். வயசான உங்கம்மாவை - நகர வாழ்க்கைன்னா என்னன்னே தெரியாத பட்டிக்காட்டை எப்படி வெச்சுக்கிறது?"

ஜெ. ரமேஷ்பாபு

மெய்சிலிர்த்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு முறையாவது மெய்சிலிர்த்த ஆன்மீக அனுபவம் ஒன்று நிச்சயமாக இருந்தே தீரும். கோயிலிலோ, பூஜை அறையிலோ அல்லது ஓர் ஆன்மீக குருவைச் சந்தித்த போதோ நீங்கள் அவ்வாறு மெய்சிலிர்த்திருக்கலாம். இயற்கையின் பேரழகை தரிசித்த போதோ, ஓர் உயர்ந்த கலைஞரின் இசை அல்லது பஜனை நிகழ்ச்சியின் போதோ கூட அவ்வாறு உணர்ந்திருக்கலாம்.

அப்படிப் பெற்ற உங்கள் அனுபவத்தைப் பலரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டாமா? சுருக்கமாக ஒரு இன்லண்ட் லெட்டரில் எங்களுக்கு எழுதியனுப்புங்கள்; படிப்போரும் மெய்சிலிர்க்கட்டும்.

சிறப்பான அனுபவங்கள் தொடர்ந்து பிரசுரமாகும்.

முடிவு தேதி : 26.12.95

- ஆசிரியர்.

"பட்டிக்காடுதான். இல்லைங்கலை. உன் புருஷனும் அந்தப் பட்டிக்காடு பெத்தெடுத்த பட்டிக்காடுதான். மறந்துடாதே!"

"அதுக்கென்ன பண்றது? இரண்டு புள்ளை பெத்ததுக்கப்புறம் எங்க விட்டுட்டுப் போறது?"

மூக்கைச் சிந்த ஆரம்பித்தாள். நேரமாக ஆக ஏகத்துக்குக் கத்தினாள். அலறினாள். கூட இருந்த பிள்ளைகள் இரண்டு அம்மாவிடம் ஒட்டிக் கொண்டன. அப்பாவை வில்லனைப் பார்ப்பது போல் பார்த்தன. அவனுக்கு வெறுத்துப் போனது. அழுகை... சே... பெண்களின் ஆயுதம். ஆகாத்தியம் செய்தாவது அநியாயங்களைச் செய்ய நிர்ப்பந்தப்படுத்துவது!

அடுத்த நாளே வசந்தி சுறுசுறுப்பானாள். அண்டை அயலில் விசாரித்து ஒரு ரியல் எஸ்டேட்காரனை வரவழைத்தாள். அவனோடு ஆட்டோவிலே போய் நிலத்தைப் பார்த்து விட்டு வந்தாள். பொன்னேரிக்குப் பக்கத்தில் இரண்டு பிளாட் நாற்பதாயிரம் என்று பேரம் பேசினாள். அவனிடமே இந்தக் கிராமத்து நிலம் எவ்வளவு போகும், யாரை அணுகலாம் என்ற தகவலெல்லாம் சேகரித்தாள். இரண்டு நாள் மும்முரத்திற்குப் பிறகு அவனருகில் வந்தாள்.

"யோசிச்சுப் பாருங்க. நமக்குன்னு ஒரு பிளாட் இரவுண்டாவது இருந்தாத்தானே நாளைக்கு ஏதாவது லோன் போட்டாவது வீடுன்னு எதுவும் கட்ட முடியும்? அதுக்காக உங்கம்மாவை வச்சிக்கிட்டாத்தான் ஆச்சு அப்படீங்கிறது வியாபாரம் மாதிரியில்ல இருக்கு? யோசிச்சுப் பாருங்க. நாம இருக்கிற இந்த நிலைமையிலே உங்க அம்மாவைக் கொண்டு வந்து வச்சுக்க முடியுங்களா?"

அவன் அவளை அர்த்தத்தோடு பார்த்தான்.

"அதனாலே என்ன சொல்றேன்னா, நீங்க ஊருக்குப் போங்க. உங்க அம்மாகிட்டே நைஸா பேசி 'அங்கே வந்தா கஷ்டம், நீ இங்கேயே இருக்கறதுதான் நல்லது'ன்னு பேசிப் புரிய வைங்க. வேணும்னா கிராமத்திலே மணியக்காரர்கிட்டேயே அம்மாவைப் பார்த்துக்க நாங்க மாசம் ஏதாவது பணம் அனுப்புறோம்னு பேசி உதவிக்கு ஆளை அரேஞ்ச் பண்ணிட்டு வாங்க. ஆனா மறக்காம அந்த நிலத்தை வித்து நமக்குக் காசு கிடைக்கிற மாதிரி வழி பண்ணிட்டு வாங்க. வழக்கம் போல் வழவழான்னு கொழகொழான்னு பேசாதீங்க."

"அம்மா மட்டும் வேண்டாம். அவ காசு மட்டும் வேணுமா?"

"கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்காதீங்க. வசதியுள்ள உங்க அண்ணாக்களே பேசாதிருக்கும் போது பியூன் வேலை பார்க்கிற நாம எதுக்கு அலட்டிக்கணும்?"

வாசற்புறம் சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர். அம்மாதான். வயதானாலும் அதே வேக நடை, சுறுசுறுப்பு. என்றைக்குமே அவள் பருமனென்று இருந்தது கிடையாது. இப்போது மேலும் இளைத்திருந்தாள். உடம்பெல்லாம் சுருக்கம்.

"வந்திட்டியாடா ராஜா... நீ வந்தேன்னு ஆள் வந்து சொன்னான். நிலத்திலே குத்தகைக்காரனை பார்க்கப் போயிருந்தேன். அதான் வர நேரமாயிடுச்சு."

சுற்று முற்றும் பார்த்தாள். அவன் மெள்ளமாக 'இல்லை'யென்று தலையசைத்தான்.

"பசங்களைப் பார்த்து எவ்வளவு நாளாகுது? சின்னவளும் பள்ளிக்குப் போறாளா? அவ நல்லாப் படிப்பாளே! அவளுக்கு அவ தாத்தா முகஜாடை. முகத்திலே அதே புத்திசாலித்தனம். முதலாமவள் உன்னை மாதிரின்னு நினைக்கிறேன். சராசரியா இருப்பா.

'சுருக் நறுக்' என்றொரு சொல்லோவியம் – 10

மனைவி/கணவன் என்பவர்....

கணவன் அல்லது மனைவி என்பவர் எப்படியெப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று பலரும் பல பட்டியல்களைக் கொடுத்து விட்டார்கள்.

வாழ்க்கைத் துணை நலன் (கணவன் அல்லது மனைவி) எப்படியிருக்க' வேண்டும் என்பது பற்றி நீங்களும் புகுந்து விளையாட வேண்டியதுதானே! உங்களின் சிந்தனையைக் கீழுள்ள கூப்பனில் சுருக்கமாக எழுதி 18.12.95க்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியமும் ரூ. 50 பரிசு பெறும். 26 வாரப் போட்டியில் அதிக முறை பரிசு வாங்கும் ஒரு திறமைசாலிக்கு ஒரு மெகா பரிசும் காத்திருக்கிறது.

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

– ஆர்.

மனைவி/கணவன் என்பவர்..........................
....
....
....
....

பெயர் : ....

முகவரி : ....
....
....
....

என்ன, சரிதானே?"

அம்மா எத்தனை கெட்டிக்காரி! சின்னக் குழந்தையாய் இருக்கும்போதே பார்த்த குழந்தைகளைப் பற்றி எப்படி தீர்க்கதரிசனமாய்க் கூறுகிறாள்? இந்த சராசரியால் உன்னிடம் வியாபாரத்தனமாகப் பேச முடியுமா அம்மா?

"நம்ம வீட்டுக்குப் போகலாமா அம்மா?"

"வேணாண்டா ராஜா. அந்த வீடு நடுக்கட்டு, பின்பக்கம் எல்லாமே சரிஞ்சு விழுந்துடுச்சு. மிச்சம் இருக்கிறது முன்கட்டு திண்ணைதான். திண்ணையிலே துணியை மறைப்பா கட்டிக்கிட்டு நடத்திக்கிட்டு இருக்கேன்."

அவன் கண்கள் கலங்கின.

"ஏம்மா.. திண்ணையிலேயா குடும்பம் நடத்தறே. இது பத்தி லெட்டர் ஏன் எழுதவேயில்லை!"

"எழுதினா உனக்கு அனாவசிய கவலை தானே ராஜா. ஒரு ஆளுக்கு இது போதாதா?"

மணியக்கார ஐயர் நாசூக்காக வாசற்பக்கம் வேலையிருப்பது போல் நழுவிப் போனார். அம்மா சுற்று முற்றும் பார்த்தாள்.

"மணியக்கார ஐயர் எழுதிய கடுதாசி கிடைச்சுதா?"

மெதுவாகத் தலையசைத்தான்.

"நான் வேண்டாம்னாலும் கேட்கலை அந்த ஐயர். நான் சௌரியமாத்தான் இருக்கேன். கொஞ்சம் வயசாயிடுச்சு. மெதுவா செய்யறேன். அவ்வளவுதான். இவரு டெல்லியோட புள்ளைகிட்டே போறார்ங்கிறதாலே என்னையும் உங்ககிட்டே அனுப்பத் திட்டம் போடறாரு."

"..."

"உங்களாலே என்னை வெச்சுக்க முடியுமா? நான் பட்டிக்காடு. டவுன்வாசம் எனக்கு சரிப்படுமா? நீங்க எல்லாம் ஓடுற ஆளு. நானோ நொண்டிக் கிழவி. ஆனாலும் அவர் சொல்றப்ப என் பசங்களாலே என்னை வெச்சுக்க முடியாதுன்னு சொன்னா உங்களுக்கெல்லாம் இல்லே கௌரவக் குறைச்சல்? அதனாலே, 'போடுங்க' அப்படின்னேன்."

"......"

"அவர் எதிரே என்னைக் கூப்பிடற மாதிரி கூப்பிடு. நான் முடியாதுன்னு அடிச்சுப் பேசிடறேன். அண்ணன்களெல்லாமும் உனக்கு லெட்டர் போட்டு உன்னை அனுப்பி என்னை கூப்பிடச் சொன்னதா சொல்லு. நான் தட்டிக் கழிச்சுடறேன். என் காலம் ஆனதுக்கப்புறம் அந்த நிலம் உனக்குத்தான். எந்தத் தாய்க்கும் கஷ்டப்படற பிள்ளைதான் ராஜா உசத்தி. சரி... நான் சொன்ன மாதிரி 'மணியக்காரர் எதிரே பேசறியா?"

அவன் தலைகுனிந்து நின்றான்.

நீங்கள் கேட்டவை - தராசு

● அழகன், பட்டுக்கோட்டை.

? கர்நாடக மாநில அமைச்சரின் மகன், கல்லூரியில் அம்பேத்கார் சிலைக்கு மது அபிஷேகம் செய்து, அதன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி எறிந்து அராஜகம் செய்துள்ளாரே?

! மகன் குடிபோதையில் செய்த காரியம் அம்மாவின் அமைச்சர் பதவியைப் பறித்து விட்டது! கர்நாடகாவில் தார்மிக ஜனநாயக நெறிகள் இன்னமும் மதிக்கப் படுகின்றன என்பதற்காக மகிழலாம். தமிழகத்தின் நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள்....!

● ம. செந்தில்நாதன், மதுரை.

? 'இனிமேல் யாராவது என்னை விமர்சித்தால் நடப்பதே வேறு...' என்று வைரமுத்து சொல்கிறாரே...? அவர் என்ன விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட கவிஞரா?

! இல்லையே! தவறுகளுக்கு அப்பாற்பட்டவருமல்ல என்பதைத்தான் சமீபத்திய இச் சம்பவம் நிரூபிக்கிறது!

● இரா. திலீப், திருச்சி – 14.

? நரசிம்மராவ் அரசை விட 'ஜெ' அரசு தேவலை என ஜெத்மலானி கூறுகிறாரே?

! தமது வக்கீல் தொழில் வருமானத்தை வைத்துச் சொல்லியிருப்பார்!

● என். பாலகிருஷ்ணன், வளவனூர்.

? ஆந்திர மாநில காங்கிரஸ் எம்.பி. கட்டுக் கொல்லப்பட்டது பற்றி...?

! மது உற்பத்தி மன்னர் என்றாலும் சுப்பிராமி ரெட்டி, வேறு பல தொழில்களையும் வெற்றிகரமாக நடத்தியவர். சமுதாய நலத் திட்டங்கள் – குறிப்பாகக் கல்வி நிலையங்கள் – பலவற்றுக்குப் பொருள் உதவி வந்தார் - அதனால் மக்களின் அன்புக்குப் பாத்திரமானார். நக்ஸலைட்டுகளின் தண்டல் வசூலுக்கு அடிபணியாததால்தான் கட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையெனில் அவருக்குக் கிடைத்தது வீர மரணமே!

● சரத் சின்னான், மணக்காடு.

? ஒருவன் காதலித்தால் அந்தப் பெண்ணை அவனுக்கே மணம் செய்து வைக்கிறார்களே... அதைப் போல், திருடிய பொருளை திருடியவனுக்கே உரிமையாக்கலாமே...?

! காதல் என்பது உள்ளத்தைத் திருடுவதுதான் – ஒப்புக் கொள்கிறேன். ஆனால், பரஸ்பரம் இருவருமே ஒருவர் உள்ளத்தை மற்றவர் திருடி விடுவதால் சமனமாகிப் போகிறது. ஒரு பெண்ணின் சம்மதமின்றி அவள் உள்ளத்தைத் திருடப் பார்க்கட்டும்... முதுகில் 'டின்' கட்டி விடுவார்கள்!

● வி.எஸ். ராமு, செம்பட்டி.

? 'காங்கிரஸ் கட்சி நொண்டிக் குதிரை... கிண்டி ரேஸில் ஜெயிக்காது!' என அமைச்சர் செங்கோட்டையன் பேசியது குறித்து...?

! நொண்டிக் குதிரைகள் ரேஸில் பங்கேற்கவே அனுமதி கிடையாது. இது அமைச்சருக்குத் தெரியவில்லை என்பது அவருக்கு மட்டுமல்ல, அவரை அமைச்சராக்கியவருக்கும் கேவலம்தான்!

● மஞ்சுதேவன், பம்பாய் – 86.

? அரசியலில் நிரந்தரமாகக் குதிக்கப் போகும் லக்ஷ்மி சிவபார்வதி பற்றி...?

! 'என்.டி.ஆருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவரை மீண்டும் முதல்வர் ஆக்குவேன்' என்ற மட்டில் அவர் செயல்படுவது ஓ.கே. ஆனால் அப்படி நடக்கும்பட்சத்தில் தம்மை மீண்டும் ஓர் அதிகாரக் கேந்திரமாக்கிக் கொண்டு பார்வதி செயல்படுவாரானால் ஆட்சி நிலைக்காது!

லக்ஷ்மி பார்வதி மீண்டும் அரசியலில் குதிக்கிறாரே?



• குதிக்கிறார்!

● பி. உதயகுமார், சிந்தாதிரிப்பேட்டை.

? வேலூர் சிறப்பு முகாமிலிருந்து தப்பிய வி. புலிகளுள் பதினான்கு பேருக்கு பிரபாகரன் மரண தண்டனை விதித்திருக்கிறாராமே?

! பிரபாகரனிடம் வேறெதை எதிர்பார்க்கிறீர்கள்...?

● தங்க சங்கரபாண்டியன், சென்னை – 103.

? அரசியல் சாரா மல் எந்த பத்திரிகையும் இயங்க முடியாதா?

! இந்தக் காலத்தில் கல்யாணப் பத்திரிகையில் கூட அரசியல் புகுந்து விட்டது சுவாமி!

• கை...





• குலுக்கல்...!

● எஸ். சீனிவாசன், மதுரை.

? இதுவரை நடைபெற்ற எண்ணற்ற 'பந்த்'களினால் நாட்டுக்கோ மக்களுக்கோ ஒரு நயா பைசா அளவுக்காவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா?

! மாதச் சம்பளக்காரர்களுக்கு 'ஹாய்'யாக ஒருநாள் கூடுதல் விடுமுறை. அன்றாடங்காய்ச்சிகளுக்கு ஒருநாள் கூடுதலாகப் பட்டினி, பரிதவிப்பு... எவ்வளவு பெரிய சாதனை!

● கண்மணி கப்பு, கருப்பம்புலம்.

? தங்க நகை அணிவதில் இந்தியப் பெண்கள்தான் முதலிடமாமே?

! நகை என்பது இந்தியப் பெண்ணுக்குச் சேமிப்பாகவும் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பாகவும் தலைமுறை தலைமுறையாக



• [illegible] எதிர்பார்க்கலாம்!



• விஷம் சிக்கலானதா...?



• நல்லுறவு வலியுறுத்தி....



• பல்துறை தடங்கள்!

இருந்து வந்துள்ளது. இன்று வேறு பல பாதுகாப்பான சேமிப்பு முறைகள் வந்து விட்டன. பெண்கள் சொத்துரிமையும் சுதந்திரங்களும் அடைந்துள்ளார்கள். எனவே படிப்படியாக நகை மோகம் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

● கி. மனோகரன், நெற்குப்பை. ❑

? சந்தனக் கடத்தல் வீரப்பன் பிடிபடாமல், வயதாகித்தான் இறப்பான் என்கிறேன்...?

! இன்று அரசியல் போகிற போக்கைப் பார்த்தால், வீரப்பனே நல்லவனாகி விடுவான்... அவன்தான் இந்த அரசியல்வாதிகளைப் பிடிக்க வேண்டும் என்ற நிலை சீக்கிரமே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

● பி. பாலாஜி கணேஷ், கோவில்ம்பூண்டி.

? சென்னை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கவர்னர் சென்னாரெட்டியும் கல்வி அமைச்சர் பொன்னுச்சாமியும் கைகுலுக்கிக் கொண்டார்களாமே?

! கட்டி அணைத்துக் கொண்டவர்கள் கூட முதுகில் குத்திய கதைகள் நமக்குத் தெரியுமே!

● வி. சத்தியப்பிரியன், சென்னை - 15.

? சினிமா பட அதிபர் உமாபதி மறைவு குறித்து...?

! ஆனந்த் தியேட்டர் கட்டப்பட்ட போது அது அதிசயமாய் இருந்தது; ராஜ ராஜ சோழன் எடுக்கப்பட்ட போது பிரமிப்பை அளித்தது; 'உமா' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது பரபரப்பாக விற்பனை ஆயிற்று; உமா பிரிண்டிங் பிரெஸ் அட்டைப் பெட்டி தயாரிப்பில் முன்னோடியாக விளங்கியது; முதன் முதலாக அமைதியான வில்லன் பாத்திரம் ஒன்றில் தோன்றி அசத்தினார். இத்தனை சிறப்புகளுக்குரிய உமாபதி, காங்கிரஸின் தீவிர இயக்கங்கள் பலவற்றிலும் பங்கேற்றவர். ...எந்த ஒன்றிலும் ஊன்றி நிற்காதததுதான் ஒரு குறை!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? மௌன விரதம் இருப்பது நல்லதா?

! ரொம்ப நல்லது; 'We all need time to be alone; to think, to dream, to wonder....' என்று சொல்வார்கள். மௌன விரதம் அதற்கு உதவும்.

● எஸ். என். ராகவன், பெல்லாரி.

? மறைந்த மத்திய அமைச்சர் தினேஷ் சிங்...?

! கட்சி மாறியதாகக் குற்றச்சாட்டு உண்டு எனினும் அயல் விவகாரத் துறையில் முத்திரை பதித்தவர். பாக். பிரச்னையினால், இதர நாடுகளுடனான நமது உறவு பாதிக்கப்படக் கூடாது என்று நம்பியபோதிலும் அண்டை நாடான 'பாக்'குடன் நட்புறவு காப்பதே நல்லது என்று மறவாது வலியுறுத்தி வந்தார்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கி. மனோகரன்,
37 ஏ, மெயின் ரோடு,
நெற்குப்பை அஞ்சல்,
பசும்பொன் மாவட்டம் - 622 405

வட்டமேஜை

கலக்குகிறார் தேவாரம்!

♦ 'ஜாதியின் பெயரால் செப்பிடு வித்தை' தலையங்கத்தில் தாங்கள் குறிப்பிட்டுள்ளபடி, கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுக்கு வந்துவிட்டால் மட்டும் "இடஒதுக்கீடு தேவையில்லை'' என்று சொல்லிவிட முடியாது. இங்கு தீண்டாமையும், சாதி மனப்பான்மையும் மறைந்து போகாத வரையில், இடஒதுக்கீட்டையும் விட்டுக் கொடுக்க முடியாது.

இராதாமங்கலம், தென்கை பாபி.

♦ "இடஒதுக்கீடு எங்களுக்குத் தேவையில்லை" என்ற உணர்வு 'தானே' தோன்ற வாய்ப்புகள் குறைந்துவரும் நிலையில், நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறையுள்ள தலைவர்கள், ஜாதி உணர்வை, இடஒதுக்கீடுகளைச் சில வரம்புகளுக்கு உட்படுத்தி, முன்னேற்றத்தின் மூச்சுக் காற்றுக் கூட படாதவர்களுக்கு வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும்.

பெரம்பலூர், வி. எஸ். ராஜன்.

♦ நாட்டில் தலைபோகிற பிரச்னைகள் எத்தனையோ இருக்க, தலை அலங்காரம் பற்றிக் கட்டுரை போடும் உம்மை சலூன் இல்லாத ஊருக்குப் பார்சல் செய்ய வேண்டும்!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

♦ முடி வெட்டுவது வேலை என்று இருந்தேன். இல்லை, அது ஒரு கலை என வியக்கும் அளவுக்குப் படங்களும், பேட்டியும், கட்டுரையும் தந்து ஆச்சர்யப்பட வைத்துவிட்டீர்கள்!

எத்தாப்பூர், ரஜினிசாமி.

♦ டாக்டர் ராமதாஸின் விரிவான பேட்டியின் மூலம் அவரைப் பற்றி மக்கள் நினைக்கும் அத்தனை குற்றங்கள், குறைகளுக்கு விடைகாண முடிந்தது! எதிர்காலச் சமுதாயத்தின் மீது மிகுந்த அக்கறையுடனும், சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தெளிவான சிந்தனை உள்ளவர் என்பதும் விளங்கியது.

போத்தனூர், ஏ. செந்தில்.

♦ "ஒவ்வொரு ஜாதிக்காரரும் ஒவ்வோர் ஆண்டுக்கு முதல்வர்'' என்ற ராமதாஸின் புரட்சி சற்று புதிராக உள்ளது. ஏனெனில் தமிழ்நாடு அரசின் ஜாதிப் பட்டியல்படி பார்த்தால், ஒரு நாளைக்கு ஒரு ஜாதிக்காரர் என்ற கணக்குத்தான் சரியாக வரும்!

திருச்சி - 21, கிஷோர்.

♦ இன்னும் ஜாதி ஜாதி எனப் பேசும் கொள்கை, சர்வதேசக் குற்றவாளியாகிய 'பிரபாகரனை' ஆதரித்தோம், ஆதரிப்போம் என்கின்ற 'சீரிய' கொள்கைகளுடன் என்றாவது ஆட்சியையும் பிடிப்போம் எனப் பகல் கனவு காணும் டாக்டர் ராமதாஸ் அவர்களை எண்ணும்பொழுது வரும் சிரிப்பொலி அடங்க வெகு நேரம் பிடிக்கிறது.

வேலூர் - 1, எஸ். சந்திரசேகரன்.

♦ இவ்வார 'சுருக் நறுக்' போட்டியில் சிறுகதை என்றால் என்ன என்று போட்டி வைத்துள்ளீர்கள். ஆனால் தராக பதில்களைப் படித்தபோது தேவாரம் போன்றோர் எங்கள் 'பிழைப்பில்' ஓசையின்றிக் கலந்து கொண்டு, பரிசினைத் தட்டிச் சென்றுவிடுவார்களோ என்று ஒரே கலக்கமாக இருக்கிறது.

சென்னை - 39,

அ. க. கிருஷ்ணன்.

♦ 'மூன்றாவது கண்' தொடரைப் படிக்கப் படிக்க நமது சி.பி.ஐ.யின் அருமை பெருமை ஆகியவற்றை உணர முடிகிறது.

சேலம் - 1, என். ராஜா.

♦ கதவடைப்பு என்பது அரசியல் கட்சிகளின் மிரட்டலால் செய்வதல்ல என்றொரு புது கோணம் - அர்த்தமுள்ள தன் நிலை விளக்கம் - 'கதவடைப்பு' சிறுகதை மூலம் வெளிப்பட்டது.

சென்னை -1, எஸ். பாலாஜி.

♦ "ஜிம்கார்பட் நேஷனல் பார்க்" கதை உண்மைச் சம்பவத்தைக் கேட்பது போல் இருந்தது. மேலும் புலி, குரங்கு, மான், யானை போன்ற வனவிலங்குகளின் சிறப்பான குணங்களையும் ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது. படைப்பாளருக்குப் பாராட்டுக்கள்.

மயிலாடுதுறை, எஸ். அலாவுதீன்.

♦ மாற்று இருதயம் பொருத்தப்பட்ட மைமூன் பீவி, "சின்னப் பொண்ணு... முப்பது வயசுன்னு சொன்னாங்க. அய்யருப் பொண்ணுன்னாங்க... எனக்கு உசிரு குடுத்துட்டுப் போயிடுச்சி.. முகம் கூடத் தெரியாது. அட்ரஸ் கூடத் தெரியாது... எவ்வளோ பெரிய மனசு..'' என்று கண்ணீர் மல்கக் கூறிய வார்த்தைகள் படிப்பவர் மனத்தைக் கரைய வைக்கக் கூடியவை. இந்த பரஸ்பர நல்லெண்ணந்தான் உலகை வாழ வைக்கிறது. இனியும் வாழ வைக்கும்.

எலந்தங்குடி, மும்தாஜ்பேகம்.

ரூ. 20/- பரிசு பெறும் கடிதம்

♦ இதய மாற்று அறுவை சிகிச்சை மாபெரும் சாதனை எனில், மைமூன் பீவி என்ற 'இஸ்லாமியரு'க்கு ஹேமா என்கிற 'இந்து'வின் இதயத்தை இடம்பெயர்த்து செரியன் என்கிற 'கிறிஸ்துவர்' செய்து முடித்த அறுவை சிகிச்சை ஒரு இமாலய சாதனை!

பரிசுத் தொகையைப் பகிர்ந்து கொள்பவர்கள் :

சென்னை - 23, கி. ராமதாஸ்;

சென்னை - 38, ஆர். இலக்கதி.



• திருச்சியில்.....

சோலைமயில்கள் ஆடும் சென்னையில் மனம் குளிரும்!

நாதங்களில் சிறந்தது ஓம்.
மொழிகளில் சிறந்தது மௌனம்
மருந்துகளில் சிறந்தது பிரார்த்தனை.

இதை நிஜமென உறுதியளித்தபடி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் ஐயப்பன். சபரிமலையில் மட்டும் அல்ல... நாட்டின் பல்வேறு நகரங்களிலும் கூடத்தான்.

திருச்சி கன்டோன்மெண்ட் பகுதியில் அவருக்கு அமைதி சூழ் அழகான கோவில் உள்ளது.

கோவிலை வலம் வரும்போது பக்தியுடன், பிரமிப்பும் நம் மனத்தைத் தொடுகிறது.

கம்பீரமான நுழைவாயில்! அருகில் வழிப் போக்கரின் தாகம் தணிக்கும் நீர் நிறைந்த பானை. மனிதருக்கு மட்டுமல்ல. பிராணிகள் தாகசாந்திக்கும் வாசலில் நீர்த் தொட்டி!

ஆலயத்துக்குப் பெண்களும் வரலாம். பெண்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆடைகள் சேலை, தாவணி, துப்பட்டாவுடன் கூடிய சுரிதார் மட்டுமே.

துப்பட்டா அணியாமல் வந்து விட்டவர்கள் எப்படி தரிசனம் செய்வது? கவலையே வேண்டாம். துப்பட்டாக்கள் நிறைந்த ஸ்டாண்ட் நுழைவாயில் அருகிலேயே உள்ளது. எடுத்து அணிந்து, ஸ்வாமியை தரிசித்து, திரும்பி, அதே இடத்தில் துப்பட்டாவை வைத்து விட வேண்டும்.

இதற்குக் கட்டணம என்ன? மூச்!

இங்கு வாயே திறக்கக் கூடாது (பார்ஸயேர்). சைக்கிள், ஸ்கூட்டர் நிறுத்த, செருப்பு வைக்க என்று எதற்குமே கட்டணம் இல்லாத இலவச சேவைதான்! அர்ச்சனைக்கும் கூட இதே விதி!

தென்னையும், வாழையும் நடைபாதையின் இருபுறமும் குளிர்ச்சியாய் வரவேற்க, எங்கிருந்தோ வரும் 'ஓம்'கார நாதம் காதை நிறைக்க, நடந்தால் வருவது இருமுடி மண்டபம். உள்ளே

அருள்வாக்கு

"குரு எனக்கு ஞானம் தருகிறார் என்றால் அவருக்கு மட்டும் அந்த ஞானம் எங்கிருந்து வந்தது? அதை எனக்குத் தருகிற க்ருபை அவருக்கு இருக்கிற தென்றால் அதுவும் எங்கேயிருந்து வந்தது? எல்லாவற்றுக்கும் மூலம் ஈச்வரன் தானே?'' என்று கேட்க லாம்....



ஈச்வரன் ஸகலமும் நிரம்பிய ஸர்வசக்தி ஸமுத்ரமாகவே இருக் கட்டும். ஞான ஸமுத்ர மாக, க்ருபா ஸமுத்ர மாக எல்லாம் அவனே இருக்கட்டும். உன் அழுக்கை அலம்ப அத்தனை ஸமுத்ரமும் வேண்டாம்தானே? ஊற்றிலே, குழாயிலே கங்கை வருகிறதென்றால் அதைக் குடித்தாலே போதும்தானே? கங்கா ப்ரவாஹத்திலேயேதான் மொண்டாக வேண்டுமென்று இல்லையோல்லியோ? அந்த மாதிரி ஞான ஸமுத்ரத்திலிருந்து, க்ருபா ஸமுத்ரத்திலிருந்து உனக்குப் போதுமான ஊற்றாக, குழாய் ஜலமாக குரு வந்திருக்கிறார். உனக்கு முடிந்த முடிவாக எந்த ரிலீஃப் வேண்டுமோ, எந்தப் பேரானந்தம் வேண்டுமோ அதைக் கொடுத்து தாஹம், தாபம் தணிவிப்பதற்கு அவரே போதும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பழுக்காத வாழைப்பழங்களையும், மாம்பழங்களையும் வைக்கோலினால் மூடி அல்லது மூடிய அறையில் வைத் திருப்பார்கள்; அங்குள்ள வெப்பம் அவற்றைப் பழுத்து, சுவையுள்ளதாக மாற்றி விடும். இறைவனைத் தியானம் செய்வதென்பது நீங்களும் பழுத்து, சுவையுள்ளவர்களாக - இறைவனுக்கு உகந்தவர்களாக - மாறும்படியான தகுந்த 'வெப்பத்தை' உங்களுக்கு அளிக்கிறது.

— பாபா

விநாயகர் சந்நிதி.

ஸ்ரீ ஐயப்பனின் ஜன்ம நட்சத்திரம் உத்திரம்; அன்று ஐந்நூறு பேருக்கு மேல் இங்கு அன்ன தானம் அளிக்கப்படுகிறது. வசதியில்லாதோருக்கு இலவச மருத்துவ சிகிச்சை. அது மட்டுமா? அவர்கள் இலவசமாய்ப் பயில ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் - அந்த மண்டபத்திலேயே!

பக்தர்களில் நடக்க முடியாதவர்களும் இருப்பார்களே! யோசித்திருக்கிறார்கள்! இதோ வீல்சேர் ஒன்று தயாராய் இருக்கிறது... ஊனமுற்றோரும் முதியோரும் கோவிலுக்குள் சென்று தரிசனம் செய்ய வசதியாக...

அழகான மயில்களின் அகவலைக் கேட்டபடி துவஜஸ்தம்பம் தாண்டினால், ஆஹா!

ஐம்பொன்னால் ஆன ஐயப்பன் நம்மை பக்தி பரவசமூட்டுகிறார் கர்ப்பகிரஹத்தில். கண்களை அகற்றமுடியாத அழகு. கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்! உள்ளத்தில் எழும் உவகையை, சிலிர்ப்பை அனுபவித்தே அறிய முடியும்!

கர்ப்பகிரஹத்தைச் சுற்றி கன்னி மூல கணபதி, நாகராஜா, பகவதி அம்மன், நவக்கிரஹ சந்நதிகள் அழகுற அமைந்துள்ளன.

கடும் விரதமிருந்து, இருமுடிதாங்கிய கோடிக்கணக்கான பக்தர்களின் திருப்பாதங்கள் பட்ட கற்கள், சபரிமலை யாத்திரையில் பல்வேறு முக்கிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு அன்பர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டுள்ளன.

எண்ணிப் பார்த்தால், நடுநாயகமாய் ஒரு பெரிய கல்லும், சுற்றி வர 16 கற்களும் சிமெண்ட் மேடையில் பதிக்கப்பட்டுள்ளன.

பத்தாண்டுகளுக்கு முன் உருவான இந்த ஆலயத்துக்கு இப்போது மகா கும்பாபிஷேகம்.

ஒவ்வொன்றையும் சிந்தித்து, உணர்ந்து பக்தர்களின் மனம் பக்குவமடையும்படி செயலாற்றி வரும் இந்த ஆலய நிர்வாகம், ஐயப்ப சங்கத்தால் நியமிக்கப்பட்டு செயல்படும் ஒரு கூட்டு நிர்வாகக் கமிட்டியின் பொறுப்பில் உள்ளது.

கோவிலில் எந்தப் பக்கம் திரும்பினாலும் நம் கண் சென்று மீள்வது சொற்களில் தான்.

எளிய வார்த்தைகளில் நல்ல தத்துவங்களை கிரானைட் கற்களில் செதுக்கியிருக்கிறார்கள். படிப்பவர் மனம் விசாலப்படும் - நிச்சயம்! கோவிலில் கடைப் பிடிக்க வேண்டிய நெறிகள் பற்றிய வாசகங்களும் இருக்கின்றன...

மலையாள மண்ணுக்கே உரிய 'செண்டை' ஒலி காதில் ரீங்கரிக்க வெளியே வரும் போது மன அமைதியின் முழு பரிமாணத்தையும் உணர்ந்த நிறைவு, நெஞ்சு முழுதும்!

— கிருஷ்ணா

COMPREHENSIVE CARDIAC SERVICES

- CORONARY ANGIOPLASTY
- ATHERECTOMY CORONARY STENTING
- VALVULOPLASTY
- PACE MAKER IMPLANTATION
- CORONARY BYPASS SURGERY
- VALVE REPAIR & REPLACEMENT
- OPEN HEART OPERATIONS ON CHILDREN
- ANEURYSM REPAIR
- CLOSED HEART OPERATIONS

TAMILNAD HOSPITALS

Cheran Nagar, Madras - 601 302
Ph : 2375221. Fax : 044-2375229

Insight 1185

ADYAR CITY CENTER	ADAMBAKKAM FAMILY CLINIC
30, 1st Main Road, Gandhi Nagar, Madras - 600 020. Ph : 4914013, 4919778	3, Vellalar Street, Madras - 600 088. Ph : 2340182

INFORMATION CENTERS

TAMBARAM	TIRUVANNAMALAI	SALEM	KARAIKUDI
115, Mudichur Road, Madras 600 045. Ph : 2367908	3, Unnamalai Amman Illam, Tiruvannamalai 606 601	25-D, Ramakrishna Road, Opp: L.R.N. Bus Stop, Salem 636 007	364, Sekkalai Road, Karaikudi 623 001, Ph : 33073, 22715

ERODE	TRICHY	COIMBATORE
372-E E.V.N. Road, (Mettur Road) Erode 638 009. Ph : 216727	A-18, 1st Floor, XI Cross Main Road, (Opp : Bank of Madura),Thillai Nagar, Trichy 620 018. Ph : 32049	185, Ravindranath Layout, New Siddhapudur, GP Hospital Back Side, Coimbatore 641 044

சிறுகதை

நகை

"இந்தியப் படைகளுக்கு ஏகப்பட்ட இழப்பாம். நியூஸ்ல சொன்னான்... எல்லா ஃப்ரன்ட்லயும் அடியாம். சீனப் படைகள் முன்னேறி வந்துட்டே இருக்காம்!" என்றான் அண்ணா, இரவு சாப்பிட உட்கார்ந்தபோது.

"நம்ம ஜவான்கள் என்ன, பயிற்சி இல்லாதவர்களா?" என்று கேட்டாள் மன்னி.

"பயிற்சின்னு பார்த்தா, அந்த மாதிரி உயரமான மலைப் பகுதியிலே, பனி ஜாஸ்தியா இருக்கிற இடத்தில, நம்ம சோல்ஜர்கள் இதுவரை சண்டை போட்டதில்லே. அதுனால அநுபவம் போதாது..." என்றான் அண்ணா.

அன்று மாலை ஆபீசிலிருந்து வரும்போதே அண்ணா கொஞ்சம் கவலையாக இருந்த மாதிரி தெரிந்தது. வழியில் டிரைவரிடம் கூட எதுவும் பேசவில்லையாம்.

"இது ரொம்ப எதிர்பாராத யுத்தம். யுத்தத்துக்கு நிறையச் செலவாகிறதாம். எல்லாரும் அவங்களால முடிஞ்ச அளவுக்கு ரூபாய், தங்க நகை - நட்டு எல்லாம் நாட்டுக்குக் கொடுக்கணும்னு பிரதமர் கேட்டுண்டிருக்கார். நீ என்ன கொடுக்கப் போறே?" என்றான் அண்ணா, மன்னியை நிமிர்ந்து பார்த்து.

"நீங்க என்ன எல்லாம் கொடுக்கணும்னு சொல்றேளோ, அதை எல்லாம்!" என்றாள் மன்னி. "ஆனா இப்போ எதுக்கு இந்தச் சண்டைன்னுதான் புரியவே இல்லியே!"

அண்ணாவுக்கு அரசியல் மட்டுமல்ல, இந்தச் சரித்திர சமாசாரம் எல்லாம் ரொம்ப அத்துபடி. நிறையப் படிப்பான். நியூஸ் பேப்பர்கள் மட்டுமல்ல, அரசியல் தலைவர்கள் எழுதிய புத்தகங்கள், உலகப் போர் பற்றிய தடித்தடி நூல்கள் எல்லாம் அவன் அலமாரி ஷெல்ஃபில் குறுக்கும் நெடுக்குமாக அடுக்கி இருக்கும். எல்லாவற்றிலும் தேசியக் கொடியின் படம் சின்னதாக ஒட்டி, அதன் கீழேதான் அவன் பெயரை எழுதியிருப்பான். முத்து முத்தாக இருக்கும் கையெழுத்து...

"எப்போது தலாய்லாமாவும் பஞ்சென் லாமாவும் 1956ல புத்த ஜெயந்தி கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள இந்தியாவுக்கு வந்தார்களோ, அப்பவே சீனாவுக்கு இந்தியா மேல ஆத்திரமும், வெறுப்பும் வந்துட்டுது. அதுனாலேயே நேருஜி ஐம்பத்தெட்டுல திபெத்துக்கு விஜயம் செய்யணும்னு பிளான் பண்ணின போது அதை ஏதோ சாக்குச் சொல்லி தடுத்துட்டது சீனா!" என்றான் அண்ணா.

"அதுக்கு இப்போ இந்தியா மீது படை எடுப்பானேன்?" என்றேன் அப்பாவி மாதிரி.

"காரணம் இருக்கு. அப்புறம் ஆறேழு மாசத்தில, திபெத்துல நிலைமை மோசமாப் போய், தலாய்லாமா இந்தியாவில அடைக்கலம் தேடி வந்தார். மார்ச் 59ன்னு நெனைக்கறேன். அதுக்கப்புறமாவே இந்தியா-சீனா பிரச்னை பெரிசாயிட்டுது. திபேத்துல இருந்து வந்தவங்களுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்ததுனால, இந்தியாவுக்கு எல்லை கடந்த பேராசை இருக்குன்னு சூ என்லாய் நேருவுக்குக் காரசாரமா ஒரு லெட்டர் எழுதினதா நான் கேள்விப்பட்டிருக்கேன்!" என்றான் அண்ணா.

திபெத்து எல்லையில் நிறையப் படைகளைக் குவித்து விட்டு, இந்தியப் பாதுகாப்பு எல்லைப் படை வீரர்கள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி, அவர்களை அந்த இடத்திலிருந்து விரட்டுவதுதான் சீனப்படை வீரர்களின் முதல் வேலையாக ஆரம்பித்தது. ஆனாலும் சூ என்லாய் ஏப்ரல் 60-ல் இங்கே வந்தார். பேச்சு வார்த்தை நடத்துகிற மாதிரி ஒரு நாடகம் நடந்தது. பர்மாவுடன் ஜனவரியில் ஒரு பார்டர் அக்ரிமென்ட். மார்ச்சில் நேபாளத்துடன் ஓர் எல்லைப்புற ஒப்பந்தம். பாகிஸ்தானுடன் வெளிப்படையாக நட்பு...

எனக்கு இதெல்லாம் படித்துத்தான் தெரியும். அண்ணாவைக் கேட்டால் இன்னும் நிறையச் சொல்லுவான்.

"முதல்ல வந்த போது இந்தி - சீனி பாய் பாய்னு கோஷம் போட்டது எல்லாம் அவ்வ

ளவுதானா?" என்றாள் மன்னி.

தினசரிகளில் எல்லாம் முதல் பக்கம் இந்திய - சீன போர்ச் செய்திகள் கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்திகளாய் இடம்பிடித்துக் கொண்டன.

'நமக்குள்ளே என்ன பிரச்னை இருந்தாலும் பேசியே தீர்த்துக் கொள்ளலாமே என்று அன்றைக்கு சூளன்லாய் சொன்னாரே! தில்லி விமான நிலையத்தில் நேரு அவரை வரவேற்ற போது கூட, 'நாம் முன்னாலேயே ஒப்புக் கொண்ட பஞ்சசீலக் கொள்கைப்படி, பரஸ்பர நம்பிக்கை நமக்கு இருந்தால், இந்தப் பகுதி நிச்சயம் அமைதிப் பூங்காவாக இருக்கும்' என்றாரே!

நியூஸ் பேப்பர்கள் எல்லாவற்றையும் படித்து விட்டுத்தான் ஆபீஸ் புறப்படுவான் அண்ணா. ஐந்து மணிக்கு பேப்பர் வந்தால் ஆறு - ஆறரை மணி வரை அதில் மூழ்கி விடுவான்...

ஆபீசில் அண்ணாவுக்குப் பெரிய வேலை. தனி கேபின். தனி செக்ரடரி. அவனுக்குக் கீழே நிறைய ஊழியர்கள். காலையில் எட்டு மணிக்கு, அவசர அவசரமாக, கடச்கடச் சாப்பிட்டு விட்டுக் காரில் கிளம்புவான். மத்தி





"நீங்க நடிகையானதுக்காக வருத்தப்பட நீங்களா, சந்தோஷப்படநீங்களா?"

"நான் எதுக்கு வருத்தப்படணும்? அதுக்குத் தான் ரசிகர்கள் இருக்காங்களே...?"

- செங்குன்றம் கே. ஆர்.

யானம் வஞ்சக்கு மவுண்ட்ரோடில் உள்ள பிரபல ஓட்டல் ஒன்றில் பாதாம் அல்வாவும், உருளைக்கிழங்கு போண்டாவும் அவசியம் வேண்டும். அல்வா இல்லாவிட்டால், வேறு ஏதாவது ஒரு ஸ்வீட் கட்டாயம் வேண்டும்...

'ஆளைலாய் வந்த ஆறாம் நாளே, 'நமக்குள்ளே இப்பப் பேசித் தீர்த்துக் கொள்கிற மாதிரி இல்லை. சரியான நிலைமை என்ன என்று மேலும் தீவிரமாக ஆராய வேண்டும் என்று எப்போது அறிக்கை விட்டாரோ, அப்போதே சந்தேகம்தான். சண்டைக்குத்தான் வழி பார்க்கிறார் இந்த மனிதர்...'

அண்ணா மத்தியான வஞ்சக்கு, இப்போதெல்லாம் ஸ்வீட் சாப்பிடுகிற 'மூடி'ல் இருக்கிறானோ என்னவோ? தெரியவில்லை.

'இப்போது எதற்கு இந்தப் போர்? சுதந்திரம் கிடைத்த புதிதில் காஷ்மீர் காரணமாக பாகிஸ்தானோடு சண்டை போட்டதில் எத்தனை இனம் இந்தியர்கள் மடிந்தார்கள்! எதற்கு, எதற்கு' என்று மனசு குடைந்தது.

பொழுது விடிந்து பால்காரர் வந்ததும் அவசர அவசரமாகக் காப்பி குடித்து விட்டு அண்ணா தயாராக இருந்தான். பேப்பர் வந்ததோ இல்லையோ, ஒரு சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு மளமள வென்று படித்தான். நேருஜியின் முதுகில் சீனப் பிரதமர் கத்தியால் குத்தி விட்டார் என்று யாரோ பேச்சுவாக்கில் சொன்ன போது கூட அண்ணாவுக்குத் 'தொண்டை' அடைத்துக் கொண்டு, வார்த்தைகள் வராமல் துடித்தது நினைவுக்கு வந்தது.

"என்ன ரெடியா?" என்றான் அண்ணா, மன்னியிடம், "திருமலைப்பிள்ளை ரோடுக்குப் போகணும். கழுத்தில என்ன செயின் போட்டிருக்கே நீ?"

"தாலி கோத்திருக்கிற செயின் ஒண்ணு. ரெட்டை வடம் ஒண்ணு. காப்பிக் கொட்டை செயின் ஒண்ணு. ஏன்?"

"ரெட்டை வடத்தை நான் கூட்டிண்டு போற இடத்துல ஒரு தலைவர் இருப்பார் - அவரண்டை நீ கழற்றிக் கொடுத்துடணும்."

"ஆகா, தாராளமாக் கொடுத்துடறேன்!" என்றாள் மன்னி.

"உனக்கு வருத்தமே வேண்டாம். அப்புறமா நானே வேற ஒண்ணு பண்ணிப் போட்டுடறேன்!" என்று அண்ணா உறுதி அளிப்பது மாதிரி சொன்னான்.

"லாக்கர்லே வேற இருக்கு. அலமாரில ஒண்ணு நகைக் கடைப் பெட்டியோட தூங்கறது. எனக்கு ஒண்ணும் வருத்தமே இல்லை!" என்றாள் மன்னி.

"எல்லாருமே அவர்களால முடிஞ்சதைக் கொடுக்கிறா. சினிமாக்காரா எல்லாம் ஊர்வலமாப் போய் நிறைய கலெக்ட் பண்ணிக் கொடுத்திருக்கா" என்றேன் மன்னியிடம்.

"நடந்தே போயிடலாம். கார் வேண்டாம்!" என்றான் அண்ணா.

தலைவர் வீட்டு வாசலில் அதிகக் கூட்டம் இருக்கவில்லை.

"இதோ வந்துடுவாருங்க..." என்றார் அவரது உதவியாளர்.

தலைவர் வெராந்தாவுக்கு வந்து உட்கார்ந்தார்.

கம்பீரமான உருவம். கதரில் முழுங்கை தாண்டிய அரைக்கைச் சட்டை. கதர் வேஷ்டி. எல்லாரையும் பார்த்து வணக்கம் சொன்னார் தலைவர்.

"ஏதுவும் கொண்டு வந்திருக்கீங்களா, இல்லே என்னை வெறுமனே பார்க்க வந்தீங்களான்னேன்?" என்றார், புன்சிரிப்புடன்.

முன்னால் நின்று கொண்டிருந்த பெண்மணி, கை வளையல்களைக் கழற்றி, தலைவர் முன் வைத்து வணங்கினாள்.

அண்ணா எதுவும் பேசாமல் மன்னியைப் பார்த்தான்.

ஒரு பெரியவர் காரில் வந்து இறங்கி, நேராகத் தலைவரிடம் வந்தார். ஒரு காகிதப் பொட்டலத்தைப் பிரித்து அவர் முன் வைத்தார்.

"நான் கழுத்துல போடற செயின் இது. இது தங்கக் கடிகாரம் - சங்கிலியோட. இது என்னோட வலது கை மோதிரம். இது இடது கை மோதிரம்" என்று மளமளவென்று பெருமையாகச் சொன்னார்.

"சந்தோஷம். நாட்டுக்காக எது கொடுத்தாலும் அது உங்களுக்கும் சந்தோஷமா இருக்கணும்னேன்!" என்றார் தலைவர்.

ஒரு கிழவி முன்னால் வந்து, மோதிரம் ஒன்றை அவர் கையில் வைத்தாள்.

"இது எத்தனை பவுன் இருக்கும் தாயி?"

தலைவர் அவளிடம் பேசியதிலேயே கிழவிக்கு உச்சி குளிர்ந்து போயிருக்க வேண்டும்.

"அரைப் பவுன் இருக்கும் ராசா!"

"என்ன வெலை தெரியுமா? தெரிஞ்சுதான் கொடுக்கறியான்னேன்?"

"என்ன வெலையா இருந்தாத்தான் என்ன அய்யா? நாட்டுக்குக் கொடுக்கணும்னு அய்யா சொல்லிட்ட பொறவு அது எங்கிட்ட எதுக்கு இருக்கணும்?"

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras - 600 004 Ph.4942303/4943365

BRANCHES

- **THIRUVANMIYUR** : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras-41 Ph. 410058
- **TONDIARPET** : 667, T.H.Road, Madras-81 Ph.5950472
- **SAIDAPET** : 11, Jones Road, Madras, -15 Ph.4851468

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of **Rs.1,000/-**

Period (Months)	12	24	36	45	67
Maturity Value Rs.	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit **Rs.10,000/-**

Period **12 Months**

Interest payable Monthly **19.5%** p.a

Interest payable Annually **21%** p.a

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs.66,000
180	Rs.1,82,000

RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT RS.100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value Rs.	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGHLIGHTS

* Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
* Company is in 23rd year of service.
* Transaction with members only. (Rupees two only for membership)
* Premature repayment facility as per terms and conditions.
* Monthly interest Warrants would be despatched in advance for the year of Deposits.

LOANS

A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gm. (Rs.2400/- per 8 gms.)

* No Ceiling
* No Charges
* No Interest Tax
* Recurring Deposit not required

* Your Jewels are insured at our cost.

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMBASIVAM
Secretary

G.KUMARAVELU
Vice-President

K.R.V. RAMANI
President

அமுதசுரபி - ஸ்ரீராம் டிரஸ்ட்

ஸ்ரீநிதி திட்டம் 4 அன்பளிப்புகளுடன்



அமுதசுரபி சந்தா முன் பண டெபாசிட் திட்டத்தில் உடனே சேருங்கள். ரூ. 5000 டெபாசிட் செய்தால் 5 ஆண்டுகளில் ரூ. 10,000 ஆகத் திரும்பப் பெறலாம். உங்கள் முதலீடு இரண்டு மடங்காகிறது. தவிர, 5 ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி' மாத இதழ்களும் 5 ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி' தீபாவளி மலர்களும் (வருங் காலத்தில் விலை ஏற்றம் இருந்தாலும்) உங்களை வந்தடையும்.

உங்களுக்கு ஸ்ரீராம் டிரஸ்ட் வெளியிடும் 1996 ஆம் ஆண்டின் அழகிய வண்ணக் காலண்டர் புத்தாண்டுப் பரிசாக அளிக்கிறோம். மேலும், பூஜையில் வைத்துப் பாதுகாப்பதற்கேற்ற ஸ்ரீசக்கரம் - அஷ்டலட்சுமி திருஉருவங்கள் பதித்த ஐம்பொன்னாலான பதக்கம் இலவசம்.

டெபாசிட் அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீராம் டிரஸ்ட்
தபால் பை எண்: 5043,
145, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை - 600 001
போன் : 522 84 45 / 510535

காலண்டர் விற்பனைக்கு அல்ல

இத்துடன், ரூ. 5000/- டிராப்ட்/ காசோலை வங்கி பெயர்: ______________ அனுப்பியுள்ளேன். கீழ்க் காணும் எங்கள் முகவரிக்கு டெபாசிட் ரசீது, அன்பளிப்பு -அமுதசுரபி இதழ்களை அனுப்பி வைக்கவும். இந்தத் தொகையை 5 ஆண்டுகளுக்குத் தங்களிடம் சந்தா முதலீடாக அளிக்க விரும்புகிறேன். 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 10,000/- ஆகத் திரும்பப் பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

பெயர் : ------------------------------

முகவரி : ------------------------------

வாரிசுதாரர் பெயர்: ------------------------------ ஒப்பம்

பிரமித்துப் போய் நின்றிருந்த மன்னியைப் பார்த்து அண்ணா, "நீயும் கொடுத்துடு!" என்றான்.

மன்னி முதலில் இரட்டை வடம் சங்கிலியைக் கழற்றி அண்ணாவிடம் கொடுத்தாள். பிறகு திருமாங்கல்யம் கோத்திருந்த செயினைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, காப்பிக் கொட்டைச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள்.

அண்ணாவுக்குப் பிரமிப்பாய் இருந்தது.

பிறகு வலது கையால், இடதுகை வளையல்கள் நான்கையும் ஒரே வீச்சில் உருவி எடுத்து வைத்தாள். அப்புறம் வலக்கை வளையல்கள் நான்கு. கைவிரலிலிருந்து நெளி மோதிரத்தைக் கழற்றினாள்.

மன்னி வைரத் தோட்டையும் கழற்றிய போது அண்ணாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஜோடியாகக் கழற்றி அண்ணாவின் கையில் வைத்தாள். எத்தனை ஆசைப்பட்டு வாங்கிக் கொண்டாள்...

கையோடு கொண்டு வந்திருந்த தோல்பையிலிருந்து நாலு ரப்பர் வளையல்களை உடனே எடுத்து, கைக்கு இரண்டாக மாட்டிக் கொண்டாள்.

''எல்லாத்தையும் அவர்ட்ட கொடுத்துடுங்கோ!'' என்றாள் மன்னி.

அண்ணாவால் நம்பவே முடியவில்லை என்பது அவன் அவளைப் பார்த்த பார்வையிலேயே தெரிந்தது.

தலைவர் மன்னியைப் பார்த்து, "மூக்குக் குத்திக்கலியா நீங்க? குத்திக்கிட்டிருந்தா, கூட ஒரு மூக்குத்தியும் நாட்டுக்குக் கிடைச்சிருக்குமேன்னேன்!" என்றார் சிரித்தபடி.

அண்ணா எல்லாவற்றையும் தன் பெரிய வெள்ளைக் கைக்குட்டையில் வைத்து அப்படியே தலைவரிடம் நீட்டினான்.

"இப்படிக் கொடுக்கறதுக்கு மனசு வரணும்னேன்!" என்றார் தலைவர்.

உதவியாளர் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு, விலாசமும் கேட்டுக் கொண்டார்.

"நீங்க பெரிய வேலையிலே இருக்கீங்களா?" என்று கேட்டார் தலைவர். அண்ணா சொன்னான்.

''படிப்பு முடிச்ச உடனே சுதந்திரப் போராட்டத்துல கலந்துக்கிட்டு அந்நியத் துணி எல்லாம் கொளுத்தி ஜெயில்ல நாலு மாசம் இருந்திருக்கேன்!'' என்றான் அண்ணா. அதைச் சொல்லும் போது அண்ணாவின் குரலில் கொஞ்சம் பெருமிதம் தெரிந்தது.

"நாட்டோட பாதுகாப்பும், கௌரவமும், நன்மையுந்தான் எந்த நாளும் எந்த நேரமும் நினைவுல இருக்கணும். நாட்டோட கௌரவம், நாட்டோட நன்மை எல்லாம் பாதுகாப்புக்கு அப்புறந்தான். இதுக்கப்புறந்தான் உங்க கீழ இருக்கிற சோல்ஜர்களோட சௌகரியம் நினைவுக்கு வரணும். அப்புறம் எந்த நாளும், எந்த நேரமும், கடைசியாத்தான் உங்க பாதுகாப்பு, உங்க சௌகரியம் எல்லாம்னு, மிலிடரி காலேஜ்ல படிக்கறப்ப சொல்லிக் கொடுப்பாங்க. நம்ம ஜவான்கள் குளிர்லயும், பனியிலயும் நாட்டைப் பாதுகாக்க எல்லையில கஷ்டப்படறாங்க. அது ஜனங்களுக்கெல்லாம் தெரியணும்னேன்..."

டேராடூன் மிலிடரி அகடமியில் ஷெர்வுட் ஹால் சுவரில் எழுதியிருக்கும் இந்த வாசகங்களை இந்த மனிதர் எப்போது பார்த்தார்? எப்படி இந்த அளவுக்கு நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார் என்று எனக்கு வியப்பாய் இருந்தது.

வீடு திரும்பும் போது மன்னி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.


"ஒரே ஒரு ரெட்டை வடம் சங்கிலியைத் தானே கொடுக்கச் சொன்னேன்? எப்படி எல்லாத்தையும் கழற்றிக் கொடுக்க உனக்கு மனசு வந்தது?" என்றான் அண்ணா.

"ஒண்ணுமே இல்லாத கிழவி, தன்னோட அரைப் பவுன் மோதிரத்தை எடுத்துண்டு ஓடி வந்திருக்காளே, அதைப் பார்த்தப்போ எல்லாத்தையும் கழற்றிக் கொடுத்தாலும் நீங்க ஒண்ணும் சொல்ல மாட்டேள்னு தோணித்து. மளமளன்னு கழட்டிக் கொடுத்துட்டேன். ஒண்ணுமே யோசிக்கத் தோணலே! எல்லாத்தையும் கழட்டிக் கொடுத்ததுல உங்களுக்குச் சந்தோஷம் இல்லையா?"

''எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஆனா பெண்களே சாதாரணமா நகையை எல்லாம் அப்படி ஒண்ணும் லேசுல கழட்டிக் கொடுக்க மாட்டா இல்லையா, அதுக்குத்தான் கேட்டேன்!'' என்றான் அண்ணா.

''நகை ஒண்ணும் இல்லாட்டாலும் நீ இப்பத்தான் ரொம்ப அழகாய் இருக்கே!'' என்று அண்ணா மிக அந்நியோன்னியமாய், சாலை என்றும் பாராமல் மன்னியின் கையைப் பிடித்துக் கொண்டு நெகிழ்ச்சியாய்ச் சொன்னது எனக்கு நன்றாகக் கேட்டது.

இதற்கு முன்னால் பாகிஸ்தான் போரில், காஷ்மீர் எல்லையில், மன்னியின் தம்பி நாட்டுக்காகப் போராடி உயிரிழந்ததும் ஒரு காரணமாய் இருக்கலாம் என்று அண்ணாவுக்கு அப்போது ஏனோ நினைவுக்கு வரவில்லை.



இருச்சியில் ஆட்டோ ஒன்றில் எழுதப்பட்டிருந்த வாசகம் :

''கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்; அவன் ஆட்டோ ஓட்டி வேதனையில் வாட வேண்டும்.''

- ஒட்டநத்தம் சங்கர்

10

மாலை மயங்குகின்ற நேரம்

மனைவியின் கடைக்கண் விடுத்த கேள்விக்கு, உரிய பதில் சொல்லி விடத் துடிப்பவன் போல, உதயரேகாவை நோக்கி விரைந்த கிருஷ்ணசந்திரன், கனவு கலைந்தாற்போல அடுத்த எட்டிலேயே நின்று விட்டான். பார்வையை அவளிடமிருந்து அவசரமாக விலக்கி, "எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று முணுமுணுத்தபடியே திரும்பி வேகமாக அவன் அறைக்குள் சென்று கதவையும் சாத்திக் கொண்டான்.

கன்னங்களில் செம்மையுறக் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம்தான். ஆனால், அதைவிட, ஏன் இப்படி என்ற கேள்வி மனதை மிகவும் குடைந்தது.

சாதாரண மனிதர்களுக்கு உரிய ஆசாபாசங்கள் அத்தனையும் உடையவனாகத்தானே தோன்றுகிறான்? கூடவே, அவளிடமும் ஆசை இருப்பதாகவும்தான் காண்கிறது.

பிறகு அவனை எது தடுத்தது? ஏன் இப்படி ஓட வேண்டும்? ஆனால், அந்த வினாடியில் அவனுக்கு நினைவு வந்த தடை எதுவாக இருந்தபோதும், கணவனை நெருங்கி விட முடியும் என்ற நம்பிக்கையும் முன்னெப்போதையும் விட உதயரேகாவுக்கு அதிகம் ஆயிற்று.

மிகவும் சாதாரணமான கேலிப் பேச்சினாலேயே கணவனைக் கவர முடிவதை உணர்ந்து, அடிக்கடி அவனைப் பேச்சுக்கு இழுத்தாள் உதயா.

ஆனால், அன்றையச் சறுக்கலின் பின் கிருஷ்ணசந்திரன் மிகவும் விழிப்புடன் இருக்கவே, அவளது முயற்சிகள் அனைத்தும், சாண் ஏறி முழம் சறுக்குவதைப் போல ஆயின.

அன்றையப் பேச்சு தந்த சகஜபாவத்தைத் தொடர்வது போல, "உங்களை என்ன சொல்லி அழைப்பது?" என்று கணவனைக் கேட்டாள் உதயரேகா. "எனக்கு இந்த 'என்னாங்க', 'இந்தாங்க' என்பதெல்லாம் பிடிக்கவில்லை. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"

காலை உணவு முடிந்து, காப்பி அருந்திக் கொண்டிருந்த கிருஷ்ணசந்திரன் அக்கறையற்றவனாகத் தோளைக் குலுக்கினான்.

கவனியாதவள் போலத் தனக்கும் ஒரு கப் காப்பியை ஊற்றியபடி, "மற்றவர்கள் உங்களை எப்படி அழைக்கிறார்கள்?" என்று விடாமல் விசாரித்தாள் மனைவி.

உணர்ச்சியற்ற குரலில், "புதியவர்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன் என்பார்கள். கொஞ்சம் தெரிந்தவர்கள் கிருஷ்ணன் என்பார்கள். அம்மாவுக்கு நான் க. கண்ணப்பன். சில சமயம் சந்திரன். வசு அண்ணா என்பாள்" என்று இயந்திரம் போல ஒப்பித்தான் கணவன்.

"ஊகூம்" என்று எழிலாக உதட்டைப் பிதுக்கினாள் உதயரேகா. "இதெல்லாம் சொல்லி நான் அழைக்க முடியாது!"

அவன் பேசாமல் காப்பியில் கவனமாயிருக்கவும், "அன்று உங்கள் நண்பர் உங்களைக் 'கேசி' என்றார்... ஆனால் அப்படிக் கூப்பிடுவதும் சரியாகத் தோன்றவில்லை..." என்றாள் அவள் யோசனையோடு.

"கரெக்ட்!" என்றான் கிருஷ்ணசந்திரன். "ஏனெனில் நீ என் சிநேகிதி அல்ல" என்ற போது அவன் குரல் அவளை மட்டம் தட்ட முயன்றது.

அவனை வெறித்து நோக்கிவிட்டு, "ஆமாம். மனைவி வெறும் சிநேகிதியாக இருக்க முடியாதுதான். ரொம்பவும் சரியாகவே சொன்னீர்கள் மிஸ்டர் அனாமதேயன்!" என்றாள் உதயரேகா.

கணவன் சற்றுத் திடுக்குற்று நிமிரவும், "இது தேவலாமா? அல்லது நல்ல தமிழில், பெயரில்லாப் பூச்சி பரவாயில்லையா?" என்றவள், அவன் பேசாமல் அலுவலகம் செல்வதற்குத் தயாராகக் கைப் பெட்டியை எடுக்கவும் கூடவே நடந்தபடி, "இது போல இன்னும் கூட ஒன்றிரண்டு பொருத்தமான பெயர்கள் – உம்மணாமூஞ்சி, பேசாமடந்தை என்று இருக்கின்றன. எது மேல் என்று யோசித்து, சாயங்காலம் வரும் போது சொல்கிறீர்களா? இப்போது போய் வாருங்கள்" என்று உதடுகளைக் காது வரை இழுத்துப் புன்னகை செய்தாள்.

சற்று நின்று, "என் பெற்றோர் என்னைக் கேட்டு எனக்குப் பெயர் சூட்டவில்லை. நீயும் உன் விருப்பம் போல எந்தப் பெயரிட்டு என்னை



அழைப்பதானாலும் எனக்குச் சம் மதமே" என்று கூறி விட்டு மடமட வென்று படியிறங்கிச் சென்று காரில் ஏறினான் கிருஷ்ணசந்திரன்.

'கல்லுளிமங்கன்'தான் ரொம்பவும் பொருத்தம்' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தாள் உதயரேகா.

மாலையில் வந்தவனிடம் அதையே சொல்லிப் பார்த்தாள்.

அப்போதும், தோளைக் குலுக்கி விட்டுப் பேச்சின்றி விலகிப் போனானே தவிர, அவன் கோபமாக ஒரு பார்வை கூட அவளைப் பார்த் தானில்லை. வாய்ப் பேச்சில் அவளை மடக்க முயற்சியும் செய்தானில்லை.

அவளது தந்திரத்தை ஊகித்து, அவன் விலகிப் போவதை உதயாவும் புரிந்து கொண்டாள். ஆயினும் அத்தோடு விட்டுவிட மனமின்றி, இது போல மேலும் ஓரிரண்டு முயற் சிகள் செய்து தோற்றபின், கிருஷ்ண சந்திரனைச் சீண்டி விட்டு அவனது கவனத்தைத் தன்னிடம் ஈர்ப்பது இயலாத காரியம் என்ற முடி வுக்கு, வேறு வழியின்றி, உதயா வர நேர்ந்தது.

ஆனால், அதற்காக உடனே மனம் ஒடிந்து போய் விடாமல், அடுத்த முயற்சி பற்றி யோசித்தாள்.

'ஓர் ஆணின் இதயத்தை அவனது வயிற்றின் மூலம் தான் எட்டிப் பிடிக்க வேண்டும்' என்று எதிலோ படித்த ஞாபகம் வந்தது.

உடனே கிருஷ்ணசந்திரனிடம் சென்று, சாப்பாட்டில் அவனுக்கு என்னென்ன அயிட்டங்கள் பிடிக்கும் என்று விசாரித்தாள்.

ஒரே பார்வையில் அவள் மனதைப் படித்து, "எனக்காக யாரும் மெனக்கெட வேண்டாம். நம் சமையல்காரன் செய்வதே எனக்குத் திருப்திதான்" என்று முடித்தான் அவன்.

இவனிடம் வந்து கேட்டேனே என்று தன்னையே கடிந்து கொண்டு, கணவன் அலுவலகம் சென்றபின்,

ரமணி சந்திரன்

காந்திமதிக்கு டெலிஃபோன் செய்து விவரம் கேட்டாள்.

"ஏன்? ஓகோ, உன் புருஷனுக்கு நீயே சமையல் பண்ணிப் போடப் போகிறாயாக்கும்?" என்று சிரித்து விட்டு, "கவனமாய்ச் செய்யம்மா. கையைச் சுட்டுக் கொண்டு விடாதே" என்ற கவனப்படுத்தலோடு, மகனுக்குப் பிடித்த உணவு வகைகளை விவரித்தார் மாமியார்.

உதயரேகா சமையலில் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாத கைநாட்டு அல்ல. சித்தி யசோதாவின் நளபாகத்தில் மயங்கித் தானும் சில வகைகள் கற்றிருந்தாள். யசோதாவும் எதையும் மறைக்காமல் நன்றாகவே கற்றுக் கொடுத்திருந்தாள்.

எனவே, காந்திமதி சொன்ன பதார்த்தங்களைச் செய்வது உதயாவுக்கு எளிதாகவே பட்டது.

ஆயினும் கண்ணும் கருத்துமாக வெகு கவனத்துடன், காந்திமதி சொன்னவாறு சோம்புத் தூள் கலந்த எண்ணெய்க் கத்தரிக்காயைத் தயார் செய்து மதிய உணவுடன் கிருஷ்ணசந்திரனுக்கு அனுப்பி வைத்தாள்.

திரும்பி வந்த 'ஹாட் பேக்' கிட்டத்தட்ட காலியாக இருக்கவும் உதயரேகாவுக்கு ஒரே உற்சாகம். தினம் ஒன்றாகத் தன் கைத் திறமையைக் காட்டலானாள். ஒருநாள் பச்சை மிளகாயும் வெங்காயமும் வதக்கி, தேங்காய்ப் பால் ஊற்றி இறக்கிய தக்காளிக் குழம்பு, ஒருநாள் நவரத்தினக் குருமா, ஒருநாள் புதினா சாதம் என்று தினம் ஒரு புதிய பதார்த்தம் அலுவலகம் சென்றது.

"எப்போதையும் விட அய்யா கொஞ்சம் அதிகம் சாப்பிடுகிறார், அம்மா. வழக்கமாக, அனுப்புவதில் பாதி மீதி வரும். இப்போது முக்கால் பாகம் காலியாகி விடுகிறதே!" என்று சமையல்காரன் பாராட்டவும் உதயாவுக்குத் தரையில் கால் பரவவில்லை.

அன்று மாலை வந்த கணவனிடம், "இன்றையச் சாப்பாடு எப்படி இருந்தது?" என்று ஆவலுடன் விசாரித்தாள்.

வழக்கம் போலத் தோளைக் குலுக்கி, "யாருக்குத் தெரியும்?" என்றான் கணவன்.

திகைத்துப் போய், "கொ..கொஞ்ச நாட்களாக நீங்கள் நன்றாகச் சாப்பிடுவதாக சமையல்கார நாகராஜ் சொன்னான்... அதனால் தான்... வந்து... சமையல் பிடித்ததா... என்று..." என்று தடுமாறினாள் மனைவி.

"கொஞ்ச நாட்களாக நான் வீட்டுச் சாப்பாடு சாப்பிடவே இல்லையே. வெளி மாநிலத்திலிருந்து சில கஸ்டமர்ஸ் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களோடல்லவா சுற்றிக் கொண்டு இருக்கிறேன்!"

"பி...பின்னே உங்கள் சாப்பாடு?"

"அந்த வங்காளிகளோடு ஓட்டலில்."



மக் கடைக்காரர்கள் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளவும். உங்க தொழிலுக்கு இளமை சேர்க்க ஆக்ஷன் கிங் அர்ஜுன் முன்வந்து, 'சர் சர்' என்று மட அடிக்கிறார். அதனாலேயே ரோஜா உங்களைத் தேடி வந்து ஜோரா அசடுவழிவார் என்று நினைக்க வேண்டாம்! உயர் போலீஸ் அதிகாரி நாகேஷ் உதவியுடன் கொள்ளை அடித்து, தமிழ்நாட்டின் அத்தனை ஒயின் ஷாப்புகளையும் வளைத்துப் போட்டு கோடீசுவரனாகி விடலாமென்று எதிர்பார்ப்பையும் வளர விட வேண்டாம்! அதெல்லாம் உனுவாகட்டிக்கு – சினிமாவுல மட்டுமே நடக்கிறவை.

ஒரு படத்தில் அதிகபட்ச அடி, உதை, குத்து என்று கணக்கெடுத்தால் அர்ஜுனுக்கு நிச்சயம் கின்னஸ்ஸில் இடம் உண்டு. 'இம்மாதிரி வன்முறைக் காட்சிகள் குழந்தைகள் உள்ளங்களைக் கெடுக்கும்' என்று சத்தியம் பண்ணும் அசடுகளின் வாயை அடக்க, இந்தப் படத்தில் பேபி நிகிதா ஒரு வசனம் பேசுகிறாள் : "நீங்க ஃபைட் பண்ணுங்க அங்கிள்; நாங்க கைதட்றோம்." குழந்தையே அங்கீகாரம் அளித்த பிறகு, சென்சார் எதற்கு 'ஏ' சர்டிஃபிகேட் தரப் போகிறார்கள்? க்ளைமாக்ஸ் காட்சியில் ஒரு குழந்தையையே வில்லன் உயிரோடு எரிக்க முயன்றால்தான்



ஆயுத பூஜை

என்ன?
குழந்தைக் குலம் கண்டு களிப்பதாக! மேலும் கடைசி கடைசியாக, "ஆயுதங்களால் மனிதனை வெல்லலாம்; அன்பினால்தான் உள்ளங்களை வெல்ல முடியும்" என்று உபதேசத்தை எழுதிக் காட்டுறாங்களே; அதனால் அத்தனை வன்முறைக் காட்சிகளும் அப்படியே மறந்து போய், அன்பு நம் உள்ளங்களில் பொங்கத்தானே வேண்டும்!

முதல் மார்க் நிகிதாவுக்குத்தான். கன்னத்தைக் கிள்ளி முத்தமிடுவதா அல்லது தடவி திருஷ்டி சொடக்குவதா என்று நமக்கு ஒரு தவிப்பு.

ஆக்ஷன் கிங் மட்டுமல்ல, ஆக்டிங் கிங் கூடத்தான் என்று அர்ஜுனின் முகபாவங்கள் நிரூபிக்கின்றன. குறிப்பாக நிகிதாவின் கலருடன் அர்ஜுனின் B & W பாவங்களை அடுத்தடுத்துக் காட்டும் போது, நம்மீது பன்னீர் தெளிக்கிறார் காமிராமேன். அது சரி, ஸ்லோமோஷன் ரொமச்சாக தோன்றவில்லையா, மிஸ்டர் பன்னீர் செல்வம்? கிராமக் காட்சிகள் இதம்.

வில்லன், கையிழந்த நவீன நாகநந்தி (காப்பிரைட் உரிமை : "கல்கி") என்றாலும் அலட்டலில்லாத அந்த ரோலில், திலகன், வில்லன் திலகமாகிறார்.

காமெடி ட்ராக் தனியே இல்லாமல் ஹீரோவின் உடன்பிறவா சகோதரர் கவுண்டமணி கவனித்துக் கொள்கிறார். கலகலா.

நாகேஷ் நடிப்பு டாப். ஆனால் கதாபாத்திரம் - கேரக்டர் - பாட்டம்!

பாவாடை மடித்துப் பாண்டி ஆடும் ரோஜாவும் சரி; ஆடு வெட்டியதும் மயங்கி விழும் (நமக்கே மயக்கம் வருதே!) குடும்பப்பாங்கான ஊர்வசியும் சரி, கன கச்சிதம் - மத்தாப்பூவும் குத்துவிளக்கும் மாதிரி.



இசையும் நடனமும் இரட்டைத் தலைவலி தருவதே இன்றைய ஃபாஷன்.

ஃபாரின் பிக்சர் போல குண்டுவெடிப்பில் கார்கள் தூக்கி எறியப்படுகின்றன. ஒரே வித்தியாசம் : இங்கே காயலான் கடை கார்கள்!

சொதப்பலில்லாத ஃப்ளாஷ்பேக், சறுக்கலில்லாத டெம்போ இவற்றுக்கு அறிமுக டைரக்டர் - கதை வசனகர்த்தா சிவகுமார்- பாராட்டை எடிட்டருடன் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளவும். ஆயுத பூஜை என்ற புனிதச் சொல்லைக் கொச்சைப்படுத்தியதற்காக குட்டுப் பெறவும்.

படம் பார்த்து விட்டு வருவோர் உள்ளத்தில் மில்லியன் டாலர் கேள்வி : ஏழாவது எட்டாவது மச்சங்கள் எங்கே? தூக்கம் வராமல் தவிக்கிறாங்களாம்!

"ச்சு. அதைக் கேட்கவில்லை. வீட்டிலிருந்து தினம் அனுப்புகிற சாப்பாட்டை என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன்" என்று உள்ளூர ஆத்திரத்துடன் கேட்டாள் உதயரேகா.

ரொம்பவும் ஸ்டைலாகத் தோளைக் குலுக்கினான் அவன். "யார் கண்டது? ஆபீஸ் பையன் சாப்பிடுகிறான் என்று நினைக்கிறேன். அல்லது... அலுவலகத்தில் யாராவது உணவு கொண்டு வரவில்லை என்றால், அந்தச் சமயம் நான் வெளியே சென்று விட நேர்ந்தால், என் சாப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்து விடும்படி ஏற்கெனவே சொல்லி வைத்திருக்கிறேன். அப்படி யாராவது உண்டிருக்கலாம்" என்றான் அசட்டையாக.

உதயரேகாவுக்குக் குமுறிக் கொண்டு வந்தது. அதென்ன, வெறும் மசாலாவும் காய்கறி, பருப்புமா? அவள், அவளுடைய கணவனுக்காகப் பார்த்துப் பார்த்து, ஆசையும் பாசமும் கூடக் கலந்து செய்தனவாயிற்றே. அதை எல்லாம் யார் யாரோ சப்புக் கொட்டிச் சாப்பிடுவதா?

"அப்படி மதிய உணவுக்கு வெளியே செல்வது என்றால் வீட்டிற்குத் தகவல் சொல்லி விட்டுப் போயிருக்கலாமே!" என்றாள் அவள் எரிச்சலோடு.

அவன் கேள்வியாய் நோக்கவும், "உங்களுக்கென்று சமைத்து எடுத்து வைத்து அனுப்பி வீணாக்குவானேன்?" என்றாள்.

"வீணாவானேன்? அதை என்ன, குப்பையிலா கொட்டி விட்டார்கள்? ஏதோ ஒரு பசித்த வயிற்றுக்குத்தானே போகிறது?" என்றான் அவன் சற்றுக் கடினமான குரலில், கண்டிப்பது போல.

தலையைச் சிலுப்பி, "உங்களுக்காகவே என்று சமைத்ததை நீங்கள் சாப்பிடவில்லை என்றால் அது வீண்தான்" என்றாள் அவளும் குரலில் அழுத்தத்துடன்.

"எனக்காகவே என்று சமைத்ததா? பின்னே வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் என்ன சாப்பிடுகிறீர்கள்? உங்களுக்காக நாகராஜ் எதையும் சமைப்பது இல்லையா? அதென்ன அப்படி ஒரு திமிர்? கூப்பிடு அவனை... பையா..."

அதட்டியவாறு கிருஷ்ணசந்திரன் எழவும் அவன் மனைவி அவசரமாகக் குறுக்கிட்டாள். "ப்ளீஸ், நான் சொல்வதை முதலில் கேட்டு விடுங்கள். நாகராஜ் எல்லோருக்கும் சேர்த்துத்தான் சமையல் செய்கிறான். அவன் மேல் ஒரு தப்பும் இல்லை."

"பின்னே?"

"என்ன பின்னே? உங்களுக்கு என்று தனியே செய்தது நான்தான். உங்களுக்குப் பிடித்தது என்னென்ன என்று அத்தையிடம் கேட்டுத் தயாரித்து அனுப்பினேன். அவ்வளவுதான் விஷயம்" என்று எரிச்சலோடு போட்டு உடைத்தாள்.

அவள் கற்பனை செய்து வைத்திருந்த காட்சியே வேறு.


'கொஞ்ச நாட்களாகச் சாப்பாடு வெகு ருசியாக இருக்கிறது' என்று கிருஷ்ணசந்திரன், சமையல்காரனைப் பாராட்டுவான்; அசடு வழிய, 'அம்மாதாங்க செய்தாங்க' என்று நாகராஜன் உண்மை கூறுவான்; உடனே கிருஷ்ண சந்திரன், நமக்காக நம் மனைவி இவ்வளவு செய்கிறாளே என்று ஆசையும் அன்புமாக – ஆசையாக இல்லாவிட்டாலும், பெருமையாக வேனும் நோக்குவான் என்று நினைத்திருந்தாள். ஆனால் அவள் முயன்று செய்ததெல்லாம் கணவன் ஒரு சொட்டு சுவை கூடப் பார்க்கவில்லையே! எல்லாம் வீண்!

ஆனால் இன்னும் கூட முயன்று பார்க்கலாமோ?

ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்தாள் அவள்.

அவன் தன் வழக்கமான, உணர்ச்சி துடைத்த முகத்துடன் அமர்ந்திருந்தான்.

"வந்து... நாளைக்கு மதியம் வீட்டுச் சாப்பாடு சாப்பிடுகிறீர்களா? அல்லது இரவுக்கு..." என்று அவள் தொடங்கவும் "வேண்டாம், உதயரேகா. விட்டு விடு" என்றான் அவன் மெதுவாக.



"இதயத்தைக் கைப்பற்ற இப்படி ஒரு வழி இருப்பதாக என் அம்மாவோ, உன் சித்தியோ உனக்குக் கூறியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் என் விஷயத்தில் இது சற்றும் பயனற்றது உதயரேகா. எனவே அனாவசியமாய், இந்த எண்ணெய்க் கத்தரிக்காய், தக்காளிக் குழம்பு, நவரத்தினக் குருமா, புதினா சாதம் என்று ஏதாவது செய்து அனுப்புவதை இத்தோடு நிறுத்தி விடு" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே உதயாவின் கண்கள் அகன்றன.

வியப்பும் மகிழ்ச்சியும் விழிகளில் பரவ, "அதை எல்லாம் நீங்கள்... நீங்கள்தான் சாப்பிட்டிருக்கிறீர்கள்! அப்படித்தானே?" என்று உற்சாகத்துடன் வினவியவள், உடனேயே, "நன்றாக இருந்ததா? உங்களுக்குப் பிடித்ததா?" என்று ஆவலாகக் கேட்டாள்.

சிறு அமைதியின் பின், "எல்லாமே சுவையாகத்தான் இருந்தன, உதயரேகா. ஆனால் நான் சொல்லுவதைச் சற்றுக் கவனி. என்னைப் பொறுத்த வரையில் என் இதயத்துக்கும் வயிற்றுக்கும் பாலம் எதுவும் கிடையாது. இந்த மாதிரி... ஏன், எந்த வழியிலுமே நீ என்னை அணுக முடியாது. எனவே இதுபோன்ற வீண் முயற்சிகளில் இறங்கி அனாவசியமாக உடம்பை வருத்திக் கொள்ள வேண்டாம்" என்று நிதானமாக, ஒரு புரியாத குழந்தைக்கு விளக்குவது போல அமர்ந்த குரலில் உரைத்தான் கிருஷ்ணசந்திரன்.

மெய்யாகவே அவளுக்குப் புரியவில்லைதான். ஆனால், இப்போது இது பற்றிய பேச்சைத் தொடர்ந்து அவனது பிடிவாதத்தை உறுதிப்படுத்த வேண்டாம் என்று தீர்மானித்து, "இப்போது, இரவு உணவு எடுத்து வைக்கச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

அவள் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே, கிருஷ்ணசந்திரன் சட்டென எழுந்தான். "எனக்கு வேண்டாம்" என்று தெளிவற்ற குரலில் உரைத்து விட்டு, அவனது அறையை நோக்கி வேகமாகச் சென்று உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

இதன் காரணம் தெரியாமல் விழித்தவளுக்கு, அவனது நடையின் தடுமாற்றம் மேலும் திகைப்பூட்டியது.

சற்றுமுன் சும்மாதானே பேசிக் கொண்டு இருந்தான்? இப்போது ஏன் குடிகாரன் போலத் தள்ளாடுகிறான்?

என்னவோ அவளை உறுத்தியது.

ஏதோ தெரிந்த விஷயம்; தெரிந்திருக்க வேண்டிய ஒன்று என்கிற அளவில் உணர முடிந்தது.

ஆனால், எவ்வளவுதான் யோசித்தும், அது என்னவென்பது அவளுக்கு அன்று சற்றும் நினைவு வரவே இல்லை.

(தொடரும்)



ஒளிவீசும் கதைகள்!

"ஆஹா! எவ்வளவு அனுபவிச்சுப் பாடறார்..." என்று கச்சேரிகள் பற்றி கமெண்ட் செய்யக் கேட்டிருக்கிறோம்.

இன்றைய இசைக் கலைஞரே இவ்வளவு அனுபவித்து ஒரு பாட்டைப் பாட வேண்டுமானால், அதை முதன் முதலாக இயற்றிப் பாடிய மேதை எவ்வளவு ஆழமான அனுபவங்களில் திளைத்திருப்பார்....!

அத்தகைய அனுபவங்களின் தொகுப்புத்தான் ஸ்வாமிநாத ஆத்ரேயன் எழுதியிருக்கும் புத்தகம்.

- தியாகராஜ சுவாமிகள் பாடிய பன்னிரண்டு கீர்த்தனைகளின் பின்னணிக் கதையினூடே, அவை ஒவ்வொன்றையும் இயற்றும் அனுபவத்தினால் அவர் எப்படி புடம்போடப்பட்டுப் பிரகாசித்தார் என்று சொல்லும் உண்மைக் கதைகள்.

இசையுணர்வும் பக்தியும் உள்ளவர்கள் மட்டுமே படித்து ரசிக்க முடியும் என்றில்லாமல், மிகைப்படுத்தப்படாத மனித நேயப் பண்பு ஒளிவீசும் தரமான இலக்கியப் படைப்புகளாக ஒளிர்கின்றன இந்தக் கதைகள்.

ஸ்ரீ தியாகராஜ அநுபவங்கள் - வெளியீடு : வானதி பதிப்பகம், சென்னை - 17, விலை ரூ. 15.

— மலர்



(படம் : நன்றி : சண்டே)



"நள்ளிரவு, போலீஸ் வந்தது மாட்டிக் கொண்டேன்!"

— சுஷ்மிதா சென்

பரிசுத் தொகை 2,50,000 டாலர். கொத்து கொத்தாக நகைகள், மேக்-அப் சாதனங்கள், ஏராள உடைகள், உல்லாசங்கள், விழாக்கள் இவற்றுடன் மிஸ் யூனிவர்ஸ் பட்டத்தரசியான சுஷ்மிதா சென் தம் ஓராண்டு 'பட்டப் பொறுப்பை'க் கழித்துவிட்டார். அடுத்த மிஸ் யூனிவர்ஸ் பக்கம் மக்களின் கவனம் திரும்ப, ஹாலிவுட்டில் நடிக்கலாமா, மாடலிங் போதுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் சுஷ்மிதா சென்.

சமீபத்தில் அவர் பேசியது இது :

"நான் ஒரு முடிவு செய்து விட்டேன். பேசாமல் அமெரிக்கா போய் செட்டில் ஆகிவிடப்போகிறேன். இந்தியா எனக்குச் சரிப்பட்டு வரவில்லை. ரொம்ப அசௌகரியமாக இருக்கிறது. பத்திரிகைகளும் டி.விக்களும் பொது மக்களும் எப்போதும் என்னையே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பற்றியே பேச்சு! என்னைப் பற்றிய வருணனைகளே எப்போதும்! என் ஒவ்வொரு அசைவையும் விமர்ச்சிக்கிறார்கள். தாங்க முடியவில்லை என்னால்.

"பம்பாயில், நண்பர்களுடன் ஒருநாள் 'டிஸ்கொத்தே' நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். (நைட் கிளப் டான்ஸ்) நள்ளிரவில் திடீரென்று 'போலீஸ் வருகிறது' என்று தகவல் வந்தது.

"என் நண்பர்கள், 'நீ உலக அழகி. உன்னைப் போலீஸ் ஒன்றும் செய்யாது. நாங்கள்தான் பிடிபடுவோம்' என்றார்கள்.

"எனக்குக் கோபம் வந்து விட்டது. எது நடந்தாலும் நண்பர்களுடனேயே அதைச் சந்திப்பது என்று முடிவு செய்து கொண்டேன். அவர்களிடமும் கூறினேன்...

"அன்று இரவு எங்கள் எல்லோரையும் கைது செய்தார்கள். மறுநாள் நியூஸ் பேப்பர் திறந்தால் 'மிஸ் யூனிவர்ஸ் - ஜெயிலில்' என்பதுதான் தலைப்புச் செய்தி! ஏன்தான் இப்படி இருக்கிறார்களோ!"

— கலா (ASIDE விருந்து)

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி விதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்



அமுத சுரபி டிபாசிட் திட்டம்

டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000



கல்பதரு மணிபேக் திட்டம்

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன் — நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும் — **வட்டி விகிதம் ரூ.1.95**

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka .